விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 27 சனிக்கிழமை (11.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 082

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## இலங்கைக்கு கால அவகாசம் கிடைத்தவுடன்
## தீர்வும் இல்லை; நீதியும் இல்லை
### ஏமாற்றமே இருக்கப்போகின்றது-தமிழ் சிவில் சமூகம்




23ஆம் பக்கம் பார்க்க...

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வவுனியாவில் இன்று ஒன்றுகூடல்

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின அவசர ஒன்று கூடல் இன்று சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு வவுனியாவில் உள்ள விடுதி ஒன்றில் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 34ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் இடம்

23ஆம் பக்கம் பார்க்க...

## கனடாவிலிருந்து தாயகம் வந்த குடும்ப பெண் விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

கனடா நாட்டில் இருந்து உறவினர்களை பார்ப்பதற்கென தாயகம் வந்த குடும்பப்பெண் ஒருவர் நேற்றைய தினம் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

புளியங்கூடல் ஊர்காவற்றுறை பகுதியினை சேர்ந்த இருபிள்ளைகளின் தாயான விஜயரூபன் சர்மிளா (வயது 37) என்ற தாயே இவ்வாறு

24ஆம் பக்கம் பார்க்க...

**ஐ.நாவில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்க**

# சின்னம்மாவின் பாணியில் கையெழுத்து பெற திட்டம்

## கூட்டமைப்பின் தலைமை சதி-உறுப்பினர்கள் சீற்றம்

(வவுனியா)

வவுனியாவில் இன்று நடைபெறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் தமிழகத்தின் சின்னம்மா சசிகலாவின் பாணியில் உறுப்பினர்களிடம் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாக கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பலரும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

04ஆம் பக்கம் பார்க்க...

## வடக்கில் 549 பேருக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனம்
### நியமனம் பெறுவோரின் விபரங்கள் உள்ளே

07ஆம் பக்கம் பார்க்க...

## இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது
## ஐ.நாவுக்கான மகஜருக்கு ஆதரவு பெருகிறது

(யாழ்ப்பாணம்)

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை மீதான ஜெனிவா தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு கால அவகாசத்தை சர்வதேச நாடுகள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இலங்கை அரசால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை அரசுக்கு இவ்விடயத்தில் மேலும் கால அவகாசத்தை வழங்கக்கூடாது என கோரி தமிழர் நலன்சார்ந்த சிவில் சமூக அமைப்புக்கள் பல ஒன்றிணைந்து ஐ.நா சபைக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளன.

இம்மகஜரில் இரு நாட்களுக்குள் இதுவரை பல நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் பொது அமைப்புக்கள், மதத் தலைவர்கள், மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவ அமைப்புக்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அர

24ஆம் பக்கம் பார்க்க...

## சிறுவன் ஒருவன் சடலமாக மீட்பு

(கரணவாய்)

தூக்கில் தொங்கி இறந்ததாக தெரிவித்து சிறுவன் ஒருவனது சடலம் நேற்று மதியம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலை வடக்கைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் வீட்டில் யாரும் இல்லாத போது சுருக்கிட்டு கொண்டதாக முதற்கட்ட விசாரணையில்

24ஆம் பக்கம் பார்க்க...

## பட்டதாரிகளின் பிரதிநிதிகள் பிரதமருடன் நேற்று சந்திப்பு
### 3 வாரத்திற்குள் முதற்கட்ட நியமனம் உறுதி



24ஆம் பக்கம் பார்க்க...

## மனித உரிமைகளை காப்பதே நீதிமன்றங்களின் குறிக்கோள்
### புதிய பிரதம நீதியரசர் டெப் தெரிவிப்பு

(கொழும்பு)



மக்களின் மனித உரிமைகளை காப்பதே நீதிமன்றங்களின் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டுமென்று இலங்கையின் புதிய பிரதம நீதியரசர் நீதிபதி ப்ரியசாத் டெப் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 45ஆவது பிரதம நீதியரசராக அண்மையில் நியமிக்கப்பட்ட ப்ரியசாத் டெப் நேற்று

24ஆம் பக்கம் பார்க்க...

## திரையரங்கில் குழு மோதல்; காவலாளி, பொலிஸ் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரில் உள்ள திரையரங்கு ஒன்றில் நேற்றையதினம் இடம்பெற்ற குழு மோதலில் பொலிஸார் மற்றும் காவலாளி ஆகியோர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.நகரில் உள்ள திரையரங்குக்கு நேற்றைய தினம் 3 பேர் அடங்கிய குழுவினர் திரைப்படம்

04ஆம் பக்கம் பார்க்க...

## தமிழக மீனவர்கள் 53 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்படையினரால் வெவ்வேறு காலங்களில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 53 பேரை விடுதலை செய்ய யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்

24ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# திருமலையில் டெங்கு தாக்கம்; பெண்ணொருவர் நேற்று மரணம்

## உயிரிழப்பு ஆறாக உயர்வு

(கிண்ணியா)

திருகோணமலையில் டெங்கு காய்ச்சலின தாக்கம் பெருமளவில் அதிகரித்து வரும் நிலையில் கிண்ணியாவைச் சேர்ந்த பெண்ணொருவர் நேற்று திருகோணமலை அரசினர் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். இந்த நிலையில் கிண்ணியா பிரதேசத்தில் டெங்குநோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளது.

கிண்ணியா மாஞ்சோலைச்சேனையைச் சேர்ந்த ரியாத் நஸீபா என்பவரே நேற்று அதிகாலை டெங்கு நோயின் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில் டெங்கு தாக்கம் பாடசாலை மாணவர் மத்தியில் அதிகரித்து வரும் வேளை தனியார் கல்வி நிலையங்களில் பிரத்தியேக கல்வி வகுப்புகளும் தற்காலிகமாக இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சுகாதாரப் பகுதியினர் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து திருகோணமலை நகரம் கிண்ணியா மற்றும் அதனை அடுத்துள்ள பகுதிகளில் வீதியோர வடிகான்கள் மற்றும் வீடு வீடாகவும் சென்று கொசு பரவும் சூழல் உள்ளதா என கண்காணித்து வருகின்றனர்.

கொசு பரவும் சூழல் காணப்படும் வீட்டு உரிமையாளர்கள் தனியார் நிறுவங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஏனையோர் வசிக்கும் இடங்களில் கொசு பரவும் சூழல் காணப்படின் சம்பந்தப்பட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இதேவேளை திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் தினமும் அதிக அளவிலான டெங்கு நோயாளிகள் சிகிச்சைக்கென வரும் நிலையில் இதற்கான உதவிகளை தனியார் நிறுவனங்கள் ஆலய நிர்வாகங்கள் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களிடமிருந்தும் பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளப்போவதாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் அனுஷியா ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான வீதி நாடகங்களை நடத்தவும் அங்கு ஏற்பாடுகள் மேற்கொளெப்பட்டு வருகின்றன. (செ-11)

# நாடு திரும்பிய குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

டோகாவில் இருந்து நாடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் கொழும்பு கோட்டை மலசலகூடம் ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பாலாவி வீதி, பொலிகண்டி கிழக்கை சேர்ந்த கதிரமலை மகேந்திரராசா (வயது 34) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 17-ம் திகதி டோகாவிலிருந்து நாடு திரும்பும் போது மனைவியை கொழும்புக்கு அழைத்து அவரிடம் கொண்டு வந்த பொருட்களை கொடுத்து புகையிரத்தில் பயணிக்க விட்டு விட்டு தான் பஸ்சில் வருவதாக கூறிவிட்டு கொழும்பு கோட்டை பகுதியில் நின்றுள்ளார்.

இந்நிலையில் மறுநாள் 8-ம் திகதி அங்குள்ள மலசலகூடம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, வல்வெட்டித்துறை பொலிஸார் மூலம் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-60)


**பண்ணை உதவியாளர்கள் தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் பண்ணை ஒன்றிற்கு உதவியாளர்கள் தேவை. மேற்படி பண்ணைக்கு மாடு வளர்ப்பில் அனுபவமுள்ள 40 வயதிற்கு மேற்பட்ட ஆண் உதவியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. தங்குமிட வசதியுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு :

076 918 6603, 021 228 0007

(சீ-7777)

**மனதில் சுமையா?**

வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

*உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.*

கை கொடுக்கும் நண்பர்கள்

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை

021 222 8117, 077 900 8776

(தினமும் காலை 9.00 - 1.00)

வவனியாவில்: (024) 324 4444

(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

(சீ-7775)

**நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை**

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

077 784 1558

(8168)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி நுணாவிலில் மட்டுவில் நுணாவில் எல்லை வீதியில் (ராசா கடை எதிர்ப்பக்க வீதி) A-9 வீதியில் இருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள 3 பரப்பு காணியில் 90% கட்டி முடிக்கப்பட்ட குழாய்க் கிணற்றுடன்கூடிய காணி உடன்விற்பனைக்கு உள்ளது. வீடு 37X22 அடியும் தெற்கு வாசலும் உடையது. விருப்பமுள்ளோர் மட்டும் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை.

உடன் தொடர்பு கொள்ளவும்.
ராஜன்-072 922 9424.

(சீ-7760)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் தட்டச்சு சுருக்கெழுத்து மற்றும் கணனியில் தேசிய சான்றிதழ் கற்கைநெறியை பூர்த்தி செய்து நீதிமன்றங்களுக்கான சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று 01.03.2017 அன்று சுருக்கெழுத்து தட்டெழுத்தாளராக நீதிமன்றங்களில் நியமனங்களை பெற்றுக் கொண்டவர்களான K.அனுஷா, U.டிஷானி, N.ஜெனிதா, K.கஸ்தூரி, A.மரியா ஜெனிற்றா, S.மேகலா, S.நிலானி, P.நிறஞ்சனா, S.சஞ்சுதா, U.சுகிர்தா, N.தனுஜா, S.தனுசிஜா, S.திலக்சி, S.வானதி, R.வேணுகா, S.யாழினி, P.காயத்திரி, R.பேரின்பமலர் ஆகியோரை பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களை பயிற்றுவித்த செல்வி S.சத்தியபாமா மற்றும் விரிவுரையாளர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*

யாழ்.பல்தொழில்நுட்ப நிறுவன ஊழியர்
சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம்,
தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(8172)

# மரண அறிவித்தல்

## அமரர்

## அருமைத்துரை இராமச்சந்திரன்



மலர்வு : 02.03.1962 - உதிர்வு : 08.03.2017

சுதுமலை தெற்கு சாவல்கட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் அருமைத்துரை இராமச்சந்திரன் அவர்கள் கடந்த (08.03.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அருமைத்துரை - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மகனும், அமரர் சுந்தரலிங்கம் - ஆரியப்பூமாலை தம்பதியரின் அன்பு மருமகனும், அம்மன்கிளி (வேவி) அவர்களின் பாசமிகு கணவரும், மணிவண்ணன் (கனடா), ஜனா (இந்தியா), கேதீஸ்வரன், றூபா, பேபிசாளினி ஆகியோரது பாசமிகு தந்தையாரும், நந்தகுமார் (இந்தியா), இதயராஜ், இராஜதீபன், கார்த்திகா (BA) ஆகியோரது அன்பு மாமனாரும், கவிஷா, பிரணவி ஆகியோரது செல்லப்பேரனும், அமரர் ரவிச்சந்திரன், அமரர் வேல், அமரர் சாந்திமலர், பாலச்சந்திரன், வசந்தி, சறோசா, பராசக்தி, ஜெயச்சந்திரன், சந்திரகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரது அன்புச் சகோதரனும், அமரர் தங்கதிரவியம், அமரர் குமரகுலசிங்கம், உதயசூரியன், நாகராசா (லண்டன்), சுரேஷ், செல்லக்குமார், சுதன் (பிரான்ஸ்), சுகன் (பிரான்ஸ்), சுதாகரன், ராணி (சுவிஸ்) ஆகியோரது அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2017) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுதுமலை தெற்கு,
சாவல்கட்டு.

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே : 077 371 3260

(8169)

# பிணைமுறி விவகாரம்; நான்கு மணித்தியாலங்கள் அர்ஜூன மகேந்திரனிடம் தீவிர விசாரணை

(கொழும்பு)

பிணை முறி விவகாரம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன மகேந்திரன் நேற்று வாக்குமூலம் அளித்தார். குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை நான்கு மணித்தியாலங்களுக்கு மேலாக நீடித்தது.



இதேவேளை கடந்த மூன்றுவாரங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகள் அடுத்த மாதமளவில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் ஜனாதிபதிஆணைக்குழுவின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாமிடம் சாட்சியங்களை பதிவு செய்வதற்கு முன்னர் நேற்று குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் அர்ஜூன மகேந்திரன் சாட்சியமளித்துள்ளார்.

இதுவே பிணை முறி விவகாரம் தொடர்பில் அவர் அளிக்கும் முதலாவது சாட்சியமாகும்.

ஏற்கனவே மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, பொதுக்கடன் நிதியத்தின் பிரதான அத்தியட்சகர்கள் மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் என்போர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த விசாரணை அறிக்கைகளை ஜனாதிபதியிடம் அடுத்த மாதமளவில் ஒப்படைக்கமுடியும் என பிணை முறி தொடர்பாக ஆராயும் விசாரணை ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பசிலுக்கு எதிராக குற்றப்பத்திரம்



முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோருக்கு எதிராக, கம்பஹா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மல்வானை பகுதியிலுள்ள 16 ஏக்கர் நிலத்தை கொள்வனவு செய்தமை தொடர்பில், பணச்சலவை சட்டத்தின் கீழேயே, இவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-7)

## சிறிய பிரச்சினையை பெரிதுபடுத்துகின்றனர் தமிழக அரசியல்வாதிகள் மீது நாமல் விசனம்

(கொழும்பு)

இந்திய மீனவர் ஒருவரை கடற்படையினர் சுட்டுக்கொலை செய்த விவகாரம் கடந்த சில நாட்களாக பல சர்ச்சைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.


இந்த நிலையில்,இந்த பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இந்திய ஊடகம் ஒன்றுக்கு பிரத்தியேக பேட்டி ஒன்றை வழங்கியுள்ளார்.

குறித்த பேட்டியின் போது,

கேள்வி - இலங்கை கடற்படையினர் இந்திய மீனவரை சுட்டுக் கொலை செய்துள்ளனர்... இது நியா யமா? இது தொடர்பில் நீங்கள் என்ன கூறவிரும்புகின்றீர்கள்?

பதில்(நாமல்)- இலங்கை கடற்படையினரிடம் விசாரணை மேற்கொண்ட போது தாங்கள் சுடவில்லை என்றே அவர்கள் கூறியுள்ளனர். கடந்த சில நாட்களாகவே இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன.

தமிழக மீனவரை இலங்கை கடற்படையினர் சுட்டதாகஆதாரம் எதுவும் இல்லை.



இருப்பினும்,இலங்கை அரசாங்கம் இது தொடர்பில் தீவிர விசாரணையை ஆரம்பித்துஉண்மையை கண்டறியும் என தான் நம்புவதாக நாமல் தெரிவித்தார்.

கேள்வி- தமிழக அரசியல்வாதிகள் இந்த விவகாரத்தில் அரசியல் ஆதாயம் தேடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என டுவிட்டரில் பதிவிட்டுள்ளீர்கள்? யாரைப் பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள்?

பதில்(நாமல்)- கடந்த சில வருடங்களாகவே இலங்கையில் ஒரு சிறிய பிரச்சினை ஏற்பட்டாலும் தமிழக அரசியல்வாதிகள் அதனை பெரிதுபடுத்துகின்றார்கள்.

நான் யாரையும் எந்தவொரு கட்சியையும் குறிப்பிட்டு கூற விரும்பவில்லை. இந்தப் போக்கினால் தமிழ்நாட்டு மக்களுக்கோ இலங்கை மக்களுக்கோ எந்த நன்மையும்கிடைக்கப்பெற போவதில்லை என நாமல் தெரிவித்துள்ளார்.

கேள்வி- இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்பதன் மூலம் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் என நம்புகின்றீர்களா?

மீனவர் பிரச்சினை, கச்சதீவு பிரச்சினை இவை இரண்டும் வெவ்வேறு பிரச்சினைகள்...கச்சதீவை மீட்பதன் மூலம் மீனவர் பிரச்சினை தீராது என்பது எனது கருத்து.

இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையை தீர்க்க வேண்டும். மீன்பிடியில் புதிய தொழில்நுட்பத்தை மீனவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

## 100 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

முகத்துவாரம், கல்பள்ளிய பிரதேசத்தில் 100 இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரபல போதைப்பொருள் வியாபாரியான கிம்புலா எலே குணா என்பவரின் உறவினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை, கொழும்பு போதைப்பொருள் ஒழிப்பு அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

## கொழும்பு நீதிமன்றில் இரு பெண்கள் கைது

தொலைபேசி மற்றும் போதைப்பொருட்களை வைத்திருந்த இரு பெண்கள் கொழும்பு நீதிமன்றத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் குறித்த பெண்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக, நீதிமன்ற வளாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 10 இலட்சம் ரூபா பெறுமதியான பாவனைக்குதவாத அரிசியை விற்பனை செய்த நபர் கைது

(கொழும்பு)

கொழும்பு 12இல் அமைந்துள்ள மொத்த வியாபார நிலையத்தில் ரூபா 10 இலட்சம் பெறுமதியான பாவனைக்குதவாத கீரி சம்பா அரிசியை விற்பனை செய்த வர்த்தகர் ஒருவர் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீனின் பணிப்புரையின் பேரில் கொழும்பில் வியாபார நிலையங்களில் இச்சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த வியாபார நிலையத்தை சுற்றிவளைத்த விசாரணை அதிகாரிகள் பாவனைக்குதவாத 25 கிலோ கிராம் கொண்ட 313 சாக்குகளை கைப்பற்றியிருந்தனர்.

குறித்த தொகையான அரிசி 10 கிலோ கிராம், 5 கிலோ கிராம் அளவு கொண்ட சாக்குகளில் அடைக்கப்பட்டிருந்ததையும் அவர்கள் கண்டுபிடித்தனர்.

இந்த சட்ட விரோத செயற்பாட்டில் ஈடுபட்ட குறித்த வர்த்தகர் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாளிகாகந்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

பாவனைக்குதவாத பொருட்களையும், காலாவதியாகிய பண்டங்களையும் விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு, எதிராக எந்தவித பாரபட்சமுமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் றிசாத் பதியுதீன் அதிகார சபைக்கு உத்தரவிட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் ஹஸித திலகரத்ன தெரிவித்தார். (இ-7)

## அச்சுறுத்தல் இருந்தால் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

“ஐ.தே.க எம்.பியான எஸ். எம். மரிக்காருக்கு, பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்குமாயின், அதனை ஆராய்ந்து பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்று, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், “அரசியல் கட்சிகளின் தொகுதி அமைப்பாளர்களுக்கு, பொலிஸ் அல்லது இராணுவத்தின் பாதுகாப்பு வழங்கப்படுகின்றதா” என, மரிக்கார் எம்.பி கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார். (இ-7)

## நுழைந்த வழி தவறு

“ஒன்றிணைந்த எதிரணியின் தலைவரான தினேஷ் குணவர்த்தன எம்.பியை, அழைத்துச் செல்வதற்காக பொலிஸார், சபைக்குள் கடந்த புதன்கிழமையன்று நுழைந்த வழி தவறானது” என்று, வாசுதேவ நாணயக்கார எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய வாசுதேவ எம்.பி, “உறுப்பினர்கள், சபைக்குள் நுழையும் கதவுகளின் ஊடாகவே, பொலிஸார் அவைக்குள் பிரவேசித்தனர். இது தவறானது. பிரதான நுழைவாயிலின் ஊடாகவே, பொலிஸார் வந்திருக்கவேண்டும்” என்று தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த சபாநாயகர், “ சபைக்குள், பொலிஸார் எவ்வாறு நுழைந்தனர் என்பதைத் தேடிப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார். (இ-7)

## வடக்கின் கிரிக்கெட் போர்

# யாழ்.மத்திய கல்லூரியை வீழ்த்தி சென்.ஜோன்ஸ் அபார வெற்றி





கபில்ராஜ்சின் அபாரமான பந்து வீச்சின் மூலம் வடக்கின் மாபெரும் கிரிக்கெட் போரில் யாழ். மத்திய கல்லூரியை இனிங்ஸ் மற்றும் 7 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி.

வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கிடையிலான 111ஆவது கிரிக்கெட் துடுப்பாட்டப் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.



நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் 114 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்திருந்த சென்.ஜோன்ஸ் கல்லூரி நேற்று காலை தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது.



நேற்று முன்தினம் ஆட்டமிழக்காமல் இருந்த ஜெனிபிளமின் மற்றும் யதுசன் ஆகியோர் களமிறங்கினர்.

ஜெனிபிளமின் 37 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை நிக்ஷனின் பந்து வீச்சில் ஜெய்டர்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய யதுசன் 70 ஓட்டங்களைப் பெற்று மதுசனின் பந்து வீச்சில் சஜீபனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். கபில்ராஜ் 14 ஓட்டங்களில் கார்த்தீபனின் பந்து வீச்சில் பிரியலக்ஷனிடம் பிடிகொடுத்தும் அபினாஸ் 6 ஓட்டங்களுடன் தசோபனின் பந்து வீச்சில் வோல்ட் முறையிலும் சரோன்லியோனி 1 ஓட்டத்துடன் மதுசனின் பந்து வீச்சில் பிரியலக்ஷனிடம் பிடிகொடுத்தும் ஆட்டமிழந்தனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்சில் 76.3 ஓவர்களில் 253 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.










89 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சிற்காக களமிறங்கிய யாழ்.மத்திய கல்லூரி அணி ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக ஜெயதர்சன் மற்றும் பிரியலக்ஷன் களமிறங்கினர். ஜெயதர்சன் 9 ஓட்டங்களுடன் அபினாஸின் பந்து வீச்சில் ஜெனிபிளெமினிடம் பிடிகொடுத்தும் பிரியலக்ஷன் 12 ஓட்டங்களுடன் கபில்ராஜ்சின் பந்து வீச்சில் ஜெனிபிளெமினிடம் பிடிகொடுத்தும் கௌதமன் 3 ஓட்டங்களுடன் கபில்ராஜ்சின் பந்து வீச்சில் யதுசனிடம் பிடிகொடுத்தும் நிக்ஷன் ஓட்டம் எதனையும் எடுக்காமல் கபில்ராஜ்சின் பந்து வீச்சில் வோல்ட் முறையிலும் யரோசன் 11 ஓட்டங்களுடன் கபில்ராஜ்சின் பந்து வீச்சில் எல்.பி. டபிள்யூ முறையிலும் கார்த்தீபன் 8 ஓட்டங்களுடன் கபில்ராஜ்சின் பந்து வீச்சில் தேவபிரசாந்திடம் பிடிகொடுத்தும் சஜீபன் 2 ஓட்டங்களுடன் கபில்ராஜ்சின் பந்துவீச்சில் கோட்டன் வோல் முறையிலும் தசோபன் 6 ஓட்டங்களுடன் அபினாசின் பந்து வீச்சில் யதுசனிடம் பிடிகொடுத்தும் மதுசன் 18 ஓட்டங்களுடன் யதுசனின் பந்து வீச்சில் ஜெனிபிளெமினிடம் பிடிகொடுத்தும் கோமேதகன் 5 ஓட்டங்களுடன் யதுசனின் பந்து வீச்சில் தேவபிரசாத்திடம் பிடிகொடுத்தும் ஆட்டமிழந்தனர். இதனால் யாழ். மத்திய கல்லூரி 39.4 ஓவரில் 82 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து இன்னிங்ஸ் மற்றும் 7 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக கபில்ராஜ் 15 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் யதுசன், அபினாஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாகவும் சிறந்த பந்து வீச்சாளராக சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கே.கபில்ராஜ்சிம் சிறந்த களத்தடுப்பாளராக சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜெனிபிளெமினும், சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த யதுசனும், சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக யாழ்.மத்திய கல்லூரியை சேர்ந்த தசோபனும், சிறந்த இலக்குக் காப்பாளராக சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த வினோத்தும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

### சின்னம்மாவின் பாணியில் ...

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் ஐ.நா தீர்மானத்தை நிறைவேற்றும் பொருட்டு இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்குவதற்கு ஆதரவு திரட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை திட்டம் தீட்டியுள்ளதாம்.

இதற்காக வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களை இன்றைய கூட்டத்திற்கு அழைத்து கால அவகாசம் வழங்கப்படுவதற்கு ஆதரவாக அவர்களிடம் கையெழுத்து வாங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கசியத்தொடங்கியுள்ளன.

இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்குவது தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதை தடுப்பதாகும் என்று கொதித்தெழுந்துள்ள கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பலரும்,

இன்று வவுனியாவில் நடக்கும், கூட்டம், தமிழகத்தின் சின்னம்மா சசிகலாவின் பாணியில் உறுப்பினர்களிடம் கையெழுத்துப் பெறுவதற்கானது என்று கூறியுள்ளனர்.

தமிழினத்திற்கு துரோகம் செய்யும் எந்த சதித்திட்டத்திற்கும் நாங்கள் ஆதரவு தெரிவிக்கப்போவதில்லை என உறுதிப்படக்கூறியுள்ள கூட்டமைப்பின் உறுப்பினர்கள்,

2015 இல் இலங்கை அரசுக்கு ஐ.நா விதித்த தீர்மாணங்களை கால அவகாசம் எடுக்காமல் இலங்கை அரசு அப்படியே அமுல்படுத்த வேண்டும் எனவும் இதற்கு ஐ.நா கால அவகாசம் கொடுக்கக்கூடாது எனவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இரண்டு வருட கால அவகாசம் கொடுப்பதை ஆதரிப்பது தமிழ் மக்களுக்கு நாம் செய்யும் அநியாயம் என்பதை கூட்டமைப்பின் தலைமைக்கு எடுத்துரைக்க உள்ளதாகவும் உறுப்பினர்கள் மேலும் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்பதை கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தரும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் நியாயப்படுத்தி வருவது இங்கு கவனிக்கத்தக்கது. (செ)

### திரையரங்கில் குழு ...

பார்ப்பதற்கு வந்துள்ளனர். அப்போது திரைப்படம் பார்ப்பதற்கான நுழைவுச்சீட்டுகள் பெறுவதற்கு வந்தவேளை, திரைப்படம் ஆரம்பித்து விட்டதாகவும் நுழைவுச்சீட்டுகள் பெற முடியாது எனவும் அங்குள்ள காவலாளி தெரிவித்துள்ளார்

அப்போது காவலாளிக்கும் அங்கு வந்த இளைஞர் குழுவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியுள்ளது.

அதில் காவலாளியும் ஒரு இளைஞனும் படுகாயமடைந்துள்ளார். குறித்த இளைஞருடன் வந்த ஏனைய இரு இளைஞர்கள் தப்பி ஒடியுள்ளனர் படுகாயமடைந்தவரை அங்குள்ளவர்கள்

பிடித்து வைத்து பின்னர் வைத்தியசாலையில் சேர்ந்துள்ளனர்

அதன் பின்னர் மேற்கொண்ட விசாரணைகளின் போதே காயமடைந்த இளைஞர் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் எனவும் அவர் விடுப்பில் யாழில் உள்ள தனது வீட்டுக்கு வந்துள்ளார் என்றும் நண்பர்களுடன் திரைப்படம் பார்க்க வந்ததாகவும் தெரியவந்துள்ளது

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (செ-9)

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் சிறுவர் நாடாளுமன்றம் நாளை

திருமறைக் கலாமன்றம் நடைமுறைப் படுத்தும் "சிறுவர்கள் சமூக இணக்கப்பாட்டின் முகவர்களாகிறார்கள்'' என்னும் தலைப்பிலான சிறுவர் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக "சிறுவர் நாடாளுமன்றம்" நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில்அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடை பெறும். இந்நிகழ்வில் திருமறைக்கலாமன்றத்தின் பிராந்திய மன்றங்களைச் சேர்ந்த 180 இற்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் சிறுவர்கள் கலந்து கொள் ளவுள்ள தோடு திருமறைக்கலாமன்றத்தின் சிறுவர் பாராளுமன்ற உறுப்பினர் கள் 35 பேர் சிறுவர் தொடர்பான பிரச்சினை, சமூக ஒருமைப்பாடு, நல்லிணக் கம் என்பவற்றில் தமது பங்களிப்பு மற்றும் திருமறைக் கலாமன்றத்தின் அனுபவம், சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் சமவாயம் என்பன தொடர்பாகவும் உரையாற்றவுள்ளனர். (இ-12)


## TECHNICIAN தேவை/ பயிலுநர் தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் அன்டெனா/ கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை/ பிட்டிங் மற்றும் REPAIR செய்யும் நிறுவனத்திற்கு கீழ்காணும் வெற்றிடம் உள்ளது. அனுபவமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

## டிஷ் அன்டெனா பிட்டிங் நன்கு செய்யத்தெரிந்த TECHNICIANS (சம்பளம் 30 000/- + கமிஷன் )

RECEIVER ரிப்பேர் செய்ய தெரிந்த TECHNICIANS (சம்பளம் 40 000/-வரை )

டிஷ் அன்டெனா பிட்டிங் பழக விருப்பமுடைய பயிலுநர் (சம்பளம் 20 000/- ) உணவு, தங்குமிடம் இலவசம். தொடர்பு கொள்ளவும்.

குமார்- 077 771 0785.

(சி-7760)

## EP Academy Jaffna

EP Academy இல் Mr.Clancy Peries அவர்களின் CIMA பரீட்சைநுட்பங்கள்தொ ர்பான கருத்தரங்கு




EP Acadamy யில் CIMA கருத்தரங்கும் எதிர்வரும் மார்ச் 18ஆம் திகதி சனிக்கிழமை CIMA கற்கை நெறியின் முன்னணி நிறுவனமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் EP Acadamy இல் MR.ClancyPeries (Head of Learning UK) அவர்களால் "CIMA வில் புதிய பரீட்சை முறையும் அதனது தொழில்நுட்பங்களும்" பற்றிய கருத்தரங்கும் EP Acadamy இல் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கு CIMA -Foundation Level இல் படித்துக் கொண்டிருக்கும் அனைத்து மாணவர்களிற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

வரையறுக்கப்பட்ட ஆசனங்கள் மட்டுமே உள்ளமையால் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளுக்கு முந்துங்கள்

### SOFTWARE துறையில் கொழும்பில் உடனடி வேலைவாய்ப்பு

Software துறையில் ஆர்வமாக இருக்கும் மாணவர்களே நீங்கள் 1 மாதகால Software கற்கைநெறியை EP Acadamy இல் கற்பதன் மூலம் கவர்ச்சியான சம்பளத்துடன் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை கொழும்பு EP Acadamy தலைமை நிறுவனம் உங்களுக்கு வழங்குகிறது. தொழில் வாய்ப்பு உத்தர வாதம் வழங்கப்படும். இந்தக் கற்கைநெறியின் உள்ளடக்கங்கள்

- Software Development
- Java Programming
- SQL Server
- Net visual studio training

புதிய பிரிவுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ம்திகதி ஆரம்பமாக உள்ளது. இம்மாத இறுதிக்குள் பதிவுகளை மேற்கொள்ள முந்துங்கள்

### CIMA கற்கைநெறிக்கானOperational level வகுப்புக்கள்ஆரம்பம்

CIMA கற்கைநெறியை தொடரும் மாணவர்களுக்கு..!!

Operational levelக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 31ம் திகதிமார்ச் மாதம் ஆரம்பமாக உள்ளது. தரமான கல்வியை வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட மாணவர் பதிவுகளே ஏற்றுக் கொள்ளப்படுவதனால் பதிவுகளுக்கு முந்துங்கள்

| EP Academy | Hotline No | Seminar Date |
|---|---|---|
| #120/6, Palali Road, Kantharmadam,Jaffna | 077 628 48 45 | 18 -March-2017 |

(சி-7772)

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:BSc/வங்கியாளர்<br>தொ.இ: B/6713 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்:O/L எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6738 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்:BBA/ கணக்காளர்<br>தொ.இ: B/6714 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 44 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HNDA<br>தொ.இ: G/6747 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6717 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/Lசுவிஸ் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6749 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 35 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் NOT PR<br>தொ.இ: B/6719 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc USA<br>தொ.இ: G/6751 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


## இராசி பலன்

11.03.2017
(மாசி 27, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 8.55 மணிவரை
மகரம் பிற்பகல் 5.35 மணிவரை
சுபநேரம் 3.23-4.23 மணிவரை
இராகுகாலம் 9.23-10.53 மணிவரை
மாசி மகம், அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக்<br>புத | செவ் | | |
| சூரி<br>கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திராடம், திருவோணம் | | |
| | | | சந்<br>ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** தேகநலனில் இருந்த பாதிப்புகள் அகலும், சச்சரவைிட்டு சாதித்து காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மேடம்** இல்லம்தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரும் நாள், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**இடபம்** தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரும் நாள், விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச்செய்து முடிப்பீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும், வார்த்தைகளில் நிதானம் தேவை, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவுமறைவின்றி பழகுவார்கள், திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், அனுபவத்தின் வாயிலாக புதிய தகவல்களை அறிவீர்கள்.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்பீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.

**கன்னி** வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

# ஒரு மாத காலத்திற்குள் காணிகளை விடுவிக்காவிட்டால்

# கேப்பாப்பிலவு மக்களின் போராட்டம் போன்று

# வலி.வடக்கிலும் போராட்டம் வெடிக்கும்

## ஐந்து கிராம அபிவிருத்திக் குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் உள்ள மக்களுடைய காணிகள் ஒரு மாத காலத்திற்குள் விடுவிக்கப்படாவிட்டால் கேப்பாப்பிலவு மக்களுடைய போராட்டம் போன்று தொடர் போராட்டம் ஒன்றை முன்னெடுப்போம் என காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி, ஊறணி, தையிட்டி ஆகிய கிராமங்களின் ஒன்றிணைந்த அபிவிருத்தி குழு தெரிவித்துள்ளது. மேலும் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு கொண்டுள்ள காணிகளில் உள்ள வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டே விடுவிக்கப்படுவதாகவும் அந்தக் குழு குற்றம் சாட்டியுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் மேற்படி குழுவின் தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள் இணைந்து நேற்றைய தினம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தில் காங்கேசன்துறை, தையிட்டி, ஊறணி ஆகிய பகுதிகளில் சில இடங்கள் விடுவிக்கப்பட்டாலும் இன்னமும் இராணுவத்தினதும், பொலிஸாரினதும் கட்டுப்பாட்டில் பல பகுதிகள் உள்ளன. இதனால் மக்கள் மீளக்குடியமர தயங்கும் நிலையில்,

இவை கண்துடைப்புக்காக தான் விடுவிக்கப்பட்டதாக போன்று தோன்றுகின்றது. புகையிரத நிலையம், பொதுச் சங்கங்கள், ஆலயங்கள், தேவாலயங்கள் விடுவிக்கப்படவில்லை. இவை சிலவற்றில் விடுவிக்கப்பட்டாலும், உடனடியாக எதுவும் செய்ய முடியாதவாறு கட்டடங்கள் இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்டுள்ளன. நடேஸ்வர கல்லூரி விடுவிக்கப்பட்டு மீள இயங்கி வருகின்றது என்றாலும், அதனை சூழ இராணுவம் நிலை கொண்டுள்ளது. மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை உள்ளது. அங்கு மக்கள் சுதந்திரமாக நடமாட வேண்டும் என்றால் இராணுவம் அந்த இடங்களை விட்டு முதலில் வெளியேற வேண்டும்.

இந்த ஐந்து கிராம மக்களும் 27 வருடங்களாக துன்பப்பட்டு கொண்டுள்ளனர். ஆறாயிரம் குடும்பங்களுக்கு மேல் தமது காணிகளை பார்வையிட முடியாத




நிலையில் உள்ளனர். சொந்தக் காணி, வீடு, இந்த மக்களுக்கு இருக்கின்ற போதிலும், இவ்வளவு காலமும் வாடகை வீடுகளில் தான் தங்கியுள்ளனர். நல்லாட்சி என்று கூறுபவர்கள் இனியாவது இந்த இடங்களை உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இடம்பெயர்வுக்கு முன்னர் எம்து கிராமங்களில் இருந்து ஒரு நாளைக்கு ஐந்து இலட்சம் ரூபா வருமானம் ஈட்டப்பட்டது.

இந்த நாடு அந்த வருமானத்தை தற்போது இழந்து கொண்டுள்ளது. அந்த மக்களுடைய துறைமுகங்கள், விவசாய காணிகள் விடுவிக்கப்பட்டால் அவர்கள் இந்த வருமானத்தை இந்த நாட்டுக்காக பெற்றுக்கொடுப்பார்கள். ஆனால் தற்போது தமது நாளாந்த வாழ்வுக்கே அந்த மக்கள் வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். எமது கிராம மக்களுடைய இந்த கோரிக்கையை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு சமர்ப்பிக்கவுள்ளோம்.

இந்த கிராமங்களும் ஒவ்வொரு இராணுவ முகாம்களால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன. முன்னாள் முப்படை தளபதிகளாக இருந்தவர்களை கேளுங்கள் இந்த மக்கள் இராணுவத்திற்கு ஏதும் துன்பம் செய்தார்களா? என. ஒரு துன்பமும் செய்யாத நிலையில் ஏன் எமது மக்களை சுற்றி வளைத்து நிலை கொண்டுள்ளீர்கள்? யாழ். மாவட்ட படைத்தளபதிக்கு ஒரு வேண்டுகோள், எங்கள் மக்களை நிம்மதியாக வாழ விடுங்கள்.

வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் உடனடியாக குடியிருக்கக்கூடிய நிலை உள்ளது. ஆனால் காங்கேசன்துறையில் உள்ள காணிகளில் இருந்த கிணறுகள், வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாழடைந்த இடமாக தான் அந்த இடம் காட்சியளிக்கின்றது. தயவு செய்து எல்லா மக்களும் சேர்ந்து இந்த மக்களுக்கு உதவி செய்யுங்கள். ஆறாயிரம் மக்கள் தெருவில் உள்ளார்கள். ஒரு மாத காலத்திற்குள் விடுவிக்கப்படாவிட்டால் அவர்கள் ஒரு சாத்வீக தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

மேலும் காங்கேசன்துறையில் அமைந்துள்ள சீமெந்து ஆலைக்கு சுண்ணக்கல் தேவை, காங்கேசன்துறையில் சுண்ணக்கல் அகழ்ந்து முடிக்கப்பட்டு விட்டது. சேந்தான்குளத்தில் தான் இனி சுண்ணக்கல் அகழ முடியும். எனவே காங்கேசன்துறையில் அமைந்துள்ள சீமெந்து ஆலையை சேந்தாங்குளத்தில் அமைத்து செயற்பட வைக்க முடியும். தற்போது உள்ள பலாலி விமான நிலையம் சிவில் விமான நிலையமாக மாற்றப்பட வேண்டும். கட்டுநாயக்கவிற்கு பெரும் செலவும் செய்து செல்ல வேண்டியுள்ளது என பல கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்திருந்தனர்.

இந்த சந்திப்பில் மேற்படி குழுவின் தலைவர் விஜயரட்ணம் ரட்னராஜா, செயலாளர் கந்தையா பாலசுப்ரமணியம், ஐந்து கிராமங்களின் பிரநிதிகள் ஒன்றுகூடி சில காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி, ஊறணி, தையிட்டி, ஆகிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

# இந்து மயானத்தில் தகனம்; இடைக்கால தடை உத்தரவு




புத்தூர் கலைமதி பகுதியிலுள்ள இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் செய்வதற்கு மல்லாகம் நீதிமன்றால் நேற்று முன்தினம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புத்தூர் மேற்கு கலைமதி பகுதியில் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட இந்து மயானத்தினை அகற்றுமாறு கோரி அப்பகுதி மக்கள் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் சிறுப்பிட்டி பகுதியில் உயிரிழந்த ஒருவரின் இறுதிக்கிரியைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்ற வேளை பொலிஸ் பாதுகாப்புடன் அதை மேற்கொள்வதற்கு மல்லாகம் நீதிமன்றம் கடந்த புதன்கிழமை கட்டளை வழங்கியிருந்தது.

இந் நிலையில் குறித்த இந்துமயானம் அப்பகுதியில் உள்ள சிலரால் இரவோடு இரவாக அடித்துடைத்து தரை மட்டமாக்கப்பட்டதுடன் இந்து மயானத்திற்கு யாரும் செல்ல முடியாதவாறு போத்தல்களை அடித்துடைத்து மயான வளாகத்திற்குள் போடப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்று முன்தினம் காலை குறித்த பகுதியில் ஒன்று திரண்ட பொதுமக்கள் பதாகைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு தமது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

கிராமத்தில் ஏற்பட்ட பதற்ற நிலையினை அடுத்து அச்சுவேலி பொலிஸார் பாதுகாப்பு கடமைகளுக்காக புத்தூர் கலைமதி பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர். மேலும் சம்பவ இடத்திற்கு வந்த காங்கேசன் துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிலைமையினை கட்டுப்படுத்த முயன்றபோது பொது மக்கள் தொடர்ந்தும் தமது எதிர்பினை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில், 200 வருடங்களுக்கு மேல் இப் பகுதியில் மயானம் இருந்தனை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். தற்போது கால த்திற்கு காலம் மக்களின் தொகைக்கு ஏற்ப காணியின் தேவையும் காணப்பட்டது. தற்போது குறித்த மயானத் தினை சுற்றி 400க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. புத்தூர் கலை மதி பகுதியில் 1500 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில், நாங்களாகவே உணர்ந்து இப்பகுதியில் உள்ள மயானத்தினை அகற்றுமாறு கேட்கின்றோம்.

எங்களுக்கு இப்பகுதி யில் மயானம் தேவை இல்லை. புத்தூர் பகுதியில் மூன்று இந்து மயானங்கள் உள்ளன. அங்கே எமது இறுதிக் கிரியைகளை மேற்கொள்ள முடியும். எனவே இம் மயானத்தினை அகற்றி தருமாறு பிரதேச சபையிடம் கேட்டுக் கொள்வதாக தெரிவித்தனர்.

மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தினை அடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ. யூட்சன், மக்களிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் நிலமைகளை கேட்டறிந்ததுடன், குறித்த மயானத்தில் தகனம் செய்வதற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்ததுடன், இலத்திரனியல் மூலமான தகனமுறைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபைக்கு கட்டளையிட்டிருந்தார். இதனையடுத்து நேற்று முன்தினம் இப்பகுதியில் தகனம் செய்யவிருந்தவருடைய இறுதிக்கிரியைகள் வேறு மயானத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன், போராட்டத்தில் ஈடுபட்ட ஊர்மக்களும் அவ் இடத்தை விட்டு கலைந்து சென்றனர். (இ-9)

# வடக்கில் 549 பேருக்கு ஆசிரியர் நியமனம்

**வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமனம் செய்தல்–2017**

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் 2016.12.18 ஆம் திகதி நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த 779 விண்ணப்பதாரர்கள் 2017.01.16, 2017.01.17, 2017.01.18 மற்றும் 2017.01.19 ஆம் திகதிகளில் வடமாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையுடன் இணைந்த பிரயோகப் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

அவர்களில் ஆட்சேர்ப்பு விளம்பரத்திற்கு அமைவாக தகைமை பெற்றோர் ஆசிரியர் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள 549 பேருக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 2017.03.13 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. எனவே தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் அன்றைய தினம் முற்பகல் 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி சிவகுருநாதர் மண்டபத்தில் அறிக்கையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களை பெற்றுக்கொள்வதற்கான அழைப்புக் கடிதங்கள் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் (பெண்கள் இள வர்ண சாறியுடனும் ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சேட்டும் அணிந்து) குறித்த திகதியில் தவறாது யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு சமுகமளித்து தங்களுக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். நியமனம் பெறுவோரின் பெயர் விபரம் வருமாறு,

விவசாய பாடம்

சு.பானுஷா, யாழ்ப்பாணம்-878140230V, சோ.நீரிஜா யாழ்ப்பாணம். 915050476V, கி.தனுசா வவுனியா. 905400029V, ஜெ. செந்தில்செல்வன் யாழ்ப்பாணம். 892700672V, சா.துசாந்தினி மன்னார். 918112251V, செல்வி. து.சசிகலா யாழ்ப்பாணம். 908081722V, கா. அரசிளங்குமாரன் யாழ்ப்பாணம் 902701966V, ஜீ.ஜீவசுலக்ஸ்சி மன்னார். 917743053V, து. அஜீவன் 771711758V, திருமதி. அஸீஸா முஹம்மது இம்தியாஸ் , வவுனியா. 876872722V, செ.மாநிதி யாழ்ப்பாணம். 885013988V, இ.தர்சிகா யாழ்ப்பாணம். 885231748V, த.தமிழ்ச்செல்வி வவுனியா. 787180 620V, நி.சரணியா, யாழ்ப்பாணம். 906232863V,கை. கிரிஷாந் யாழ்ப்பாணம். 891840853V, சி.திர்சிகாயினி , யாழ்ப்பாணம். 908210956V, த.பிரதாபன், யாழ்ப்பாணம். 860292246V, எ.பௌசிகா முல்லைத்தீவு. 877962792V,பு. சகானா அம்பலவானர் ,யாழ்ப்பாணம். 907842266V, சொ. ஜெயவர்ஷினி யாழ்ப்பாணம். 897533316V, கோ. கலைவாணி , யாழ்ப்பாணம். 828300261V, க. தயானந்தன் , யாழ்ப்பாணம். 793153619V, யே. கரன்றாஜ் மன்னார். 880681877V, திருமதி. செ.செங்கமலசெல்வி , யாழ்ப்பாணம். 767021909V, சி.கார்த்திகா , யாழ்ப்பாணம்.866773319V, ஜெ. ,காஞ்சனா யாழ்ப்பாணம். 896472470V, பி. லிகோரி எமேர்சன் , யாழ்ப்பாணம். 883010698V, மு.றமீசா மன்னார். 898442632V, க. தனீசன் , யாழ்ப்பாணம். 891122004V, கோ.அனுசியா, யாழ்ப்பாணம். 918401520V, த. பார்த்தீபன், யாழ்ப்பாணம் 902651870V,

ஊடகக் கற்கைநெறி

நி. கஜிதரன் யாழ்ப்பாணம் 883623711V, இ.கமலேஸ்வரி கிளிநொச்சி. 905842056V, கி.கவிதாஜினி முல்லைத்தீவு. 855782138V, த.தயாரூபினி , வவுனியா. 896993127V, அ.ஜெறின் வெண்ணிலா , ம்ன்னார். 908070836V, தே.பவித்திரா, யாழ்ப்பாணம். 926410881V, அ.புவிதா, கிளிநொச்சி. 926894315V, ஆ.பிரியந்தினி, யாழ்ப்பாணம். 898542840 V, ம.பிரான்ஸிஸ்க் யாழ்ப்பாணம் 762632055V, ம.மேரி ஜொய்சா, யாழ்ப்பாணம்.895822361V, கை. அகிலன் , யாழ்ப்பாணம். 880264265V,மேரிபொலின் கமிலஸ் எட்கா, மன்னார். 907980529V, ச.நிரோசா, யாழ்ப்பாணம். 918171371V, சி.கிருபாகரன், யாழ்ப்பாணம். 880902644V, அ.நினுஷா, யாழ்ப்பாணம். 908651561V, சி.அனுராஜ் , யாழ்ப்பாணம். 873664169V,

குடியியல்

சா.சர்மிலன் - யாழ்ப்பாணம், 893103597V, ச.விஜயகுமார்-யாழ்ப்பாணம், 883561538V, செ.சுபாஜினி -யாழ்ப்பாணம். 875161075V, இ.பிரிந்தா -யாழ்ப்பாணம். 918073345V,அ. தயாளராஜ்- மன்னார். 853330230V, வி.கிருஜா-யாழ்ப்பாணம். 908292294V,சி.ரகுவரன்-யாழ்ப்பாணம். 199119702166, த்.திரோன் கொடுதோர்- மன்னார்-882190528V, பு.ரஜீவ் -யாழ்ப்பாணம் 887092079V, ர.சிந்துஜா -வவுனியா 897853647V, ப.தர்சானந்த் -யாழ்ப்பாணம். 880682075V, இ.ரம்ஜா-யாழ்ப்பாணம், 897822415V, செ.துர்க்காஜினி - யாழ்ப்பாணம், 897292238V, பி.சாளினி -வவுனியா 90577 4760V, கு.சபேஷன் -யாழ்ப்பாணம். 853481262V, கா.உஷாந்தினி -வவுனியா. 876204509V, சி.சிவறஞ்சனி -யாழ்ப்பாணம் 915954367V, க.சோபிகா -யாழ்ப்பாணம். 926612158V, யோ.தர்சினி -யாழ்ப்பாணம். 908041569V, த.துஷாலினி -முல்லைத்தீவு. 19838600654, மே.மனோகரி -மன்னார். 858081181V, ச.கார்த்திகா -யாழ்ப்பாணம். 895213020V, பி.கல்யாணி - யாழ்ப்பாணம். 876030632V, நி.கிறிஸ்பினா சுதர்சினி-யாழ்ப்பாணம். 817203078V, மு.ஆஸீம்- மன்னார். 8527 91578V,அ.கஜென் -யாழ்ப்பாணம். 802011466V, இ.தர்சிகா -யாழ்ப்பாணம். 908453034V, ம.விமலன் -வவுனியா. 900160046V, இ.சாந்தரூபன் -யாழ்ப்பாணம். 910212583V, சொ.பிறேமலதா -யாழ்ப்பாணம். 887623783V, ர.ரவிராஜ்-யாழ்ப்பாணம். 911652765V, க.றொசான் -யாழ்ப்பாணம். 840873820V, எ.இருதயறொசான்பீரிஸ்-மன்னார். 893130055V, ச.அச்சுதன் -முல்லைத்தீவு. 842472784V, க.பிரித்திகா-யாழ்ப்பாணம். 898220206V, சீ.பிரமிளா -யாழ்ப்பாணம். 905292129V, ம.ஜனிஸ்ரன் யாழ்ப்பாணம். 903140690V, வி.அன்ரனி யாழ்ப்பாணம். 901812780V, த. செந்தீபன் வவுனியா. 850873704V, மு.பர்ஹானா பேகம் மன்னார். 896114174V, மு.பாத்திமா ஆயீஷா முல்லைத்தீவு 878192931V, ம.நிலானி யாழ்ப்பாணம். 915750320V, ஜெ.சயந்தா யாழ்ப்பாணம். 918201580V,சா.லஜிகா யாழ்ப்பாணம். 837151732V, சூ. மாணிக்கராஜா மன்னார். 891012225V, அ.பாத்திமா நசீபா மன்னார். 917411735V, வி.கமலினி -முல்லைத்தீவு. 878283341V,செ.துவாகரன் -யாழ்ப்பாணம். 913390881V, வி.சாதனா-யாழ்ப்பாணம். 895261459V, செ.பிறேமகாந் -மாங்குளம். 902631682V, மு.முஷக்ரிபா-புத்தளம். 897070472V, கு.ரஜீத் -யாழ்ப்பாணம். 883121996V,உ. விஜிந்தா-வவுனியா. 895742414V, ஸ.ஷகீலா பர்வின் -மன்னார். 888011331V, ச.ஜபாகர் -யாழ்ப்பாணம். 900793383V, ந.மலைமகள் -முல்லைத்தீவு. 886532610V, ந.கமலினி -வவுனியா. 918204270V, ப.துளசி -யாழ்ப்பாணம். 905192795V, ம.றஜந்தன் -யாழ்ப்பாணம். 882272893V, இ.கவிராசன் -கிளிநொச்சி. 841454758V, க.சசீதரன் -யாழ்ப்பாணம். 803441898V, தி.கேசவன் -முல்லைத்தீவு. 840464318V, ம.ஸிதாராபேகம் -மன்னார். 867481788V, மு.வாயிசா -மன்னார். 926551990V, செ.பிரதாப்-யாழ்ப்பாணம். 872674365V, மு.நஸ்லீன்-வவுனியா. 875013963V, செ.துஷியந்தினி -யாழ்ப்பாணம். 906783142V, ஜெ.வனஜா யாழ்ப்பாணம். 896951912V, உ.நேருதா -வவுனியா. 896961195V, சி.மோகனராஜா -யாழ்ப்பாணம். 753662944V, இ.ஸ்ரீவிஜயாதேவி -யாழ்ப்பாணம். 785160380V, ம.எமிலியானுஸ் றோச் -மன்னார். 871982058V, சி.நிஷாந்தி -யாழ்ப்பாணம் 918072063V, ச.மேனகா-யாழ்ப்பாணம். 898230759V, ஹை.சிம்தியா பர்வின் -வவுனியா. 926362283V,சி.நிஷானி -யாழ்ப்பாணம். 88 7711798V, நே.தினேஸ்வரன் -யாழ்ப்பாணம். 861941892V, சி.நிமலன் -யாழ்ப்பாணம். 791904234V, கி.சிந்துஜா -யாழ்ப்பாணம். 877461629V, மு.தன்சீஹா -மன்னார். 906240688V, சு.ஜெயகுமார் -கிளிநொச்சி. 891652119V, ஞா.பாமினா -யாழ்ப்பாணம். 908431995V, ஆ.முஸ்அப் -மன்னார். 892242852V, இ.ராசகுமார்-யாழ்ப்பாணம். 780043660V, அ.இம்றானா வவுனியா. 895753327V, மு.முஸாதிக் -மன்னார். 851130071V, நி.கபிலா-யாழ்ப்பாணம். 896601857V,சி.வினோதன் -யாழ்ப்பாணம். 911933217V, லூ.லூட்நிறோஜி-யாழ்ப்பாணம். 896912682V, த.தனேஷ் -முல்லைத்தீவு. 872292764V, ப.இராசகுமார் -முல்லைத்தீவு. 802865309V,மு.சித்திநிலுபா -பொற்கேணி. 885611834V,ந. பிரபாகர் -யாழ்ப்பாணம். 891981716V, றி.நப்ளிஹா -மன்னார். 907092070V, சி.ஜஷிதா -வவுனியா. 917322996V, சு.திவ்யா -கிளிநொச்சி. 907220990V, சௌ.விஜயதாஸ் -யாழ்ப்பாணம். 199123903402, மு.அஸ்விஹா மன்னார். 878110056V,ச.பாத்திமா சம்லா புத்தளம். 927310520V, மு.பாத்திமா ஸில்ஸிலா -புத்தளம். 895890227V, செ.பிரசாந் -யாழ்ப்பாணம். 921220960V, மு.பாத்திமா றஸீதா -வவுனியா. 878382994V,மு.றிஸ்மியா -மன்னார். 865933509V, கி.ரேகா -யாழ்ப்பாணம். 837374120V,

தகவல் தொழில்நுட்பம்

ப.கோபிகா யாழ்ப்பாணம் 917052875V, சி.ஸ்ரீ ஆரணி, வவுனியா. 917900647V, சு.சுரேந்த் , வவுனியா. 861840565V,ற.சாதனா ,யாழ்ப்பாணம். 916663595V, மா.அஜித்ரி, யாழ்ப்பாணம். 907921506V, பு.நிரோஷா , யாழ்ப்பாணம். 907602109V, ப.ஏஞ்சலா ஜக்குலின், யாழ்ப்பாணம். 848073563V, த.சோபிதா , யாழ்ப்பாணம். 897161915V, வி.முகுந்தன் ,யாழ்ப்பாணம். 901460922V, ஆ.ரவிசங்கர் லெம்பேட் , மன்னார் 866831181V, ம.சுபிஷ், வவுனியா. 891841485V, ப.அன்ரனி டினேஷ், யாழ்ப்பாணம். 893242570V, ஜெ.ஜெனட் ஷிறானி, மன்னார். 905811517V, க.ராம், யாழ்ப்பாணம். 901122652V, சி.கோகுலன் வவுனியா 902320261V, மு.அநிந்திதா, யாழ்ப்பாணம். 856381927V, தி.யனித்தா, யாழ்ப்பாணம் 198879001023, நா.கஜலக்ஷி, யாழ்ப்பாணம் 908131703V, அ.ஹரிசாங்கி. கொழும்பு 897420325V, அ.றாஜ்குமார், யாழ்ப்பாணம். 892401403V, அ.அன்ரனி யசிந்தன். யாழ்ப்பாணம் 892200289V, நா.ராகுலன், யாழ்ப்பாணம். 923532595V, வி.வினிஜா, யாழ்ப்பாணம். 817092527V, ய.ரஜனி, மன்னார். 898023087V, கி.நிரோஜி , யாழ்ப்பாணம் 906292467V, சி.நிமலினி, யாழ்ப்பாணம் 897081830V.கு.குணதீபன், யாழ்ப்பாணம். 911283743V, கி.வனஜா, யாழ்ப்பாணம் 885842712V, ஜெ.பிரதாபன், யாழ்ப்பாணம். 900443153V, பி.பெனுஸ்ரா மேரி, மன்னார் 887372640V,இ.ஜங்கரன், யாழ்ப்பாணம். 833114743V, க.கபிலன், யாழ்ப்பாணம். 892141720V, சி.பங்கஜன், யாழ்ப்பாணம். 893031065V, த.தீபா, வவுனியா. 917162255V, டோ.டென்ஷியா, யாழ்ப்பாணம் 905844024V,செ.அருளினி, யாழ்ப்பாணம். 917723451V, ஞா. வானுஜா, யாழ்ப்பாணம். 908252179V,ஜெ.கஜஸ்ரன், யாழ்ப்பாணம் 199226604110 யோ. தேனுஜா, யாழ்ப்பாணம் 926211218V,ப.தர்சிகா, யாழ்ப்பாணம். 915032273V, பு.மயூரன் , யாழ்ப்பாணம். 901792895V, இ.உமாபதி, யாழ்ப்பாணம். 782782002V, க.செந்தூரன், யாழ்ப்பாணம். 198835400360, த.ராஜ் அனந்தினி, முல்லைத்தீவு 896024310V, ர.பாத்திமா சஸ்னா, மன்னார். 935310121V, இ.தர்சா, வவுனியா. 917272247V, வி.ரம்மியா, வவுனியா. 907092933V, வி.சுவேந்தன், வவுனியா. 198808802910 த.பைரவி , மன்னார். 917282129V, சி. ஜெயதாரகா, யாழ்ப்பாணம். 917722951V, க.எக்சிபா, வவுனியா. 916592868V, அ.சாயினி, யாழ்ப்பாணம். 916960077V, நா.நிரூஜா, யாழ்ப்பாணம். 916421699V, க.லிகாதிகா, முல்லைத்தீவு. 908170741V, ச.உருத்திரேந்திரா, கிளிநொச்சி. 783323419V, பு.தர்சனா, யாழ்ப்பாணம். 836264037V, மு.நதீபா, மன்னார். 925032883V, இ.எழில்மாதா, யாழ்ப்பாணம். 887472173V, த.தார்மீகன், யாழ்ப்பாணம். 197918002520 பா.கங்கா, யாழ்ப்பாணம். 915721265V, பு.குபேரன், யாழ்ப்பாணம். 922812578V, நே.பிறேம்மதி குலாஸ், மன்னார். 885772374V, செ.குமுதினி, யாழ்ப்பாணம். 928190587V, யே.மரியாடிலக்ஷி , யாழ்ப்பாணம் 76843277V,அ.இமெல்டா, மன்னார். 907092500V, க.லம்போதரன், யாழ்ப்பாணம். 198535710012, வி.றஜீவன், கிளிநொச்சி. 852191538V, உ.நாகரூபன், யாழ்ப்பாணம். 872181431V, க.மேனகா, யாழ்ப்பாணம். 19908280I489 ஜ.கீர்த்திக்கா, யாழ்ப்பாணம். 876573555V,

வரலாறு

த.தனுாஷன் யாழ்ப்பாணம் 882282260V, இ.நிரோஜினி யாழ்ப்பாணம் 886492537V, கு.குகநிதா வவுனியா 887721068V,ஸ்ரீ.விதுஜன் யாழ்ப்பாணம். 19883382021, சி.யதுர்ஷன், யாழ்ப்பாணம். 900793057V, சி.மேகலா, யாழ்ப்பாணம் 898252949V, ச.சிவகுமாரன்யாழ்ப்பாணம் 823421346V, சி.நிசாந்தி யாழ்ப்பாணம் 908462181V, வே.நிறேஜா யாழ்ப்பாணம் 905182137V, சி.சிவனேஸ்வரன் முல்லைத்தீவு 883254082V, த.டேவிகா யாழ்ப்பாணம் 905401866V, வா.பிரதீபா யாழ்ப்பாணம், 198881800800 க.அன்ரனிசியா, யாழ்ப்பாணம் 896351028V, பி.கௌசியா யாழ்ப்பாணம் 865103239V, இ.ஸ்ரீதரன் கிளிநொச்சி 800994292V,யோ.அனுஷியா, யாழ்ப்பாணம் 888401814V, தே.சோபனா யாழ்ப்பாணம் 906953021V, க.கௌசிகன் யாழ்ப்பாணம் 901924481V, ஆ.ரூபனா, யாழ்ப்பாணம், 917711984V, மு.ஜனகன் யாழ்ப்பாணம் 761944053V, சி.கஜேந்தினி யாழ்ப்பாணம் 906483181V, ரா.துஷ்யா யாழ்ப்பாணம். 895380407V, அ.அநுசியா, முல்லைத்தீவு. 905932489V,

(தொடரும்)

# நாங்கள் பரம்பரையாக வாழ்ந்த நிலத்தை நாங்களே ஆளவேண்டும்

## தீர்வின்றி தொடர்கின்றது கேப்பாப்பிலவு மக்களின் போராட்டம்



(மல்லாவி)


முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கேப்பாப்பிலவு கிராமத்தில் படையினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி கேப்பாப்பிலவு மக்கள் முன்னெடுத்து வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை 10 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலத்திலேயே எங்களது பல தலைமுறைகள் வாழ்ந்துள்ளன. அவர்களைத் தொடர்ந்து நாங்களும் இந்த மண்ணில் வாழ்ந்த நிலையில் இறுதி யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து சென்றோம்.

எங்களை செட்டிகுளம் நலன்புரி முகாமிலிருந்து அழைத்து வந்து அடிப்படை வசதிகள் செய்து தரப்படாத நிலையில் மீள் குடியேற்றம் என்ற பெயரில் நான்கு சுவர்களுக்குள் அடைத்து வைத்திருக்கின்றனர்.

எங்கள் பரம்பரை எமக்கு தேடித்தந்த எங்களது நிலத்தைத்தான் நாங்கள் கேட்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

கடந்த 10 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப்போராட்டத்திற்கு பல்வேறு தரப்பு மக்களும் தமது ஆதரவை வழங்கி வருகின்றனர். (2-15)



மன்னார் மாந்தை சீது விநாயகர் குளம் கிராமத்திற்கான மின்சாரம் வழங்குவதற்காக வயர்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருவதை படத்தில் காணலாம்.

(படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)

## சர்வதேச மகளிர் தினம் முழங்காவிலில் இன்று

பூநகரி)

பூநகரி பிரதேச செயலக பிரிவில் சர்வதேச மகளிர் தினம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணி தொடக்கம் முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

பூநகரிப்பிரதேச செயலர் சி.ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் திருமதி.ஆ.தனபாலன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக பூநகரி நல்லூர் மகா வித்தியாலய அதிபர் திருமதி சூரியகுமாரி இராஜேந்திரம், பூநகரி முழங்காவில் ஆரம்ப வித்தியாலய அதிபர் திருமதி சுவானந்தி வரதன், பூநகரி கறுக்காய்த்தீவு மகாவித்தியாலய அதிபர் திருமதி தவமலர் கனகசபை ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் மகளிர் தின வரலாறு, வில்லுப்பாட்டு, "சமகாலத்து பெண்கள்" சொல்லாடுகளம், நாடகம் என்பன இடம்பெறும். (2-84)




## மன்னாரில் கவனயீர்ப்பு பேரணி

(மன்னார்)

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத்தேடும் குடும்பங்களின் சங்கம் மற்றும் அரசியல் கைதிகளின் உறவுகளினால் மன்னாரில் நடத்தப்படவுள்ள கவனயீர்ப்பு பேரணி எதிர்வரும் 13ஆம்திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30மணி வரை மன்னார் சேமக்காலைக்கு அருகில் தலைமன்னார் வீதியிலுள்ள மன்னார் பிரஜைகள் குழுவின் அலுவலகத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

இப்பேரணியானது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பதில் கூற வேண்டும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், சர்வதேச விசாரணை நடைபெற வேண்டும், ஜெனிவாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனிதவுரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டாம் என்று வலியுறுத்தக்கோரி குறித்த கவனயீர்ப்பு பேரணியானது முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே எமது உறவுகளுக்காக முன்னெடுக்கப்படுகின்ற இப்பேரணிக்கு மன்னார் வாழ் மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவ வேண்டும் என ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2)

## அடிப்படை வசதி கோரி 7ஆவது நாளாக பன்னங்கண்டி கிராமமக்கள் போராட்டம்



(மல்லாவி)

கிளிநொச்சி பன்னங்கண்டி மக்களுக்கு அடிப்படை வசதி ஏற்படுத்தி கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 7ஆவது நாளாகவும் தொடர்ந்தது. காணி உரிமம் மற்றும் வீட்டுத்திட்டம், கழிப்பறை வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்தி தருமாறு கோரி ஆரம்பிக்கப்பட்டு குறித்த போராட்டம் தொடர்கின்றது. (2-15)

### 3 ஆவது நாள்

## முல்லையில் தீர்வின்றி தொடரும் உறவுகளைத் தேடும் கவனயீர்ப்பு




(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு வலிந்து காணா மல்ஆக்கப்பட்டவர்கள்தொட ர்பில் தீர்வு கிடைக்கும் வரை கவனயீர்ப்பு போராட்டத்தை தொடரப்போவதாக தெரிவித்து நேற்று வெள்ளிக்கிழமை மூன்றாவது நாளாகவும் முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக வீதியின் அருகாமையில் இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் பல இடங்களில் இருந்தும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், பொதுமக்கள் என பலரும் வருகை தந்து போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வலிந்து காணாமல் போனோரின் உறவினர்கள் தமது கோரிக்கைகளாக, "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக தீர்க்கமான முடிவு வேண்டும்"

"பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும்"

"அரசியல்கைதிகளை விடுவிக்க வேண்டும்" என்றமூன்று அம்சக் கோரி க்கைகளை முன்வைத்து இப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந் நிலையில் தங்களுடைய இந்தப் போராட்டத்திற்கு பொது அமைப்புக்கள் மற்றும் இளைஞர்களின் ஆதரவை தாங்கள் வேண்டி நிற்பதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வலிந்து காணாமல் போனோ ரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (2-15)

### 19 ஆவது நாள்

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் போராட்டம் தொடர்கின்றது





(மல்லாவி)

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட உறவுகளைத் தேடும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 19ஆவது நாளாகவும் தொடர்கின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இணைந்து முன்னெடுக்கும் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. தமது பிள்ளைகளை விடுவித்து தருமாறு கோரி மக்கள் தொடர்ந்தும் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடதக்கதாகும். (2-312-15)

# ‘அம்மா நீங்கள் போங்கோ நாளைக்கே வந்து விடுவேன்’

## மகனைக் கண்ட பின்னரே எனது உயிர் பிரியும் என கண்ணீர்மல்க தெரிவித்தார் 60 வயது தாயொருவர்




எல்லா கோயில்களிலும் மகன் உயிரோடு இருக்கிறான் என்றே கூறுகின்றார்கள். காத்திருக்கிறேன். மகனை பார்த்துவிட்டே எனது உயிர் பிரியும் என உருக்கமாக கண்ணீர் ததும்பக் கூறினார் வடிவேல் புஸ்பராணி.

2006.06.26 ஆம் திகதி கிளிநொச்சியிலிருந்து குடத்தனைக்கு வருவதற்காக முகமாலை பேருந்தில் ஏறிய எனது மகன் இன்று வரை வீடு திரும்பவில்லை. நான் எல்லா கோயில்களுக்கும் சென்று வருகின்றேன். எல்லோரும் சொல்கின்றார்கள் மகன் உயிரோடு இருக்கிறான் என்றே. எனவே காத்திருகிறேன் நான் அவனை பார்த்துவிட்டே உலகத்தை விட்டுச் செல்வேன் என அறுபது வயது தாயான வடிவேல் புஸ்பராணி கண்ணீருடன் தனது காத்திருப்பின் கதையை கூறினார்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் 19 ஆவது நாளாக இரவு- பகலாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட வடிவேல் புஸ்பராணி தனது மகன் வடிவேல் நிவேதன் காணாமல் ஆக்கப்பட்டது பற்றி கூறிப்பிடும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

25.06.2006 நானும் எனது மகனும் (அப்போது 19 வயது) கிளிநொச்சி உதய நகரில் உறவினர் வீட்டு திருமணத்திற்கு வந்திருந்தோம். அன்று மாலையே நான் மீண்டும் யாழ்ப்பாணம் குடத்தனைக்கு திரும்பி விட்டேன். நான் திரும்பும் போது மகன் என்னிடம் அம்மா நீங்கள் போங்கோ நான் நாளைக்கே (26.06.2006) வந்துவிடுகிறேன் பயப்பட வேண்டாம் எனக் கூறி அனுப்பி வைத்தான்.

ஆனால் அவன் கூறிய அந்த நாளுக்காக நான் இன்று வரை காத்திருக்கிறேன். இனியும் காத்திருப்பன் அவன் வருவான் உயிரோடுதான் இருக்கிறான் என கண்ணீர்மல்க தெரிவித்தார் புஸ்பராணி.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த 2006 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் கட்டாய ஆட்சேர்பில் மகன் பிடிக்கப்பட்டிருந்தாலும் அவன் 2009 இற்குள் உதயநகரில் உள்ள உறவினர்களுடன் தொடர்புகளை மேற்கொண்டிருப்பான். அல்லது வீட்டு முகவரிக்கு கடிதம்மூலம் தொடர்பு கொண்டிருப்பான்.

எனவே உறுதியாக நான் நம்புகிறேன் மகன் முகமாலையில் வைத்தே காணாமல் போயிருக்கிறான். உதய நகரில் இருந்த உறவினர் ஒருவர் எனது மகனை முகமாலை நோக்கி பயணித்த பேருந்தில் ஏற்றிவிட்டுள்ளார். அதன் பின்னர் எந்த தகவலும் இல்லை.

நான் இதுவரை மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம்,பொலிஸ்,ஆமி என பதிவுகளை எல்லா இடங்களிலும் மேற்கொண்டுவிட்டேன்.

இப்பொழுது மகனுக்காகவே காத்திருகிறேன். அவனை பார்த்துவிட்டால் போதும் நான் சென்றுவிடுவேன். அவனுக்காகவே இந்த அறுபது வயதிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டங்களில் எல்லாம் கலந்து கொண்டு வருகிறேன்.

மகனை பார்க்கவேண்டும், ஒருதடவையாவது பேசவேண்டும், கவனமாக போங்கோ நான் வந்து விடுவேன் என்று 25.06.2006 சொன்ன வார்த்தைகள் இன்றும் கேட்டுக்கொண்டே இருக்கிறது என அழுதபடியே கூறி முடித்தார் தனது சோகக் கதையை வடிவேல் புஸ்பராணி. (2-312)

## ‘ஜெனிவா நோக்கிய குரல்’

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் பிரச்சினை தொடர்பில் ஐ.நாவிற்கு அறிக்கை

(மல்லாவி )

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீள்விழி பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் “வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஜெனிவா நோக்கிய குரல்” என்ற தொனிப்பொருளில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரைச்சி பிரதேச சபையின் ஒன்று கூடல் மண்டபத்தில் இச் சங்கத்தின் தலைவி திருமதி. இராசேந்திரம் சூரிய குமாரி தலைமையில் கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் கலந்துரையாடி அதனை அறிக்கை இட்டு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

எனவே, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து மாதர் சங்க நிர்வாகிகள், பெண்கள் சமூக அமைப்புக்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உட்பட பெண்கள் நலனில் அக்கறை கொண்ட அனைவரும் ஒன்றாக சேர்ந்து இந்த கருத்தமர்விற்கு வலுச் சேர்க்கும் வகையில் அணி திரளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (2-15)

## முரளீதரனின் நினைவேந்தல் நிகழ்வு இன்று

(கிளிநொச்சி)

எழுத்தாளரும் ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான சுப்பிரமணியம் முரளீதரனின் நினைவேந்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி புளியம்பொக்கணையில் நடைபெறும்.

இந் நிகழ்வு ஊடக நண்பர்களினாலும் கிளிநொச்சி மக்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்டது.

சமூக செயற்பாட்டாளர் முரளீதரன் கடந்த தை மாதம் 19 ஆம் திகதி வாகன விபத்தில் காலமானார்.

பொ. தஜீவ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தரும் சமூகவியல் சிரேஷ்ட பேராசிரியருமான நா.சண்முகலிங்கன், இலங்கை ஊடகவியல் கல்லூரி விரிவுரையாளர் எஸ்.ஶ்ரீபிருந்திரன் உட்பட பலர் நினைவுரைகளை ஆற்றவுள்ளனர்.

இந் நிகழ்வில் அமரர் முரளீதரன் நினைவாக பாடல் இறுவெட்டுக் காண்பியம் ஒன்றும் விவரணம் மற்றும் அவரால் தயாரிக்கப்பட்ட குறும்படம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. (2)




# சைவப்பிரகாசா மகளிர் கல்லூரியின் முகப்பு வாயில் திறந்து வைக்கப்பட்டது

( குருமன்காடு)

வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரியின் முகப்பு வாயில் நேற்று முன்தினம் இந்திய துணைத் தூதர் ஆ.நடராஜனால் திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் அதிபர் திருமதி. கமலேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இந்திய துணைத்தூதர் பாண்ட் வாத்தியங்கள் முழங்க மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டார்.

1.5 மல்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கல்லூரியின் முகப்பு வாயிலை திறந்து வைத்த இந்தியத் துணைத்தூதரை பாடசாலை மாணவர்கள் வரவேற்றனர்.

கல்லூரி அதிபரிடம் ஒரு தொகுதி நூல்கள் இந்திய துணைத்தூதுவரால் கையளிக்கப்பட்டது.





இந்நிகழ்வில் கோட்டக் கல்வி பணிப்பாளர் எம். பி.நடராஜா, வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.ராதாகிருஸ்ணண் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் வலயக் கல்வி பணிப்பாளர் அன்ரன் சோமராஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# வேட்புமனு வழங்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டியவை

## மார்ச் 12 நிகழ்ச்சித்திட்டம் ஊடாக முன்னெடுப்பு

அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் வலையமைப்பின் ஏற்பாட்டில் “மார்ச் 12 நிகழ்ச்சித்திட்டம்” சிக்கன கடனுதவி கூட்டுறவு சமாசத்தின் தலைவர் எஸ். சேனாதிராசா தலைமையில் அண்மையில் வவுனியா குட்சைட் வீதியில் அமைந்துள்ள சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

அரசியல்வாதிகளுக்கு வேட்புமனு வழங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் சரியான அரசியல்வாதிகளை மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தினூடாக மார்ச் 12 நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு வருவதாக அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் வலையமைப்பின் தலைவர் ரவீந்திர டீ சில்வா தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்டத்தின் விவசாய அமைப்புக்கள், கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்த னர்.(2-250)

# முழுநிலவுக் கலைவிழா நாளை

(கிளிநொச்சி)

பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக்கலூரியும் யோகர் சுவாமிகள் நற்பணி மன்றமும் காவேரி கலா மன்றமும் இணைந்து நடத்தும் மாதாந்த முழுநிலவுக் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கல்லூரிவளாகத்தில் கல்லூரி இயக்குநர் க.சௌந்தரராஜா தலை மையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் விருந் தினர்களாக கிளிநொச்சி மூத்த ஓவியக்கலைஞர் கலாபூஷணம் பென்சமின் திருச்செல்வன், கனகபுரம் மூத்த குடிமகனார் கார்திகேசு பேரின்பவேலுப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இதன்போது பிளேட் குறும்பட இறுவெட்டு வெளி யீடு, தேடல் நிகழ்வு, விநாடி வினாப்போட்டி, நிலவின் முற்றம் பாகம்-06 இறுவெட்டு வெளியீடு என்பன இடம்பெறும். (2)

# நாகையில் 13ஆம் திகதி முதல்
# மீனவர்கள் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டம்

இலங்கை அரசை கண்டித்து நாளை மறுதினம் 13 ஆம் திகதி முதல் காலவரையறையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடுவது என்று நாகையில் நடந்த 6 மாவட்ட மீனவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நாகை அக்கரைப்பேட்டை பகுதியை சேர்ந்த 8 மீனவர்கள் கடந்த 3ஆம் திகதி இந்திய எல்லையில் மீன் பிடித்து கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி வந்து மீன் பிடித்ததாக கூறி சிறைபிடித்து சென்றனர்.

அதேபோல் கடந்த 6ஆம் திகதி இந்தியா-இலங்கை இடையிலான ஆதம்பிரிட்ஜ் என்ற இடத்தில் நடுக்கடலில் மீன்பிடித்து கொண்டிருந்த ராமேஸ்வரம் தங்கச்சிமடத்தை சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில் தங்கச்சி மடத்தை சேர்ந்த பிரிட்ஜோ (21) என்பவர் குண்டு பாய்ந்து உயிரிழந்தார். மேலும், 3 பேர் காயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து நாகை அக்கரைப்பேட்டை சமுதாய கூடத்தில் கடந்த 7ஆம் திகதி நாகை தாலுகா மீனவர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மீனவர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது எனவும், அடுத்தகட்ட போராட்டம் குறித்து 9ஆம் திகதி (நேற்று முன்தினம்) முடிவு செய்யப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி நேற்று முன்தினம் நாகை மீன்பிடி துறைமுக அலுவலக கட்டடத்தில் அக்கரைப்பேட்டை மீனவ பஞ்சாயத்தார்கள் தலைமையில், ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, காரைக்கால் ஆகிய 6 மாவட்ட மீனவ பஞ்சாயத்தார்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னதாக இலங்கை கடற்படையின் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த மீனவர் பிரிட்ஜோவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கை கடற்படையினை கண்டித்து ராமேஸ்வரத்தில் நடைபெறும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஏனைய மாவட்டத்தை சேர்ந்த மீனவர்களும் கலந்து கொள்வது. இலங்கை அரசை கண்டித்து 13ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அந்தந்த மாவட்டத்தில் மீனவர்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை காலவரையறையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடுவது. 6 மாவட்ட மீனவர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது.

இந்த போராட்டம் சம்பந்தமாக எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும் 6 மாவட்ட பிரதிநிதிகள் ஒன்றுகூடி எடுப்பது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (இ-12)

# நான் தீர்ப்பையும் மாற்ற மாட்டேன்
# சண்டித்தனத்துக்கும் சளைக்கேன்
# சபாநாயகர் கருஜயசூரிய சவால்



(நேற்றைய தொடர்ச்சி...)

இதன்போது, குறுக்கிட்டு ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய பீல்ட் மார்ஷல் அமைச்சர் சரத் பொன்சேகா, விமல் சிறையில் இருந்து வந்து கதைக்கின்றார். நான் கைது செய்யப்பட்டபோது நாடாளுமன்றக் குழு விவாதங்களில் கலந்து கொள்ளவே எனக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இந்நிலையில், விமலுக்கு மட்டும் எப்படி அனுமதி வழங்க முடியும் எனக் கேட்டார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், நீதிமன்றின் அனுமதியுடனேயே விமல் கலந்து கொண்டுள்ளார். இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று விடயத்தை நகர்த்துவதற்கு முயன்றார். எனினும், சபையை அடுத்தகட்ட நடவடிக்கைக்கு கொண்டு செல்ல விடாதவாறு தினேஷ், விமல் ஆகியோர் தொடர்ந்தும் கூச்சலிட்டனர்.

இதன் போது, கூச்சலிடுபவர்களை வெளியேற்றிவிட்டு சபை நடவடிக்கையை தொடருங்கள் என்று ஆளும் தரப்பு உறுப்பினரான ஹெக்டர் ஹப்புஹாமி, சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார். அதன்போது குறுக்கிட்ட சபாநாயகர், நீங்கள் இவ்வாறு தொடர்ச்சியாக சபை நடவடிக்கைகளை முன்னெடுக்க விடாமல் குழப்பிக் கொண்டிருந்தால் நான் நிலையியற் கட்டளைக்கு இணங்க உங்களை வெளியேற்ற வேண்டியேற்படும்.

தயவு செய்து இவ்விடயத்தைக் கேலியாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று எச்சரிக்கை செய்தார். அதனைக் கவனத்தில் எடுக்காத தினேஷ் எம்.பி. உள்ளிட்டோர் தொடர்ந்து கூச்சலிட்டனர் இந்நிலையில், இரண்டாவது தடவையாக சபை அமர்வுகள் 2.10 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டு 2.30 மணிக்கு மீண்டும் சபை கூடியது.

இதனையடுத்து, சபையில் மீண்டும் குழப்பம் ஏற்பட சபை அமர்வு 2.10 மணிக்கு 10 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது. மீண்டும் 2.25 மணியளவில் ஆரம்பமான சபை அமர்வுகளின் போது, தினேஷ் குணவர்த்தன தொடர்ந்து சத்தமிட்டு, வாதமிட்டார். இதன்போது, எழுந்த பந்துல குணவர்த்தன எம்.பி, "நாம் கொலைகாரர்கள் அல்ல" உறுப்பினர்களின் உரிமைக்காகவே தினேஷ் குரல் கொடுக்கிறார் என்றார்.

### வழமைதானே

தினேஷ் எம்.பியும் எழுந்து நின்று, "பிரச்சினையொன்று ஏற்பட்டால் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்படுவது தானே வழமை. ஏன், இவ்விடயத்தில் எவ்வித கலந்துரையாடலும் நீங்கள் மேற்கொள்ளவில்லை" என்று சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார். இதற்கு, "இவ்விடயம் தொடர்பில் பல தடவைகள் நாம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடிவிட்டோம். இதற்கு மேல் கலந்துரையாட ஒன்றுமில்லை என்பதால் தான், நாம் விமலின் கோரிக்கை தொடர்பில் இவ்வாறானதொரு தீர்ப்பினை வெளியிட்டோம் என சபாநாயகர், தினேஷ்"க்கு பதில் வழங்க, மீண்டும் சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

இதனால் கோபமடைந்த சபாநாயகர், நான் இனி முடிவை மாற்றமாட்டேன். சொன்னது சொன்னது தான். விமல் வீரவன்சவின் கட்சி நாடாளுமன்றில் தனித்து செயற்பட முடியாது என்றார்.

### வாக்கெடுப்பு கோரினார்

சபாநாயகர் பலமுறை கூறியும் கேட்காததால், தினேஷ் எம்.பியை வெளியேற்றுமாறு சபையின் படைக்கல சேவிதர்களுக்கு உத்தரவிட்டதுடன், பொலிஸாரை பயன்படுத்துமாறு கூறினார். அத்துடன் 2.40 மணியளவில் 3ஆவது முறையாக சபையை ஒத்திவைத்தார். சபை நடவடிக்கை 3.10 மணியளவில் மீண்டும் ஆரம்பமான போது, சபாநாயகரின் கட்டளையை மீறி, சபையில் இருந்தமையால் சபை நடவடிக்கையில் பங்கேற்க தினேஷ் குணவர்தனவுக்கு ஒருவார கால தடை விதிக்குமாறு, சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரினார்.

அத்துடன் வாக்கெடுப்பு நடத்துமாறு கோரினார். அதனையடுத்து, உறுப்பினர்களின் பெயர் குறிப்பிட்டு வாக்கெடுப்பு நடைபெற்றது. இதன் போது, ஆதரவாக 85 வாக்குகளும் எதிராக 22 வாக்குகளும் அளிக்கப்பட்டதுடன் மூன்று உறுப்பினர்கள் வாக்களிக்க விரும்பவில்லை. அத்துடன் 104 பேர் சமுகமளிக்கவில்லை. இதனையடுத்து, சபை நடவடிக்கையில் கலந்துகொள்ள தினேஷ் குணவர்த்தன எம்.பிக்கு ஒருவார கால தடை விதிக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்வதாக தெரிவித்து வெளியேறினர். (முற்றும்)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் — 108

## உதயமாகியது முதலாவது உழவர் கம்பனி



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வடபுலத்து உழவர் பெருமக்களுக்கு 02.03.2017 ஆம் திகதி மிகவும் மகிழ்ச்சிக்குரிய நாள். உழவர்களால் உழவர்களுக்கென ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது உழவர் கம்பனி. அதற்கும் மேலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் (விவசாயபீட) எமது சமூகமும் இணைந்த (University–Community interaction) ஒருகைங்கரியம். கனடா நாட்டினது அனுசரணையுடன் UNDP திட்டத்தினூடாக விவசாய திணைக்களம் மற்றும் அரச அதிபர் பணிமனை, உதவி அரசாங்க அதிபர் பணிமனை என பலரிணைந்து உருவாக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரியது. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கவிருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும். இது கீதையருக்க வேண்டியிருந்தது. இது உழவர் பெருமக்களால் உழவர்களுக்கு மட்டுமல்லாது நாட்டின் பிரஜைகள் அனைவருக்கும் அவசியம் தேவைப்படுகின்ற நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்வதற்கான அரியவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது. நஞ்சற்றதேசம் என்பது மிகமுக்கிய கொள்கையாக எமது அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டிருந்தாலும் அது என்று நடைமுறைச்சாத்தியமாகின்றதோ அதுவே பெரு வெற்றியாக அங்கீகரிக்கப்படும். அந்த வகையில் நஞ்சற்ற தேசத்திற்கு அடிகோலாக நடைபெற்று முடிந்திருக்கின்றது உழவர் கம்பனியின் உருவாக்கம். Green Visva Lanka Farm Developers (Guranteed) Ltd என்னும் உழவர் கம்பனி சங்கானையில் தொட்டிலடி என்னும் ஊரில்விலா வெளிப்பாதையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இது மக்களின் சுகவாழ்வைக் கனவர்கள் ஆகியோரினுடைய கனவு நனவாகியிருக்கின்ற நாள் இது. இந்த நிறுவனத்தின் ஊழியர்கள் பலரினுடைய தன்னம்பிக்கையை ஆரம்பத்தில் கண்டறிந்து வியந்ததோடு மட்டுமல்லாது க.பொ.த உயர்தரம் வரை கற்ற பெண்கள் இருவரை அவர்களது விருப்பத்திற்கிணங்க வேண்டிய ஆய்வுகூட பயிற்சிகளை குறிப்பாக உயிருரம் மற்றும் உயிர்க்காரணிகளை உற்பத்தி செய்தல் பற்றிய செயன்முறைப் பயிற்சிகளை யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறையினுடைய ஆய்வுகூடத்தில் தொடர்ச்சியாக வழங்கி அதன் மூலம் அவர்களை வளப்படுத்தியதால் சிறிது சிறிதாக வட்டுக்கோட்டை நிறுவனத்தில் ஆரம்பித்த உயிரிரசாயன மற்றும் உயிர்க்காரணிகள் உற்பத்தி ஆரம்பத்தில் மிகச் சிறியளவில் நிறுவனத்தில் இணைப்பிலிருந்த காக்கான பரிந்துரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிறுவனத்தின் உற்பத்திகளை சந்தைப்படுத்தவும் நிறுவனத்தின் செயற்பாடுகளை கண்காணிக்கவும் இன்னும் இதனது வளர்ச்சியை பெருக்கவும் அரச அதிபரின் திட்டமிடலின் கீழ் முகாமைத்துவ சபையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. உற்பத்திப் பொருட்களின் தரம் மற்றும் அவற்றின் பயன்பாடுகளை மெருகூட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவும் ஆரம்பிக்கப்படுகின்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் பலர் இங்கு வருகைதந்து தங்களது ஆய்வினை செய்வதும் குறிப்பிடத்தக்கது. மேலும் உற்பத்திப் பொருட்களின் தரம், அவற்றினது பயன்பாடுபற்றி கண்காணிக்கவும் வேண்டிய தொழில்நுட்ப உதவிகளை வழங்க யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பல்துறைசார் விற்பன்னர்ளுக்கும் அதிகம் பயன்படும் என அறிந்து எழுதும் இக்கைகள் மகிழ்வடைகின்றன. இந்த நிறுவனத்தின் இந்த உயர்வுக்கு விவசாயபீட ஆய்வு மாணவர்களும் உள்வாங்கப்பட்டு பல ஆய்வுகளை செய்து அவற்றின் பெறுபேறுகளை உழவர் பெருமக்களுக்கே வழங்கப்பட்டு அவை

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 124

யில் பகவான் அருளியது. அது நடப்பு ஆண்டில் நடைமுறையில் கண்முன்னே விரிந்திருக்கின்றது. இது எப்படி சாத்தியமானது என்னும் பலமானவினா பலரிடமும் எழுந்திருக்கின்றது. அதுவும் பீடை நாசினிகளாலும் நஞ்சு கலந்த உணவு உற்பத்தி செய்யும் பிரதேசத்திலிருந்தும் உருவாக்கம் பெற்றிருக்கின்றது. இதனது வெற்றிக்கு பின்னால் இந்த நிறுவனத்தினர் பல வலிகளையும் அவ்வப்போது சேர்த்தே உள்வாங்கி, மனதளவில் நொந்து, பொருள் வன்மையின்றி தள்ளாடி, வளர்ச்சிபெற வேண்டியதாயிற்று என்பது ஒரு கசப்பான அனுபவமே. இன்னும் வலிகள் தம் வலிமை குன்றாது அடிமேல் அடியடிக்க எத்தனிக்கின்றன என்பதனையும் உதயமானதின நிகழ்வில் கலந்து சிறப்பித்த அனைவரும் உள்ளுணர்ந்து கொண்டனர் என்பது தற்போதைக்கு ஒரு ஆறுதலாக இருந்தாலும் இந்த பூமி சிறக்க, எம்மினிய உறவுகள் நலமாகவாழ, மேலைத்தேயம் எமக்கு அள்ளித்தந்த பீடைநாசினிகளையும் அசேதன இரசாயனங்களையும் நாம் அள்ளி உண்டு தற்போது எமது சந்ததியே வளங்குன்றியதாக பலவித நோய்களுடனும் அல்லலுற்று வலம் வருவதைப் பார்த்தும் கூட எந்தவித கரிசனையும் இல்லாமல் இருந்தகாலகட்டத்தில் அதற்கு மாற்று வழியை சிந்தித்து கற்றறிவையும் பட்டறிவையும் மூலதனமாக்கிகிட்டத்தட்ட 12 ஆண்டுகளுக்குமுன்னர் சிந்தித்தசெயல் தற்துணிச்சலுடன் தற்போது பலரும் மகிழ நிறைவேறியிருக்கின்றது.

உழவர்க்கென ஒரு கம்பனி உருவாகவேண்டும் என்ற கனவோடு பல ஆண்டுகள் தவமி




கருத்தில் கொண்ட குறிப்பாக உழவர்களைப் பொறுத்தவரையில் ஒரு கனவென்றே சொல்லலாம். கடின முயற்சி, அதீத ஈடுபாடு, உயர்ச்சி நோக்கிய எண்ணம், சளைக்காத மனப்பாங்கு, அலைச்சலால் வெதும்பிய உள்ளம், சற்றேனும் விட்டுக்கொடுக்காத உயரிய எண்ணம் எனஅனைத்தையும் உள்வாங்கி உயர்ந்திருக்கின்றது இந்த உழவர் கம்பனி.

இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்னர் வலம்புரி பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிய கட்டுரைகளினூடாக ஈர்க்கப்பட்டு அதன்மூலம் அசேதன இரசாயனங்களுக்கு மாற்று வழிதேடிய போது கிடைத்த செய்திகளை உள்ளார்ந்து அலசியாராய்ந்து தம்மை அதற்குள் உள்வாங்கி தமது விருப்பத்தை தெரிவித்த வட்டுக்கோட்டை நிறுவனத்தின் உழவர் பெருமக்கள் அங்கிருந்த மகளிர் அங்கத்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு அதன் நன்மைகளை அனுவப ரீதியாக கண்டறிந்தபின் உற்பத்தியை சிறிது சிறிதாக உயர்த்த முற்பட்டனர். அதற்கு அவர்களிடமிருந்த பணபலம் ஒருதடையாகவே இருந்தது. உழவர்கள் கூடிய நிறுவனமொன்றில் அதனை எதிர்பார்ப்பதும் தவறு. இந்த நிலையில் கனடாவின் நிதியுதவியுடனான உதவிக்கரம் UNDP நிறுவனத்தின் மூலமாக இவர்களுக்கு கிடைத்தது. நீண்டதிட்டமிடலின் விளைவாக பலத்த எதிர்பார்ப்புக்களுடன் இந்த நிறுவனம் தற்போது சிறந்த கட்டட வசதிகளுடன் தொட்டிலடியில் தேவையான ஆய்வுகூட உபகரணங்களுடன் இன்று தன்னை முழுமையாக கால்பதித்து உயர்ந்து நிற்கின்றது. கன்னொருவவிலுள்ள விவசாயத் திணைக்களத்தினால் (HORDI) முழுமையான பயிற்சிகளும் வழங்கப்பட்டு அதற்களுடன் இலங்கை நுண்ணாங்கியியலாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையும் இணைந்திருக்கின்றன. உழவர் பெருமக்களுக்குஅவசியம் தேவையான இத்தகையஉற்பத்திகளின் அளவு விரைந்து அதிகரிக்கப்படவேண்டும் என்பதுடன் இவற்றைப் பயன்படுத்தும் போது எமது உழவர் பெருமக்கள் அசேதன இரசாயனப் பாவனையை விடுத்து சேதன விவசாயத்தை பயன்படுத்த ஊக்குவிக்கப்படவிருக்கின்றனர். அதற்கு இத்தகைய உற்பத்திகள் அவசியமாக தேவைப்படுகின்றன.

ஒவ்வொரு கிராமத்தின் வளர்ச்சியே அத்னூடான எழுச்சியே எமது நாட்டின் முழுமையான அபிவிருத்தி என்னும் கருத்துக்கிணங்க இப்படியொரு சிறப்பான முயற்சி கடின உழைப்புக்கு மத்தியில் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தியாகும் பொருட்கள் உழவர் பெருமக்களுக்கும் பொதுமக்கசிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த தேசத்தின் முதல் முயற்சியாக சிறந்த முயற்சியாக இந்த உழவர் கம்பனி அமைந்திருக்கின்றது எனலாம். சேதன முறை மூலமாக உற்பத்தியாகும் தரமான பொருட்கள் உலக சந்தையை எட்டிப்பார்க்கும் காலம் வெகு தூரத்திலில்லை. தொட்டிலடியிலிந்து இலங்கை முழுக்க எம்மினிய உறவுகள் பயன்படுத்துவதற்காக இதனது உற்பத்தியும் சந்தைவாய்ப்பும் அதிகரிக்க இருக்கின்றமை நல்ல செய்தியாகும். இந்த உதய நிகழ்வுக்கு வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசனும் UNDயின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிபர், உப அதிபர் மற்றும் இலங்கை நுண்ணாங்கியியலாளர் சங்கத்தின் யாழ்க்கிளை உறுப்பினர்களும் உழவர் பெருமக்கள் அனைவரும் கலந்து சிறப்பித்த நல்ல நிகழ்வாக இது அமைந்திருக்கின்றது.

இந்த செயற்பாடு சிறந்த ஒரு முன்னுதாரணமாக உயிருர உற்பத்தியை ஆரம்பித்திருக்கின்ற வல்லமையை பாராட்டியே ஆகவேண்டும். இதற்கு நிகழ்வின் ஆரம்பத்திற்கு முன்னராக இயற்கையும் மழை மூலமாக ஆசீவதித்திருப்பதனை நல்லதொரு பாக்கியமாக கருத வேண்டும். இடர்களைந்துநின் கனவு சிறக்க இன்னும் ஆக்கபூர்வமாக சிந்திக்க உழவர்களுக்கு தேவையான இவ்வாறான நிறுவன உருவாக்கம் பலத்த எதிர்பார்ப்புக்களையும் நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்யவும் பாடுபடும் எனலாம். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்வீணில்உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்.

# ஊழல் மோசடியில் சிக்கிய

# ஜனாதிபதி பதவி நீக்கம் உச்ச நீதிமன்று உத்தரவு

## தென் கொரியாவில் பரபரப்பு



(சியோல்)

தென் கொரிய ஜனாதிபதி பார்க் கியுன் ஹே-வை பதவி நீக்கம் செய்து அந்நாட்டின் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தென்கொரிய ஜனாதிபதி பார்க் கியுன் ஹே தலைமையிலான அரசின் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் பெருகி வருகிறது. ஜனாதிபதியின் நெருங்கிய தோழியான சோய் சூன் சில் அரசு விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாகவும் அரசின் மிக முக்கிய ரகசிய கோப்புகளை ஆய்வு செய்து வருவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

மேலும், ஜனாதிபதியுடன் தனக்கு இருக்கும் நெருக்கத்தை பயன்படுத்தி, பல நிறுவனங்களிடம் இருந்தும் நன்கொடைகளை பெற்று, இவர் ஆதாயம் அடைந்து வருவதாகவும் அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் ஆதாரங்களுடன் குற்றம் சுமத்தின.

இதையடுத்து, சோய் சூன் சில் கைது செய்யப்பட்டார். அவர்மீது பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் விசாரணை நடைபெற்றும், வழக்குகள் பதிவு செய்யப்பட்டும் வருகிறது.

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருக்கும் சோய் சூன் சில்லுடன் தொடர்பு வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் 'சாம்சங்' எலக்ட்ரோனிக்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான அலுவலகங்களில் அந்நாட்டு அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

தனது தோழியின் செயலுக்கு வருத்தம் தெரிவித்த ஜனாதிபதி பார்க் கியுன் ஹே, இவ்விவகாரத்தில் மக்களிடம் வெளிப்படையாக மன்னிப்பும் கேட்டார். இதற்கிடையில், ஜனாதிபதி பார்க் கியூன் ஹே, அரசுப் பணத்தை செலவிட்டு வயாகரா மாத்திரைகளை அதிகளவில் வாங்கி இருப்பது தெரிய வந்துள்ளது.

இதுபற்றி ஜனாதிபதி மாளிகை அளித்த விளக்கத்தில் ஆபிரிக்கா உள்ளிட்ட கடல்மட்டத்துக்கு மேலே அமைந்துள்ள நாடுகளுக்கு ஜனாதிபதி செல்லும்போது அவருடன் செல்லும் அதிகாரிகளுக்கு ஏற்படும் படபடப்பை போக்க இந்த மாத்திரைகள் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.


ஆனால், இந்த விளக்கத்தை எதிர்க்கட்சியினரும் பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதி பார்க் கியூன் ஹே உடனடியாக பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையுடன் சுமார் 13 இலட்சம் மக்கள் பங்கேற்ற பேரணியும் ஆர்ப்பாட்டமும் சியோல் நகரில் கடந்த ஆண்டில் நடைபெற்றது. இதையடுத்து, பாராளுமன்றத்தில் பார்க் கியூன் ஹே-வுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

பாராளுமன்றத்தின் தீர்மானத்தை எதிர்த்து பார்க் கியூன் ஹே அந்நாட்டின் அரசியலமைப்பு சட்ட உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். இந்த முறையீட்டின் மீது விசாரணை நடத்திய நீதிபதி, பார்க் கியூன் ஹே-வை பாராளுமன்றம் பதவி நீக்கம் செய்தது செல்லும், அவர் உடனடியாக பதவியில் இருந்து நீக்கப்படுகிறார் என நேற்று அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நாட்டின் ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றுக்கு எதிராக ஜனாதிபதி பதவியில் இருந்தவாறு பார்க் கியூன் ஹே செயற்பட்டுள்ளது நிரூபணம் ஆகியுள்ளதால் அவரை ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்கி உத்தரவிடுகிறேன் என நீதிபதி லீ ஜுங் மி தனது உத்தரவில் தெரிவித்துள்ளார். (இ-12)

## நெடுவாசல் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்



நெடுவாசலில்நடந்த போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர். மத்திய, மாநில அரசுகளின் வேண்டுகோளை ஏற்று போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்திக் கொள்வதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

மக்கள் விருப்பத்திற்கு மாறாக இயற்கை எரிவாயு திட்டம் செயற்படுத்தப்பட மாட்டாது என்று மத்திய, மாநில அரசுகள் தெரிவித்ததை ஏற்று நெடுவாசல் போராட்டம் தற்காலிகமாக வாபஸ் பெறப்பட்டுள்ளதாகவும் கோரிக்கை நிறைவேறா விட்டால் போராட்டம் மீண்டும் தொடங்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசலில் எரிவாயு எடுக்க மத்திய அரசு அனுமதி அளித்ததனை எதிர்த்து நெடுவாசலில் 22 நாட்களாக தொடர் போராட்டம் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## ஜெயலலிதாவின் மரணம் குறித்து பன்னீர்செல்வம் அவதூறு பிரசாரம்

### தினகரன் கடும் கண்டனம்



மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வழங்கிய சிகிச்சைகள் குறித்து ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் அவதூறு பிரசாரம் செய்வதாக அ.தி.மு.க துணை பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து நேற்று முன்தினம் டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

"அமைச்சர் ஆசனத்தில் தன்னை அமர வைத்த கட்சியை நான்காவது முறையாக தனக்கு தரவில்லை என்பதற்காக கட்சியை அழிப்பதற்கு எதிரிகளோடு சேர்ந்து, திரைமறைவில் துரோகச் சதியில் ஈடுபட்ட பன்னீர் செல்வத்தின் மொத்த முகத்திரை முழுவதுமாக கிழிந்து தொங்குகின்ற நிலையில், அம்மாவின் மரணத்தில் மர்மம் என்கிற அவதூறு பிரசாரத்தை முன்வைத்து பிழைக்கப் பார்க்கிறார்.

அம்மா கட்டிக்காத்த தனி மனித சுதந்திரத்தை பன்னீர் செல்வம் தமது பதவி பேராசைக்காக பலிகொடுப்பதோடு, மருத்துவத் தொழிலை களங்கப்படுத்தியும் உயிர் காக்கும் மருத்துவர்களை கூலிப் படையினர் போல சித்தரித்தும் வருகிறார்.

'அம்மாவின் உடம்பிலே காயம், இந்திய தொலைக்காட்சி நாளை ஆவணங்களோடு அம்பலப்படுத்தப் போகிறது' என்றெல்லாம் நித்தம் ஒரு கதையை கூறி புரட்சித் தலைவி அம்மாவின் பொன்னேட்டுச் சரித்திரத்தை அவதூறுகளால் களங்கப்படுத்த பன்னீர் முனைகின்றார்.

மத்திய அரசின் எய்ம்ஸ் மருத்துவக் குழு அறிக்கை, அப்பலோ மருத்துவமனை அறிக்கை, லண்டன் மருத்துவரின் அறிக்கை, இவற்றோடு உச்சநீதிமன்றமே ஏற்றுக்கொண்ட மருத்துவ அறிக்கைகள் யாவும் அம்மாவின் இயற்கை மரணத்தில் எந்தவித ஐயப்பாடுகளும் இல்லை என்பதையும், அவருக்கு உலகத்தர சிகிச்சை அளிக்கப்பட்டது என்பதையும் உறுதி செய்துவிட்ட நிலையில், தமது அரசியல் வாழ்க்கை அஸ்தமனத்தை நோக்கி விரைகிறது என்னும் அச்சத்தில் பன்னீர் மர்மம், மர்மம் என்ற ஒற்றைப் பொய்யை திரும்பத் திரும்ப கூறி அதனை உண்மையாக்கி விடலாம் என்று நினைக்கின்றார்.


அவர் இழைக்கும் துரோகத்திலும், அடுத்தவர் மீது அவர் தொடுக்கும் அடுக்காத பாவத்திலும் அவரே வீழ்ந்து போவார் என்பது மட்டும் நிச்சயம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-12)

## சர்வதேச தடைகளை பொருட்படுத்தாது

# சக்தி வாய்ந்த ஏவுகணையை செலுத்தி வெற்றிகரமாக பரிசோதித்தது ஈரான்

(தெஹ்ரான்)

சர்வதேச தடைகளை மீறும் வகையில் கண்டம் விட்டு கண்டம்பாய்ந்து சென்று தாக்கும் சக்தி வாய்ந்த ஏவுகணையை ஈரான் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.



அணு ஆயுதங்கள் தயாரிப்பு, தடை செய்யப்பட்ட ஏவுகணை பரிசோதனை போன்றவற்றில் ஈடுபட்டு வந்த பாரசீக வளைகுடா நாடுகளில் ஒன்றான ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் பொருளாதாரத் தடை உள்ளிட்ட பல்வேறு தடைகளை விதித்துள்ளன.

இந்நிலையில், இந்த தடைகளை எல்லாம் பொருட்படுத்தாமல் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் சக்தி வாய்ந்த ஏவுகணையை கடந்த வாரம் ஈரான் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

கடலில் இருந்து ஏவப்படும் 'ஹோமுஸ் 2' என்ற இந்த ஏவுகணை சுமார் 250 கிலோமீற்றர் தூரத்தில் வானில் நிர்ணயிக்கப்பட்டிருந்த இலக்கை வெற்றிகரமாக தாக்கி அழித்ததாக ஈரான் நாட்டு விமானப் படை தளபதி ஜெனரல் அமிர் அலி ஹாஜிஸாதே தெரிவித்தார்.

ஈரான் நாட்டின் மத்தியில் உள்ள பாலைவனப் பகுதியில் கடந்த மாதம் ஈரான் இராணுவம் போர் ஒத்திகையில் ஈடுபட்ட போதும் பல்வேறு வகையான ஏவுகணைகள் பரிசோதிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது. (இ-12)




# சிரியாவில் அமெ. கூட்டணி தாக்குதல் குழந்தைகள் உட்பட 14 பேர் உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள அல்-மதாப் கிராமத்தில் அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடத்திய விமான தாக்குதலில் ஆறு குழந்தைகள் உட்பட 14 பேர் உயிரிழந்துள்ளதாக கண்காணிப்பு குழுவொன்று தெரிவித்துள்ளது.

சிரியாவின் அல்-ரக்கா நகரை அண்மித்த பகுதியில், தீவிரவாதிகளின் கோட்டையாக திகழ்ந்துவரும் கிராமத்திலேயே குறித்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விமான தாக்குதலில் 18 பேர் உயிரிழந்துள்ளதாக எதிர்த்தரப்பு வட்டாரத் தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும், அந்த எண்ணிக்கை உறுதிப்படுத்தப்படவில்லை.

அமெரிக்க விமான தாக்குதல்களில் சிரிய பொதுமக்கள், இராணுவம் மற்றும் அரச உட்கட்டமைப்புகள் இலக்கு வைக்கப்படுவதாக பரவலான குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், அதனை மறுத்த அமெரிக்கா தலைமையிலான கூட்டணி, தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை விடுவிக்கும் நோக்கிலேயே தாம் சிரிய ஜனநாயக படையினருடன் இணைந்து போரிட்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (இ-12)

# பேருந்து விபத்துக்குள்ளானதில் பயணிகள் 24 பேர் உயிரிழப்பு

நேபாளத்தில் 60 பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து ஒன்று நேற்றுக் காலை விபத்துக்குள்ளானதில் 24 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்துள்ளனர்.


மேற்கு நேபாளத்தின் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த பேருந்து, வீதி மேடும் பள்ளமுமாக இருந்ததன் காரணமாக பள்ளத்தில் உருண்டு விழுந்து விபத்துள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.



காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேருந்து மிக வேகமாக சென்றதனால் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-12)

# சவாலை எதிர்நோக்கியுள்ள ட்ரம்பின் புதிய பயணத்தடை



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட புதிய பயணத்தடையை தடுத்து நிறுத்தும் வகையில், அமெரிக்காவின் ஹவாய் மாநில அரசு நீதிமன்றத்தில் அவசர தடை ஆணை கோரியுள்ளது.

புதிய பயணத்தடையானது, அடிப்படையில் ஏற்கனவே இருந்த பயணத் தடையை ஒத்ததாகும் எனக் குறிப்பிட்டுள்ள அரச தலைமை சட்டத்தரணி, இது முஸ்லிம்கள் மீதான தடையின் இரண்டாம் பாகம் எனத் தெரிவித்தார்.

எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ள குறித்த பயணத்தடையில், ஆறு முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளுக்கு 90 நாட்கள் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து அகதிகளுக்கும் 120 நாட்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ட்ரம்பினால் விதிக்கப்பட்ட முஸ்லிம்கள் மீதான தடையில் காணப்பட்ட உள்ளடக்கங்களில் எவ்வித மாற்றமும் இன்றி தற்போதைய புதிய பயணத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது என்றும் அரச சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இப்பயணத்தடையின் பிரகாரம் ஈரான், லிபியா, சிரியா, சோமாலியா, சூடான் மற்றும் யேமன் ஆகிய நாடுகளுக்கு 90 நாட்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பயணத்தடை விதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலிலிருந்து இம்முறை ஈராக் நீக்கப்பட்டுள்ளது மாத்திரமே மாற்றமாகும்.

ட்ரம்பின் புதிய பயணத் தடை எதிர்நோக்கியுள்ள முதல் சட்ட சவால் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

## சிரியாவில் போர் பதற்றம் மேலும் அதிகரிப்பு

# ஆயுதமேந்திய கடற்படையினரை நிலைநிறுத்தியது அமெரிக்கா



ஐ.எஸ். தீவிரவாதிகளின் கோட்டையாக திகழும் சிரியாவின் அல்-றக்கா நகரிலிருந்து தீவிரவாதிகளை முற்றாக விரட்டியடிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அதன் ஒரு அங்கமாக பீரங்கி துப்பாக்கிகளுடன் நூற்றுக்கணக்கான கடற்படையினர் அங்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக பென்டகன் பேச்சாளர் தெரிவித்தார்.

அதன்படி பதற்றமான சூழ்நிலை நிலவும் பகுதிகளில் அமெரிக்க கொடியுடன் கூடிய ஆயுதமேந்திய கவச வாகனங்கள் பாரியளவில் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

உள்ளூர் சிரிய படையினருக்கு உதவும் வகையில் கடற்படையினர் எப்போதும் விழிப்புடன் தயார் நிலையில் காணப்படுவர் எனவும் பென்டகன் பேச்சாளர் தெரிவித்தார்.

சிரியாவில் அமெரிக்க துருப்புக்களை நிலைநிறுத்தும் நடவடிக்கை தற்காலிகமானது என்கின்ற போதிலும், இது தீவிரவாதத்திற்கு எதிரான வெள்ளை மாளிகையின் ஆதரவை வெளிப்படுத்துவதாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குவைத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக போராட வேண்டி தேவை ஏற்பட்டால் ஆயிரம் துருப்புக்களை அனுப்புவதற்கு தயாராக உள்ளதாவும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. (இ-12)

# மாசி மக மகத்துவம்



மாசி மாதத்தில் வரும் மக நட்சத்திரம் சிறப்பான ஒன்று. ஒரு சமயம் வருண பகவா னைப் பீடித்த பிரம்ம ஹத்தி தோஷம் அவரைச் சமுத்திரத்தினுள் கட்டி வைத்திருந்தது. தேவர்களின்வேண்டுதலுக்கிணங்கிச் சிவ பெருமான் எழுந்தருளி வருணனின் கட்டை அறுத்தருளினார். அத்தினம் மாசிமகம். வருணன்அப்போதுசிவபிரானிடம் மாசிமக நாளில் சமுத்திரம், நதி முதலியவற்றில் புண்ணிய தீர்த்தமாடுவோரின் பாசத்தளைகளை நீக்கி முத்தி கொடுக்க வேண்டும் எனப் பிரார்த்தித்தார்.

மக நட்சத்திரக் கூட்டம் வெட்டரிவாள்போல்வளைந்து கரையாக இருக்க அதனிடையே பூரண சந்திரன் கடல்போலத் தோன்றும் இந்தநாளிலே கடலாடுவிழா நடைபெறுவது பொருத்தமானதன்றோ?

இறைவன் கடலாக உருவகிக்கப்படுகின்றான். தீர்த்தன் என இறைவனைக் கூறுவதுண்டு. கடலாடுதல் தீவினைப்பயன் கழிதலையும் அருளில் மூழ்குதலையும் குறிக்கும்.

தக்கன் மகள் தாட்சாயணியாக உமாதேவியார் அவதரித்த நாளும் மாசிமகம் என்பர். பிரஹஸ்பதி என்னும் வியாழ பகவான் மக நட்சத்திரத்துடன் கூடிக் கும்ப ராசிக்குச் செல்லும் போது மஹா மகம் எனப்படும். இவ்விதம் பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை வருகிறது. மஹா மகம் என்பது மாமாங்கம் என மருவி வழங்குகிறது. இது பாரதத்தில் கும்பகோணத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும். வட இந்தியாவில் இதனைக் கும்ப மேளா என்று பெருவிழாவாகக் கொண்டாடுவர்.

இத்தினத்தில்கடல் தீர்த்தமாடுவதும் இத்தகைய புண்ணியத்தைத் தரவல்லதாகும்.

மாசிமகத்தில் விரதமிருந்து அன்னதானம் செய்தால் ஆண்குழந்தை பிறக்கும் என்றொரு நம்பிக்கை உண்டு.

இத்தகைய பெருமை வாய்ந்த மாசிமகப் பெருநாளில் சிறப்பு வழிபாடுகளும்அன்னதானமும் எமது தேவஸ்தானத்தில் நீண்ட நாட்கள்நடைபெற்றுவந்தன.

கதிரேச மடம் என்ற மடமும் அதற்காகவே முன்னர் இங்கு அமைந்திருந்தது. இவ் வருடம் மீண்டும் நமது ஆலயத்தில் மாசிமகப் பெருநாள் சிறப்பு விழாவாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்றுகாலை 7 மணிக்கு விசேட பூஜை நடைபெற்று நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான் கடற்கரைக்கு எழுந்தருளி கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தமாட இருக்கிறார். அதனால் அடியவர்கள் திரண்டுவந்து கடல் தீர்த்தமாடிக் கருணைக்கடலானசிவனதுதிருவருளைப் பெறுமாறு அழைக்கின்றோம்.

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சர மமர்ந்தான்
அடலா னேறூரும் அடிகள் அடி பரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்

-திருஞானசம்பந்த சுவாமிகள்

இராஜகோபுரவேலைகள் நிறைவுக்கு வருகின்றன. வைகாசி மாதத்தில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. பெருந்தொகை நிதி தேவைப்படுவதால் அடியார்கள் மனமுவந்து திருப்பணிக்கு நிதியுதவி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆதீனகர்த்தர்.
நகுலேஸ்வரம்,
கீரிமலை

சிவமயம்

உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
மூலமந்திர ஜபயக்ஞ ஸ்கந்த
ஹோமப் பெருவிழா-2017

ஆரம்பம்
08.03.2017
புதன்கிழமை

ஸ்கந்த ஹோமம்
12.03.2017
ஞாயிற்றுக்கிழமை

தினமும் காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை மூலமந்திர ஜபம்

அனைவரும் வருக! அழகன் முருகன் அருள் பெறுக!

Yarl Beauty & Language's Skills College
இல. 17, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்ஷனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை.)
(சி-7697)

# திருட்டுக் குற்றச்சாட்டில் கைதானவர் மறியலில்

பருத்தித்துறை சந்தைக்குள் வியாபாரி ஒருவரிடம் பணத்தை திருடிய சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

சந்தை வியாபாரியின் பட்டறைக்குள் இருந்த 30 ஆயிரம் ரூபா பணம் கடந்த 8 ஆம் திகதி அன்று திருடப்பட்டது. கண்காணிப்பு கமராவின் உதவியுடன் பருத்தித்துறை 3 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்த பருத்தித்துறை பொலிஸார் அவரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)

# மருந்தகங்கள் பதிவு தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)

மருந்தகங்களை பதிவு செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

நாடு பூராகவும் அமைந்துள்ள மருந்தகங்கள் தொடர்பாக தொகை மதிப்பை மேற்கொண்டதன் பின்னர் பதிவு பற்றிய தீர்மானம் எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

அகில இலங்கை மருந்தக உரிமையாளர் சங்கத்துடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார். (இ-7)

# தடையைமீறி வடகொரியாவிலிருந்து வெளியேறிய ஐ.நா.பணியாளர்கள்



(பியாங்யாங்)

வட கொரியாவிலிருந்து வெளியேற தடைவிதிக்கப்பட்ட ஐ.நாவின் இரண்டு பணியாளர்கள் உட்பட 11 மலேசியர்கள் அந்நாட்டைவிட்டு வெளியேறியதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

உலக உணவு திட்டத்தால் பணியமர்த்தப்பட்ட அந்த இருவரும் நேற்று முன்தினம் வியாழக்கிழமையன்று பீஜிங் வந்தடைந்தனர்.

வட கொரிய ஜனாதிபதியின் சகோதரர் கொல்லப்பட்டதையடுத்து, வட கொரியா மற்றும் மலேசியா ஆகிய இரு நாடுகளும் அந்நாடுகளைச் சேர்ந்தவர்கள் பரஸ்பரம் வெளியேற தடைவிதித்தன.

கோலாலம்பூர் விமான நிலையத்தில் கிம் ஜாங் நாம், நச்சு இரசாயனம் தடவிக் கொல்லப்பட்டார் என்று கூறப்படுகிறது.

வட கொரியா மலேசியாவை நேரடியாக குற்றம் சாட்டவில்லை என்றாலும் வட கொரியாவிற்கு இதில் தொடர்பு உள்ளது என பரவலாக சந்தேகங்கள் உள்ளன.

வட கொரியாவால் ஒப்படைக்கப்பட்ட, கொலையில் தொடர்பு உள்ளதாக சந்தேகிக்கப்படும் மூன்று பெண்கள், மலேசியாவில் உள்ள வட கொரியாவின் தூதரகத்தில் மறைந்திருப்பதாக நம்பப்படுகிறது என விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலையில் தனக்கு எந்த தொடர்பும் இல்லை என வட கொரியா தீவிரமாக மறுத்து வருகிறது.

கிம் ஜாங் நாமின் உடலை வாங்குவதற்கு உரிமையுள்ள நபர் கடந்த இரண்டு வாரங்களாக தலைமறைவாக உள்ளார்.


இதேவேளை உலக உணவுத் திட் டம் தனது ஊழியர்கள் சீனாவில் இருப்பதை சிறிய அறிக்கை ஒன்றின் மூலம் உறுதி செய்துள்ளது.



ஊழியர்கள் சர்வதேச உள்நாட்டு பணியாளர் கள், அவர்களின் நாட்டின் பிரதிநிதிகள் இல்லை" என தெரிவித்துள்ளது ஐ.நா வின் பயண ஆவணங் களை வைத்துள்ள மலேசியா, அந்த இருவரின் விடுதலையை தடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-12)

# மகிந்தவின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவோம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை குறைக்காமல் தொடர்ந்தும் பலப்படுத்துவோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, விமல வீரதிஸாநாயக்கவால் எழுப்பப்பட்ட வினாவிற்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க பதிலளித்து கொண்டிருந்தபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆட்சியின்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவின் பாதுகாப்பை குறைத்தது போன்று மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்பட மாட்டாது எனவும் பிரதமர் தெரிவித்தார்.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சின் மூலமாகவே முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவதாகவும் தற்போது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் விசேட பயிற்சிகள் வழங்கப்படுவதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# இரத்மலானை விமான நிலையம் ஊடாக மீள அனைத்துலக விமான போக்குவரத்து

(கொழும்பு)

இரத்மலானை விமான நிலையம் ஊடாக, கடந்த 50 ஆண்டுகளில் முதல் முறையாக அனைத்துலக விமானப் போக்குவரத்து இடம்பெறவுள்ளது.

இலங்கை விமானப்படையினருக்கான பயிற்சி மற்றும் போக்குவரத்து தேவைகளுக்காகவும் உள்நாட்டு விமான முனையமாகவும் செயற்பட்டுவந்த இரத்மலானை விமான நிலையத்தின் ஊடாக மாலைதீவுக்கு விமான சேவை நடத்தப்படவுள்ளது.

மாலைதீவு விமான சேவை, மாலேக்கும் இரத்மலானைக்கும் இடையில் நாளாந்த சேவையை நடத்தவுள்ளது.

மாலைதீவின் சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் மூசா சமீருக்கும், இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களிலேயே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு விரைவில் கையெழுத்திடப்படவுள்ளது. (இ-7)

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவது பாரிய சவால்

## அமைச்சர் சாகல ரத்நாயக்க கவலை

(கொழும்பு)

நாட்டில் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதென்பது பாரிய சவால் மிக்கதொன்றாகும். சட்டத்தால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. அதற்காக சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பும் அவசியமாகும் என சட்டம் ஒழுங்கு மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

சர்வதேச போதைப் பொருள் கட்டுப்பாட்டு சபையின் 2016 ஆண்டறிக்கை வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் இராஜகிரிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)



# மீனவர் சுட்டுக்கொலை விவகாரம் விசாரணையை துரிதப்படுத்துமாறு இலங்கைக்கு இந்தியா அழுத்தம்

(டில்லி)

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர் ஒருவர் கச்சதீவு கடலில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு, இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா அழுத்தம் கொடுத்துள்ளது.

மார்ச் மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு கச்சதீவு கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த மீனவர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றொரு மீனவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்துக்கு தாம் பொறுப்பல்ல என்று இலங்கை கடற்படை கூறிய போதிலும், இதுகுறித்து விசாரணை நடத்துவதாக உறுதியளித்துள்ளது.

இந்த நிலையிலேயே விசாரணைகளை துரிதமாக நடத்துமாறு இந்தியா தரப்பில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

டில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட இந்திய வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் கோபால் பக்லே, இந்த விடயத்தில் உள்ள மனிதாபிமான அம்சத்தைக் கவனத்தில் கொண்டு, தீவிரமாகவும் ஈர்ப்புடனும் விசாரணை மிகமிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது என்று தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## எது சொன்னாலும் குற்றமா?

பாராட்டிக் கொண்டே இருந்தால் உன்னோடு நட்பு இல்லாவிட்டால் துண்டிப்பு என்கிற வாழ்கைப் பார்வை மிகத் தவறானது.

யாரும் வாயைத் திறந்து எதையும் சொல்லிவிடக் கூடாது சிலருக்கு உடனே கோபம் வரும்; அல்லது அழுகை வரும். மறுபடியும் எங்காவது காண நேர்ந்தால் ஒரு வெட்டு வெட்டிக்கொண்டு கழுத்தையே திருப்பிக் கொள்வார்கள்.

என்ன குணம் இது? எது சொன்னாலும் கண்ணீரா? நம் நன்மைக்காக ஒன்றை எடுத்துச் சொல்கிறவர்கள்; நமக்கு வேண்டப்பட்டவர்களா? எதிரிகளா? என்ற தீர்மானத்திற்கு இன்னுமா வரவில்லை? அல்லது குறைகளைச் சுட்டிக்காட்டும் எவரும் நமக்கு ஆகாதவர்கள் என்கிற நிரந்தரத் தீர்மானத்திற்கே வந்தாயிற்றா? நமது பெருந்தவறு.

உருப்படாமல் போய்க் கொண்டிருக்கும் ஒருவரின் நண்பரை இந்த உலகம் என்ன செய்கிறது? ஏம்பா நீயாச்சும் எடுத்துச் சொல்லக்கூடாதா? என்று தானே? அதாவது மிக வேண்டியவர்கள் தாம் குற்றங்குறைகளை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்று இந்த உலகம் எதிர்பார்க்கிறது. இல்லையா? அப்படி இருக்கும் போது நீ வாயைத் திறந் தால் உன்னை நான் சேர்க்க மாட்டேன்; வீணாக என் வெறுப்புக்கு ஆளாகாதே என்று சுற்றியிருந்தவர்களை இவர்கள் (எது சொன்னாலும் குற்றம் என்பார்கள்) எச்சரிப்பது தவறு.

ஏற்கனவே தங்களிடம் இருக்கும் குறைகளே களையப்படாமல் இருக்கும் போது அன்றாடம் புதுப்புதுத் தவறுகளைச் செய்து அதையே பழக்கமாகிக் கொள்கிறவர்கள் இவர்கள்.

வாய் திறந்தால் வம்பு நமக்கு ஏன் பொல்லாப்பு! என்று மற்றவர்கள் எண்ண ஆரம்பித்தால் போதும். நாம் தவறுகளின் மொத்த உருவமாக ஆகிவிடுவோம்.

நம்முடைய நல்லுறவுக்காக உங்களைப் போல் உண்டா என்று கூறும் ஜால்ரா கூட்டத்தையே நாம் அதிகப்படுத்திக் கொண்டு போனால் அது நாம் உருப்பட வழி செய்யாது.

குறைகளை உணர மறக்கிற எவரும் வாழ்வில் ஒவ்வொரு கூட்டத்திலும் வருந்தியாக வேண்டும். அந்த வருத்தம் மாபெரும் வருத்தமாகத்தானே இருக்க முடியும்! இந்தப் புரியாத்தனத்தை முதலில் விட்டொழிப்போம்.

என்மேல் தப்பு இருந்தா தாராளமாகச் சொல்லுங்க திருத்திக்கிறேன் என்று வாய்திறந்து மற்றவர்களுக்கு வெளிப்படையாக அழைப்பு விடுக்கிற துணிவு நமக்கு இல்லாமல் போனாலும்.

மனதிற்குள் கூட இந்து மனநிலை இல்லாவிட்டால் எப்படி?

**லேனா தமிழ்வாணன்**

# 231 கிலோ கஞ்சா சாவகச்சேரியில் மீட்பு



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கேணியடி வீதியில் வயல்கரைப் பகுதியில் இருந்து பெருந் தொகை கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இரவு 11 மணியளவில் மீசாலை வயற்கரை பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலிலேயே பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 231 கிலோ கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகள் யாழ்ப்பாணம் விசேட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் யாரால் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டது என்பது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60-89)

# இலங்கை மீனவர்கள் 10 பேருக்கும் இந்தியாவில் 23ம் திகதி வரை மறியல்

நாகை மாவட்டத்தில் கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 10 பேரையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சென்னை எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபட்டதாக நாகையில் கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 10 பேரும் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) எழும்பூர் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, கடலோர காவல்படையும், தமிழக பொலிஸாரும் தங்களை கண்ணியமாக நடத்தியதாக இலங்கை மீனவர்கள் நீதிபதியிடம் தெரிவித்தனர். இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட மீனவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி சந்திரன் உத்தரவிட்டுள்ளார். (இ-12)

## மின்னொழுக்கினால் வர்த்தக நிலையத்தில் தீ

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு சந்தியில் அமைந்துள்ள விற்பனை நிலையமொன்றின் களஞ்சியப்பகுதியில் நேற்று காலை மின்னொழுக்கினால் தீ விபத்து ஏற்பட்டது.

மேற்படி விற்பனை நிலையத்தின் களஞ்சியப் பகுதியில் உள்ள குளிர்பானங்கள்(சோடா), களஞ்சியப்படுத்தப்பட்ட பகுதியில் மின்னொழுக்கேற்பட்டு தீப்பற்றி எரிந்துள்ளது. வெப்பம் காரணமாக குளிர்பானப் போத்தல்கள் உடைந்து பானங்கள் சிதறின. இதனால் எழுந்து புகையை அவதானித்த ஏனைய வர்த்தர்கள் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளருக்கு அறிவித்து வீதிப்போக்குவரத்தாளர்களுடன் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இக் களஞ்சியத்தில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-82)

## மீனவர்கள் பிரச்சினை குறித்து

# ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்துக்கு பதிலில்லை

## சார்ள்ஸ் எம்.பி. விசனம்

(கொழும்பு)

தென்பகுதி மீனவர்களால் வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்காக ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிய போதும் தற்போதுவரையில் பதில்லை. அவ்வாறான நிலையில் ஜனாதிபதியிடம் சொல்லுங்கள் அலுவலகத்தை வடக்கில் அமைப்பதற்கு என்ன காரணம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை உற்பத்தி வரி(விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## ஒக்டோபர் புரட்சி ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்டோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் மூன்றாவது ஆய்வரங்கு "ஒக்டோபர் புரட்சியும் தேசிய இன விடுதலையும்" என்ற தலைப்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

தோழர் சோ. தேவராஜா தலைமையில் இடம்பெறும் இவ் ஆய்வரங்கில் ஆய்வுரையினைத் தோழர் சி. சிவசேகரம் வழங்கவுள்ளார்.

தேசிய இன ஒடுக்கலும் முதலாளியமும், சுயநிர்ணய உரிமை, தேசிய இன விடுதலை பற்றிய வர்க்கக் கண்ணோட்டம் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராய்கின்றதான இவ் ஆய்வுரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வமுள்ள அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)

## ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு தூய்மையான அரசியல் அவசியம்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றி பெறச்செய்ய வேண்டுமாயின், தூய்மையான அரசியலே அத்தியாவசியமானது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தூய்மையான அரசியல்வாதி யார் என்றும், அரசியல் கட்சி எது என்றும் மக்கள் மத்தியில் தற்போது கேள்வி எழுந்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (இ-7)

# நூல் வெளியீட்டு விழாவும் இசைமாலை நிகழ்வும்

கவிஞர்,சோதிடர் வி.சிகண்டிதாசனால் ஆக்கப்பட்ட "திருகோணமலை அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அன்னையின் திருவருட்பாட்ல்கள்" நூல் வெளியீடும், இசைமாலை நிகழ்வும் நாளை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருகோணமலை அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான திருமண மண்டபத்தில் நடைபெறும்.

கலாபூஷணம் கனக. மகேந்திரா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையினை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் வி.குணபாலாவும் ஆசியுரையினை திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தர், வேதாகமமாமணி சோ.இரவிச்சந்திரக் குருக்களும் நிகழ்த்துவர்.

தலைமையுரையையும் கன்னியா ஸ்ரீ லலிதாம்பிகை தேவஸ்தானத்தைச் சேர்ந்த சுவாமி ஸ்வஸ்தானந்தாவின் சிறப்புரையினையும் தொடர்ந்து நூல் வெளியிட்டு வைக்கப்படும். முதற்பிரதியை வில்லூன்றி கந்தசுவாமி கோவிலின் பிரதமகுரு சிவஸ்ரீ. சுதாகரக்குருக்கள் பெற்றுக் கொள்ள சிறப்புப் பிரதிகள் வழங்கலும் இடம் பெறும்.

நூலுக்கான நயவுரையினை வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரனும் ஏற்புரையினை நூலாசிரியரும் நிகழ்த்துவர்.

அதனையடுத்து இடம் பெறும் இசைமாலை நிகழ்ச்சியில் மட்டக்களப்பு காயத்திரி கலாசாரபீட சிவயோகச்செல்வர் த.சாம்பசிவம் சிவாச்சாரியார், இசைக்கலாவித்தகி திருமதி.பத்மலோஜினி குணபாலசிங்கம் ஆகியோர் பாட, தேனக கலைச்சுடர் கனக சடாச்சரம் (ஆமோனியம்), கலாவித்தகர் எஸ்.காண்டீபன் (மிருதங்கம்), வித்துவான் எஸ்.திருமாறன்(வயலின்), ஆகியோர் பக்கவாத்திய இசை வழங்குவர்.

நன்றியுரையினை திருகோணமலை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வீ.கோணேஸ்வரன் நிகழ்த்துவார். (இ-3)

# யுத்தத்தின் போது உயிரிழந்த இராணுவ வீரரின் தாய்க்கு வீடு

(கொழும்பு)

வட கிழக்கில் யுத்தத்தின்போது உயிரிழந்த இராணுவ கோப்ரலின் தாய் நோய் வாய்ப்பட்டும் தனக்கென ஒரு வீடொன்று இல்லாமல் கஷ்டப்படுவதை அவதானித்த அமைச்சர் சஜித் பிரேமதாச அவருக்கு வீடொன்றை நிர்மாணித்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்தார்.

இந்த தாய் தொடர்பாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவின் முகநூலுக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்தே அமைச்சர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

## அமைச்சர் சஜித் நடவடிக்கை



புத்தளம் ஆனமடுவில் காணித் துண்டொன்றை வழங்கி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையூடாக 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடொன்றையும் இலவசமாக நிர்மாணிக்குமாறு புத்தளம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# திருக்கோணேஸ்வரர் ஆலய பிரதேசத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்துங்கள்

## டக்ளஸ் எம்.பி. கோரிக்கை

(கொழும்பு )

வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும், அது சார்ந்த 378 ஏக்கர் நிலப்பரப்பையும் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அதேவேளை அம்பாறை மாவட்டத்தில் கல்முனை கரையோரப் பிராந்தியத்தையும், நாவிதன் வெளி படுவான்கரைப் பிராந்தியத்தையும் இணைக்கின்ற கேந்திர முக்கியத்துவம் பெற்ற கிட்டங்கிப் பாலம் பல தசாப்த காலமாக எவ்விதப் புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படாமல் இருந்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர். அதனையும் புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவிடம் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற பாராளுமன்ற சபை அமர்வின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# நடமாடும் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கே.ஆர்.எஸ். கடல் உணவு வர்த்தக நிலையத்தின் அனுசரணையில் மாபெரும் நடமாடும் இரத்ததான முகாம் நாளை 12 ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து பி.ப 2 மணி வரை வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை சிகிச்சை நிலைய மண்டபத்தில் நடைபெறும். இங்கு வழமையாக இரத்ததானம் செய்யும் குருதிக்கொடையாளர்களும் புதிதாக இரத்ததானம் செய்ய விரும்பும் குருதிக் கொடையாளர்களும் சமூகம் கொடுத்து இரத்ததானம் செய்து உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பருத்தித் துறை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியினர் தெரிவித்துள்ளனர். (இ-7)

# சர்வதேச மகளிர் தினம்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு "தமிழ் ஜனநாயக மகளிர் அணியினரது ஏற்பாட்டில் மகளிர் தினம் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு சபை செயலாளர் திருமதி வேதவல்லி செல்வரட்ணம் பிரதம விருந்தினர் உரையினை வழங்கியிருந்தார்.

அத்துடன் பெண்ணிய செயற்பாட்டாளரான செல்வி தம்பிப்பிள்ளை இருதயராணி, மாதர் சங்க செயலாளரும் சமூக சேவையாளருமான திருமதி உதயகாந்த் குருப்பிரியா, மாவட்ட மகளிர் சம்மேளன செயலாளர் திருமதி வரதராஜன் சசிரேகா, மானிப்பாய் மாதர்சங்க தலைவி திருமதி பரஞ்சோதிநாதன் நளினி ஆகியோர் சிறப்புரையாற்றினர். (இ)

# எந்தவொரு கொலைச்சம்பவங்களும் புலிகளால் மேற்கொள்ளப்படவில்லை

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் தகவல்

(மல்லாவி)

கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை கிளிநொச்சி / முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் உட்பட நாட்டில் உள்ள ஏனைய மாவட்டங்களில் எந்தவொரு படுகொலைச் சம்பவங்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் மேற்கொள்ளப்படவில்லை என சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வாய்மூல கேள்வி /பதில் நேரத்தின் போது, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர் பத்ம உதயசாந்த குணசேகர, எழுப்பிய கேள்விக்குப் ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால், 1983, ஆம் ஆண்டுக்குப் பின்னர், கிளிநொச்சி மாவட்டத்தில் கொலை செய்யப்பட்டவர்களது விபரங்களை உதயசாந்த எம்.பி கேட்டிருந்தார்.

அதற்கு பதிலளித்த சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர், கிளிநொச்சி மாவட்டமானது, 1983, ஆம் ஆண்டு முதல் 2009, ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியினுள் அரச நிர்வாகத்துக்கு உட்பட்டிருக்கவில்லை.

யுத்தம் நிறைவடைந்த பின்னர், 2009 ஆம் ஆண்டு முதல் அங்கு பொலிஸ் நிலையங்கள் இயங்கத் தொடங்கியுள்ளன அதன் காரணமாக, 2009, ஆம் ஆண்டுக்கு முன்னர் அங்கு, புலிகளால் கொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பான தரவுகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இதேவேளை, 2009 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, புலிகளால் எந்தவொரு படுகொலைச் சம்பவமும் இடம் பெறவில்லை என்றார்.


இந் நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட படுகொலை தொடர்பில் எழுப்பப்பட்டிருந்த மற்றுமொரு கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், கடந்த 1983, ஆம் ஆண்டு முதல் 2009, ஆம் ஆண்டு வரை, முல்லைத்தீவு மாவட்டத்தில் 190 பேர் மாத்திரமே கொலை செய்யப்பட்டுள்ளனர் என பதிலளித்துள்ளார். (இ-15)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1011

### கபிலர்




### சுரேஸ்




### காண்டீபன்




### யசோ




### நரேன்

வாழ்க்கை ஒரு
வட்டமா,கட்டமா,
செவ்வகமான்னு
தெரியவில்லை...
ஆனால் கஷ்டம்னு
மட்டும் தெரியுது.

### பகீரதன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடமாகாண பெருநிலப்பரப்பின் அபிவிருத்தியில் படிமுறை அமைப்பான நகரங்களின் முக்கியத்துவம்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

வடமாகாணத்தைப் புவியி யல் ரீதியில் மாண் நிலையில் இரண்டு புவியியற் பிரதேசங்களாக இனங்காணலாம். அவை யாவன,

1. யாழ்ப்பாணக் குடாநாடு

2. ஆனையிறவுக்குத் தெற்கே அமைந்துள்ள பெரு நிலப்பரப்பு

இவ்விரண்டுபிரதேசங்களும் புவியியல், பொருளியல், சமூகவியல் பண்புகளில்வேறுபாடானவை. யாழ்ப்பாணக் குடாநாடு சுண்ணக்கற்பாறைகளினதும் தரைகீழ் நீர் வளத்தைக் கொண்டு கூடுதலான மக்களைக்கொண்டு இருக்கின்றது. இதன் மொத்தப் ப்ரப்பு 1030.5 சதுர கிலோ மீற் றராகவும் சதுர கிலோ மீற்றருக்கு 565 பேரை 2012 இல் கொண்டு இருந்தது. இங்கு நிலப் பயன்பாடு மிகவும் செறிவாக வும் சிக்கலாகவும் இருக்கின்றது. விவசாயமும் மீன்பிடியும் முக் கியமாக இருப்பினும் சேவைத் துறைகளில் இருந்து கிடைக்கும் வருமானம் இப்பிரதேசத்தின் பொருளாதார இயக்கத்தில் முக்கியம் பெற்றுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாடு தனித்துவமான புவியியற் பிரதேசமாக இருப்பி னும் இது தன்னுள் தனித்துவமான பிரதேசங்களைக் கொண்டுள்ளது. அவையாவன, பெரிய யாழ்ப்பாணம், தீவுப்பகுதி, வடமராட்சி தென்மராட்சி வலிகா மம்.

| ஆண்டு | குடித்தொகை | குடித்தொகை எண்ணில் | மாற்றங்கள் விகிதத்தில் |
|---|---|---|---|
| 1911 | 51715 | - | - |
| 1921 | 53581 | +1866 | +3.6 |
| 1931 | 51442 | -2409 | -4.5 |
| 1946 | 63600 | +12158 | +23.6 |
| 1953 | 94700 | +31100 | +48.9 |
| 1963 | 163270 | +68570 | +72.4 |
| 1971 | 225462 | +62192 | +38.1 |
| 1981 | 346711 | +121249 | +53.8 |
| 2012 | .468903 | +122192 | +20.1 |

மூலம்: இலங்கைக் குடிக்கணிப்புக்கள்

பெரு நிலப்பரப்பு 7587.1 சதுர கிலோமீற்றர் பரப்பளவானது. இப்பிரதேசத்தின் மேற்கு மற்றும் வடக்குக் கரையோரப் பகதிக ளைத் தவிர பெரும்பகுதிகள் கேம் பிரியன் காலத்துக்கு முன்னைய உருமாறிய பாறைகளாலானது மேற்கு, வடக்குப் பகுதிகளில் வண் டல் மண் மற்றும் சுண்ணாம்பு கற்படிவுகளானது இப்பிர தேச த்தின் தெற்குப் பகுதியும் மத்திய பகுதியும் சற்று உயரமானவை. மேலும் இப்பிரதேசத்தில் 23 ஆற்று வடி நிலங்கள் காணப்படுகின்றன. இவ்வாற்று வடி நிலங்க ளில் முக்கியமானவை. கனகரா யன் ஆறு (906 ச.கி.மீ) பரங்கி ஆறு (842ச.கி.மீ), நெய்ஆறு (456ச.கி.மீ, பேராறு (378 ச.கி.மீ.), மண்டல் கல்லாறு(300 ச.கி.மீ.),அக்கராயன் ஆறு (194 ச.கி.மீ.), மணலாறு(189 ச.கி.மீ.) ஆகியன முக்கிய ஆறுகளாகும். அருவியாற்றின் வடிநிலத்தின் கீழ் பகுதி இப்பகுதிக்குள் அடங்குகின்றது. இவைகளுள்பலபெரியசிறிய நீர்த் தேக்கங்கள் இருக் கின்றன. இவைகளுள் மிக முக் கி யமானவை இரணமடுக்குளம், கட்டுக்கரைக்குளம், வவுனிக் குளம், பாவற்குளம், அக்கராயன் குளம், வியாடிக்குளங்களாகும். மேலும் 3500 நடுத்தர சிறு குளங்கள் இங்கு காணப்படுகின் றன. இப்பிரதேசத்தில் 25000 ஹெக்டர் நிலப்பரப்பு பெரிய நீர்ப்பாசனத்தின் கீழும் 19000 ஹெக்டர் நிலப்பரப்பு சிறு நீர்ப் பாசன திட்டங்கள் மூலம் விவ சாயம் செய்யப்படுகின்றன. மேலும் 25000 ஹெக்டர் நிலப் பரப்பு மானவாரி பயிர்ச் செய்கை நிலமாக இருக்கின்றது.

இப்பிரதேசத்தின் பொரு ளாதாரம் குறிப்பாக நெல், சிறு தானியங்கள், கச்சான், உழுந்துச் செய்கைகளில் தங்கியுள்ளது. மன்னார், முல்லைத்தீவு, கிளி நொச்சி மாவட்ட கரையோரப் பகுதிகளில் மீன்பிடி மிகவும் முக் கியத்துவம் பெற்றுள்ளது. மேலும் நன்னீர் பிடி பெரிய குளங்களை அண்டி முக்கியமாக இருக்கின் றது. மாவட்ட தலைநகர்களில் சேவைத் தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சிகள் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் காட்டு நிலம் 50 வீதத்திற்கு மேல் இருப் பினும் காட்டுப் பொருளாதாரத்தில் உள்ளூர் மக்களின் பங்கும் பணியும்மிகக்குறைவாகும். மேலும் மணல், கல் அகழ்வுகளில் குறிப் பிடத்தக்க மக்கள் ஈடுபட்டுள்ளனர். மணல், மரம் மற்றும் இயற்கை வளங்களின் காப்பு இங்கு சரி யான முறையில் மேற்கொள்ளாததால் சமூக விரோதசக்திகள் இயற்கை வளங்களை சூறையாடுவதாகச் சொல்லப்படுகின்றது. கால்நடை வளர்ப்பும் முக்கியமா கவுள்ளது.

இப்பிரதேசம் பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கியதா கவும் யுத்தத்தால் பெரிய அழி வுகளுக்குட்பட்டதாகவும் பாதிக் கப்பட்ட வறிய மக்களை அதிகம் கொண்டதாகவுமுள்ளது. இப் பிர தேசத்திற்குள் அடங்கும் முல் லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டத்தின் உட் பகுதிகளில் வறுமைக்குட்பட் டவர்களின் விகிதம் உயர்வாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

பெருநிலப்பரப்பின் இன்றைய குடித்தொகை 500,000க்கு மேற் பட்டுள்ளது. அட்டவணை I இல் இப்பிரதேசத்தின் 1911லிருந்து 2012க்கு இடைப்பட்ட குடித் தொகையும் குடிக் கணிப்பு இட மாற்றங்கள் எண்ணிக்கையிலும் விகிதத்திலும் தரப்பட்டுள்ளன.

2012 இல் பெருநிலப்பரப்பின் குடித்தொகை 468903 பேராக இருந்ததுடன் மாகாணத்தின் குடித்தொகையில் 44.6%மாக இருந்தது. பெரு நிலப்பரப்பு 1946 இல் வடமாகாணத்தின் மொத்த குடித்தொகையில் 13.26% தத் தையும் 1953இல் 16.60%தத் தையும் 1963இல் 22.02% தத் தையும் 1971இல் 25.69%தத் தையும் 1981இல் 31.19%தத் தையும் கொண்டு இருந்தது. 1946இல் இருந்து மாகாண குடித்தொகையில் இப்பிரிவின் பங்கு படிப்படியாக அதிகரித்தது. மகிழ்ச்சியைத்தருவதுடன் இவ் வதிகரிப்பு யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து ஏற்பட்ட குடியேற்றமே இதற்கு முக்கிய காரணமாகும். மேலும் 1981க்கு பின்னர் யாழ் ப்பாணக் குடாநாட்டில் மக்கள் தொகை குறைந்ததும் பெருநிலப் பிரிவின் பங்கு அதிகரித்ததற்கு இன்னொரு முக்கிய காரணமாகும். தற்போது மாகாணக் குடித்தொகையில் பெருநிலப்பரப்பு 50%தற்கு கிட்டியதாக இருக்க லாம்.

அட்டவணை II பிரதேசப் பிரிவுகள் அடிப்படையில் 2012க்கு ரிய குடித்தொகையும் குடியடர்த்தி யும் காட்டப்பட்டுள்ளன.

| பிரதேசப் பிரிவு | பரப்பு ச.கி.மீ | குடித்தொகை | குடியடர்த்தி ச.கி.மீ |
|---|---|---|---|
| பூநகரி | 448.75 | 20302 | 45 |
| கரைச்சி | 410.96 | 61484 | 150 |
| கண்டாவளை | 209.70 | 23194 | 111 |
| மன்னார் நகரம் | 266.88 | 51078 | 225 |
| மாந்தை மேற்கு | 658.90 | 14771 | 22 |
| நானாட்டான் | 129.25 | 17891 | 63 |
| முசலி | 474.22 | 8119 | 17 |
| மடு | 512.82 | 7711 | 15 |
| வவுனியா வடக்கு * | 769.6 | 11578 | 15 |
| வவுனியா தெற்கு(சிங்களம்) | 188.5 | 13118 | 69 |
| வவுனியா தெற்கு (தமிழ்) | 609.7 | 117533 | 193 |
| செட்டிகுளம் | 399.1 | 29886 | 75 |
| துணுக்காய் | 347.30 | 9699 | 28 |
| மாந்தை கிழக்கு | 515.0 | 7117 | 15 |
| புதுக்குடியிருப்பு | 371.0 | 23824 | 64 |
| கரைதுறைப்பற்று* | 744.60 | 28973 | 39 |
| ஒட்டுசுட்டான் | 639.00 | 15721 | 25 |
| வெலிஓயா | கிடைக்கவில்லை | 6904 | -- |

*வெலிஓயா பிரிவின் பரப்பு அடங்கும் பிரிவுகள்

கடந்த 5 வருடங்களாக இப்பிரிவுகளில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வரு வதனால் குடித்தொகையில் பெரும்மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதன் உண்மைநிலை 2021குடிக் கணிப்பில் முழுமையாகத் தெரிய வரும்.

மன்னார், வவுனியா தெற்கு (தமிழ்), கரைச்சி ஆகிய பிரிவு களே ச.கி.மீ 150 பேருக்கு மேல் வாழும் பிரிவுகளாகும். முசலி, மடு, மாந்தை மேற்கு, மாந்தை கிழக்கு, வவுனியா வடக்கு, ஒட்டு சுட்டான் பிரிவுகளில் குடியடர்த்தி மிகவும் குறைவாகும். குடியிருப் புக்கள் சிறியனவாகவும் பரவியும் காணப்படுகின்றன. இக்குடியிருப்புக்கள் பலஅடிப்படை வசதிகளின்றி மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளன.

இப்பெரு நிலத்துக் குடியிருப் புகள் குறிப்பாக சிறிய கிராமங் கள் மிகவும் குன்றியும் போக்கு வரத்து வசதிகள் குறைந்தும் காணப் படுகின்றன. அண்மைக் கால த்தில் இப்பகுதிக் கிராமங்கள் மின் சார வசதியைப் பெற்றுள்ளன. இப்பிரதேசப் பாடசாலைகள் குறிப்பாக கிராமப் பாடசாலைகள் சிறப்பாக இயங்கவில்லை. மிகக் கூடுதலான பாடசாலைகள் சிறிய பாடசாலைகளாக இருக்கின்றன. மேலும் ஆசிரியர்கள் பற்றாக் குறைவால் அல்லது இப்பகுதிக ளில் கடமையாற்ற ஆசிரியர்கள் பின்னடிப்பதாலும் கல்வி மேம் பாடு பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளது. மாந்தை கிழக்கு, மாந்தை மேற்கு, துணுக்காய், வவுனியா வடக்கு, பூநகரியில் குறிப்பாக கௌதாரிமுனைப் பிரதேசம், ஒட்டுசுட்டான் பிரிவுகள் கல்வியில் மிகவும் பின்தங்கியுள்ளன. பெரு நிலப் பிரதேசத்தில் வவுனியா நக ரம், மன்னார் நகர், கிளிநொச்சி நகர் மற்றும் முல்லைத்தீவு நகர், முள்ளியவளைப் பகுதிகள் தவிர ஏனைய பகுதிகள் யாவும் மக்கள் வசதியாக வாழ்வதற்கேற்ற நிலை காணப்படவில்லை.

இப்பிரதேசக் குடியிருப்புக் களில் வாழும் மக்கள் சமூக– பொ ருளாதார நிலைகளில் முன் னேற்றம் பெறவும் அவர்களின் வாழ்வுக்குத் தேவையான பொரு ட்கள், சேவைகளைப் பெற இப் பிரதேசத்தில் நகரங்கள் படிமுறை கூட்டமைப்பில் விருத்தி செய்யப்பட வேண்டும். இந்நகர்கள் வெவ்வேறு மட்ட பொருட்கள்/ சேவைகள் வழங்குவதுடன் விவ சாயம் மற்றும் உள்ளூர் வளங்கள் சார் சிறு கைத்தொழில் நிலை யங்களாக வளர்ச்சி பெற வாய்ப் புண்டு. மேலும் இந்நகர்களில் இருந்து கிராமங்களுக்கும் குக் கிராமங்களுக்கு புதுமைகள் பரவவும் அவைகளின் அபிவிருத்தி உதவியாகவும் செயற்படும். பெரு நிலப் பகுதியில் இடஞ்சார் அபி விருத்தி நோக்கில் நான்கு கட்ட மைப்பில் நகரங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்தினதும்/ பெரு நிலப்பரப்பினதும் முதன்மை நகராக மாங்குளம் விருத்தி செய் யப்பட வேண்டும். இது வடமா காணத்தின் மையத்தில் அமைந் திருப்பதுடன் நல்ல போக்குவரத் தையும் கொண்டுள்ளது. மேலும் பெரிய நகராக அபிவிருத்தி செய் வதற்கு போதிய நிலத்தைப் பெறக் கூடியதாக இருக்கிறது. இந்நகர் நிர்வாக மையமாகவும் வர்த்த கம் மற்றும் நிதித்துறையில் முக்கியம் பெற வேண்டும். மாங்குளம் பொரு ளாதார மையமாகவும் சிறிய வளர் ச்சி துருவமாக வளர வாய்ப்பு இருக்கின்றது.

மாங்குளத்தின் விருத்தி குறி த்து பல திட்டங்கள் வகுக்கப்பட் பொழுதும் நீண்ட காலமாக பேசு பொருளாக இருப்பினும் இந்நகரின் கட்டுமான வேலைகள் இன்றும் ஆரம்பமாகவில்லை.

இரண்டாவது நகர படிநிலை யில் மாவட்ட தலைநகரங்களான வவுனியா நகர், மன்னார் நகர், கிளிநொச்சி நகர், முல்லைத்தீவு நகர் ஆகியன துடிப்பான நகர்க ளாக விருத்தி செய்யப்பட வேண் டும். இந்நகர்கள் நிர்வாக செயற் பாட்டுடன் கல்வி, சுகாதாரம், வர்த் தகம் மற்றும் பல்துறைகளில் உயர் மட்ட பொருட்கள், சேவைகளை வளங்கும் ஆற்றல் பெற்று இரு ப்பதுடன் தொழில் வளங்கும் நக ரங்களாக இருக்க வேண்டும். மேலும் செயல் நிலையிலும் பௌதீக நிலையிலும் மேம்படுத்த வேண்டும். கிளிநொச்சி நகரமும் முல்லைத்தீவு நகரமும் முன்னர் பட்டணசபை அந்தஸ்தைப் பெற்று இருந்தன. ஆனால் இன்று இர ண்டும் பிரதேச சபைகளாக இரு க்கின்றன. இந்நகர்களின் வளர் ச்சிக்கு இவ்விரு நகர்களும் நகர சபையாக தரம் உயர்த்தப்பட வேண்டும்.

மூன்றாவது நகர படி நிலை யில் பிரதேச செயலகங்கள் அமைந்துள்ள பூநகரி (வாடியடி) கண்டாவளை– தர்மபுரம், மல் லாவி, பாண்டியன் குளம், நெடுங் கேணி, ஒட்டுசுட்டான், சம்பத் நுவர, அடம்பன், சிலாவத்துறை, நானாட்டான், செட்டிகுளம், புதுக்குடியிருப்பு ஆகியன சிறு நகர் களாக விருத்திசெய்யப்பட வேண் டும். இவைகள் பிரிவு மட்டத்தில் பொருட்கள்/ சேவைகளை வழங் கும் நகர்களாக இருப்பதுடன் பிரிவுகளின் அபிவிருத்தியை முன்னெடுக்கும் மையங்களாக இருக்க வேண்டும். இவைகள் நிர்வாகம், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் மாத்திர மல்ல விவசா யிகளுக்கு தேவை யான உள்ளீடு களை வழங்கும் இடங்களாகவும் உற்பத்திப் பொருட்களை சந்தைப்ப டுத்தும் மையங்களாக விருத்தி செய் யப்பட வேண்டும்.

நான்காவது நிலையில் பல சிறு நகர் மையங்கள் விருத் தியாக்கப் படுவது இப்பிரதேசத் தின் வளர்ச்சிக்கு முக்கியமானதா கும். மேலும் சிறு வர்த்தகம் மற் றும் சேவை வழங்கலில் முக்கி யம் பெறக் கூடிய முழங்காவில், இலுப்பைக்கடவை, விடத்தல் தீவு, முருங்கன், ஆண்டான்குளம், வங்காலை, எருக்கலம்பிட்டி, பேசாலை, தலைமன்னார், பாலம்பிட்டி, பூவரசங்குளம், ஓமந்தை, புளியங்குளம், கனகராயன் குளம், மாமடுவ, ஈரப்பெரியகுளம், அக்கராயன், விஸ்வமடு, முள்ளியவளை, கொக்குத் தொடுவாய் ஆகியன சிறிய நகர்களாக விரு த்தி செய்யப்பட வேண்டும். இச் சிறு நகர்கள் கிராமமக்களுக்கு சேவைகள்/பொருட்கள் வழங்கு வது கிராம அபிவிருத்திக்கு உத வியாக இருக்கும்.

ஐந்தாவது நிலையில் கிரா மங்படுத்தல் குறித்து கவனம் எடுக்க வேண்டும். ஆரம்பப் பாடசாலை, கூட்டுறவுக் கிளைக் கடை, உப தபால் நிலையம் மற்றும் பல சரக்குக் கடைகள் இருப் பின் கிராமத்தின் இயக்கத்திற்கு உதவியாக அமையும். பிரதேச அபிவிருத்தித் திட்டமிடலில் முக் கியமாக இரண்டு இலக்குகள் இருக்கின்றன. ஒரு பிரதேசம் மக்கள் வாழ்வதற்கான வாழ் வாதாரங்களும் வசதிகளும் கொண்டதாக இருக்க வேண் டும். மற்றது அங்கு மக்கள் மகிழ் ச்சியாக வாழக் கூடிய உயர் சமூக விழுமியங்கள் காணப்பட வேண்டும்.

தற்பொழுது பெருநிலப் பர ப்பில் ஒருசில நகர்களைத் தவிர பொதுவாக எல்லாப் பிரிவுக ளும் பல நிலைகளிலும் பின்தங்கி நிற்கின்றன. பொருளாதார நிலையிலும் சமூக நிலை யிலும் பல சவால்களை எதிர் நோக்குகின்றன. யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசமாகவும் இருக்கின்றது. பிரதேச பிரிவுகள் ஒவ்வொன்றும் அவ்வப் பிரதேசப்பிரிவு சூழ் நிலைக்கு ஏற்ற முறையில் தெளிவான தூர நோக்கு பணி குறித்த இலக்குகள் மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ற தந்திரோயங்களை கடைப்பிடித்து மேம்பாடு அடைய வேண்டும்.

பெரு நிலப்பரப்பின் அபிவிருத்தியால் பெருநிலப் பரப்பு மக்கள் மாத்திரமன்றி குடா நாட்டு மக்கள் எதிர் நோக்கும் பல பிரச்சி னைகளுக்கு குறிப்பாக நிலமற்ற தொழிலற்ற மக்களும் நன்மை பெறுவர். இதனால் பெரு நிலப்பகுதி நகரங்கள் நான்கு கட்டமைப்பில் விருத்தி செய்யப்பட வேண்டும். அரசாங்கம் வடக்கு மாகாணசபை உள்ளூராட்சி நிறு வனங்கள் பெரு நில நகரங்கள் விருத்தியில் முக்கிய கவனம் எடுக்க வேண்டும்.

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## வடக்கு சுகாதார அமைச்சர் வேண்டுகோள்

உயிர் அச்சுறுத்தல் ஏற்படக்கூடியதும் பாரதூரமானதுமான டெங்கு நோயை வடக்கில்கட்டுப்படுத்த அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள தொற்று நோய்கள் தொடர்பாகவும் அதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கை தொடர்பாகவும் அவரிடம் கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டுக்கு பிறகு அதாவது முன்னைய காலங்களை விட தற்போது டெங்குநோய் தாக்கம் அதிகமாக உள்ளது. அதாவது 2014 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 544 பேருக்கு நோய் தாக்கம் ஏற்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 552 பேருக்கு நோய்த்தாக்கம் ஏற்பட்டு 3 பேர் உயிரிழந்துள்ளனர். 2016 ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 236 பேருக்கு நோய் தாக்கம் ஏற்பட்டு 2 பேர் உயிரிழந்தனர்.

ஆனால் கடந்த ஆண்டை விட இந்த வருடம் இந்த நோயின் தாக்கம் மிகவும் அதிகரித்துள்ளது. முதல் 2 மாதத்திலே ஆயிரத்து 532 பேர் டெங்கு நோய் தாக்கத்தால் இனங்காணப்பட்டு அதில் இருவர் உயிரிழந்துள்ளனர். அதிலும் யாழ். மாவட்டத்திலேயே ஆயிரத்து 34 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 97 பேரும், மன்னார் மாவட்டத்தில் 229 பேரும், வவுனியா மாவட்டத்தில் 115 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 57 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவை அரச வைத்திய சாலை தரவுகள். ஆனால் தனியார் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்களும் அதிகமாகவுள்ளனர். எனவே குறித்த நோய்த்தொற்று தொடர்பில் சகல தனியார் வைத்திய சாலைகளில் இருந்தும் சரியான தரவுகளை திரட்டும் செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலேயே அதிகளவான டெங்கு தொற்று உள்ள மாவட்டங்களில் வடமாகாணம் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதிலும் யாழ். மாவட்டம் குறிப்பாக இனங்காணப்பட்டுள்ளது.

இது சுகாதார பிரச்சினை மட்டுமல்லாமல் சமூகப் பிரச்சினையாகவுள்ளது. இதை கட்டுப்படுத்த சுகாதார அமைச்சுக்கும் உள்ளூராட்சி அமைச்சுக்கும் பாரிய பொறுப்புள்ளது.

அத்துடன் பொதுமக்கள் முன்னின்று செயற்பட்டால் இந்த நோய் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம்.

எனவே இது தொடர்பாக அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதாவது கழிவகற்றல் சரியான முறையில் இடம்பெறாத காரணத்தால் டெங்கு நோய் தொற்று அதிகரிப்பதற்கு காரணமாகவுள்ளது. எனவே அனைத்து பிரதேசங்களிலும் 4 நாட்களுக்கு ஒருமுறை கழிவகற்றல் கிரமமாக செய்ய வேண்டும். வளப்பற்றாக்குறை காணப்படுகிறது. அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக முக்கிய முடிவு எடுக்கப்பட்டது.

பொதுமக்களால் கைவிடப்பட்ட தனியார் காணிகள் பல உள்ளன. யாழ். மாவட்டத்தில் அதிகளவான காணிகள் பயன்படுத்தாமல் உள்ளது. அந்த காணிகளை உள்ளூராட்சி அமைப்பு இனம் கண்டு பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் பாவனை தடுக்கும் வகையில் வடமாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் பிளாஸ்டிக் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. இளநீர் கோம்பைகள் எடுத்து செல்வதும் பிளாஸ்டிக் கொள்கலன்கள் எடுத்து செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இராணுவ முகாம் மற்றும் பொலிஸ் நிலையங்களை அண்மித்த பகுதிகளின் கழிவகற்றல் முக்கிய பிரச்சினையாகவுள்ளது.

அவர்கள் உரிய முறையில் கழிவுகளை அகற்ற வேண்டிய தேவை உள்ளது. தவறும் பட்சத்தில் ஒத்துழைப்பு வழங்காத பட்சத்தில் சுகாதார வைத்திய அதிகாரிகள் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிலையங்கள் பல அடிப்படை வசதி இல்லாத நிலையில் உள்ளது. எனவே அடிப்படை வசதிகளை சரி செய்து அவற்றை பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பலதரப்பட்ட செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் அனைத்து தரப்பினரும் உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமே இந்த நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மீனவரின் உடலை வாங்க மறுத்து தங்கச்சிமடத்தில் தொடர் போராட்டம்

## மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி







இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மீனவரின் உடலை வாங்க மறுத்து தங்கச்சிமடத்தில் நேற்று முன்தினம் 3 ஆவது நாளாக நடைபெற்ற போராட்டத்தில் மீனவர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி பிரிட்ஜோவுக்கு அஞ்சலி செலுத்தி னர்.

கச்சதீவு அருகே கடந்த திங்கட்கிழமை இரவு இராமேஸ்வரத்தில் இருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டின் போது தங்கச்சி மடத்தைச் சேர்ந்த மீனவர் பிரிட்ஜோ (வயது21) உயிரிழந்தார். ஜெரோன் (வயது27) என்ற மீனவர் காயங்களுடன் இராமநாதபுரம் அரசு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இராமேஸ்வரம் அரசு வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர் பிரிட்ஜோவின் உடலை வைத்தியசாலை அதிகாரிகள் ஒப்படைக்க முயன்றபோது பெற்றோரும், உறவினரும் உடலை வாங்க மறுத்தனர். இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் உடனே விடுதலை செய்ய வேண்டும். மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த செவ்வாய்க்கிழமை தங்கச்சிமடத்தில் தர்ணா போராட்டம் தொடங்கப்பட்டு புதன்கிழமை இரவிலும் நடைபெற்றது.

இதேவேளை கொழும்பில் மீன்வளத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் இலங்கைக்கான இந்திய தூதர் தரன்ஜித் சிங் சாந்து ஆகியோர் தலைமையில் இருநாட்டு உயரதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தையின்போது இலங்கை சிறைகளில் உள்ள 85 தமிழக மீனவர்களையும், இந்திய சிறைகளில் உள்ள 15 இலங்கை மீனவர்களையும் பரஸ்பரம் விடுதலை செய்வதாக அறிவிக்கப்பட்டது.

மூன்றாவது நாளாக நேற்று முன்தினம் தங்கச்சி மடத்தில் மீனவர் பிரிட்ஜோவுக்கு மீனவர்கள்மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தி போராட்டத்தை தொடர்ந்தனர். இந்தப் போராட்டத்தில், கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கை கடற்படையினரை கைது செய்ய வேண்டும். இறந்த மீனவரின் குடும்பத்துக்கு ரூ.ஒரு கோடி இழப்பீடாக இலங்கை அரசிடமிருந்து பெற்றுத் தர வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், கூடங்குளம் போராட்டக் குழு தலைவர் சுப.உதயகுமார், தேசிய சுற்றுச் சூழல் அறக் கட்டளையைச் சேர்ந்த பாத்திமா பாபு ஆகியோர் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

மாணவர்களும் இளைஞர்களும் தமிழக கடலோர மாவட்டங்களில் இருந்து திரளான மீனவர்களும் கலந்து கொண்டனர். (இ-12)



# சிறுவர் அரங்கம்

## புதிதாக வந்த நட்பும், உதவியும்

......வழக்கம்போல மாடுகள் ஒவ்வொரு இடமாக மேய ஆரம்பித்தன. ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த நரி அந்த நாயின் கண்படாத தொலைவில் ஒரு மாடு மேய்ந்து கொண்டு வருவதை கவனித்து மெல்ல அருகில் வந்து நண்பா இந்த காய்ந்த புல்களைத்தான் தினமும் மேய்கிறாயா? என்று கேட்டது. கேட்டது யார் என நிமிர்ந்து பார்த்த மாடு, நரியிடம் என்ன செய்வது இந்த இடங்களில் புற்கள் காய்ந்து விட்டன.

தள்ளி போய் மேயலாம் என்றால் இந்த நாய் விடுவதில்லை. இப்பொழுது கூட உன்னிடம் பேசிக் கொண்டிருப்பதை பார்த்தால் பாய்ந்து வந்து விடும். அது இந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் மேய்ந்தால் ஆபத்து வரும் என்று சதா கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறது. என்ன செய்வது என்று அலுத்துக்கொண்டது.

நீ மட்டும் சரி என்று சொன்னால் இதை விட அழகான பச்சைப்பசேல் என்ற புல்வெளியை காட்டுகிறேன் என்றது, ஐயையோ, நாயார் என்னை விடமாட்டாரே என்று மாடு சொன்னது. அதைப்பற்றி கவலைப்படாதே, நாளை இதே போல் வா, வந்தவுடன் எல்லோரையும் போல மேய்ந்து கொண்டே இந்த இடத்துக்கு வா, உன்னை அங்கு அழைத்துப்போகிறேன், உனக்கு வேண்டியதை மேய்ந்துவிட்டு மாலைக்குள் இங்கு வந்து விடு, என்றது . மாட்டுக்கு ஒரே மகிழ்ச்சி, நாளை பசும்புல் சாப்பிடப் போகிறேன், என்று நினைத்தது.



அன்று மாலையே நரி புலியிடம் போய் நீங்கள் அந்த குழியில் ஒளிந்து கொள்ளுங்கள், அந்த குழியினை இலை தழைகளால் மூடி விடுகிறேன், நாளை அந்த மாட்டை அழைத்து வருகிறேன். அது குழியில் விழுந்தவுடன் நீங்கள் அடித்து சாப்பிட்டு விட்டு மேலே வர இந்த மரக்கிளையை போடு கிறேன் அதில் ஏறி வந்து விடுங்கள்.

நான் இந்த மரக்கிளையில் இறங்கி உள்ளே சென்று மிச்சத்தைசாப்பிட்டுவிட்டு இதே மரக்கிளை வழியாக மேலே வந்து விடுகிறேன் என்று சொல்லியது.

புலியும் அந்த மரக்கிளை வழியாக குழியில் போய் படுத்துக்கொண்டது. நரி மரக்கிளையை வெளியே எடுத்து விட்டு முதலில் இருந்தது போல் இலை தழைகளால் மூடி விட்டது.

தொடரும்...

## 03.2017 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

◆1702 - முதல் ஆங்கில நாளிதழான தெ டெய்லி குராண்ட் (The Daily Courant) லண்டனில் வெளியிடப்பட்டது.

◆1801 - ரஷ்யாவின் முதலாம் பவுல் கொல்லப்பட்டான். அவனது மகன் முதலாம் அலெக்சாண்டர் மன்னனானான்.

◆1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியது.

◆1864 - இங்கிலாந்து ஷெஃபீல்ட் நகரில் இடம்பெற்ற செயற்கை வெள்ளப் பெருக்கினால் 250 பேர் கொல்லப்பட்டனர்.

◆1897 - மேற்கு வேர்ஜீனியாவுக்கு மேலாகப் பறந்த எரிவெள்ளி ஒன்று வெடித்து சிதறியதில் சேதம் ஏற்பட்டது.

◆1902 - காங்கேசன்துறையில் இருந்து சாவகச்சேரி வரையான 21 மைல் நீள புகையிரதப் பாதை அமைக்கப்பட்டது.

◆1905 - காங்கேசன்துறை முதல் மதவாச்சி வரை புகையிரதப் பாதை அமைக்கும் பணி முடிவடைந்தது.

◆1917 - முதலாம் உலகப் போர்: பக்தாத் ஜெனரல் ஸ்டான்லி மோட் தலைமையிலான ஆங்கிலோ-இந்தியப் படைகளிடம் வீழ்ந்தது.

◆1918 - ரஷ்யாவின் தலைநகரம் பெத்ரோகிராட்டில் இருந்து மாஸ்கோவுக்கு மாறியது.

◆1931 - சோவியத் ஒன்றியத்தில் "வேலைக்கும் சோவியத் ஒன்றியத்தைப் பாதுகாக்கவும் ஆயத்தமாயிரு" என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

◆1958 - ஐக்கிய அமெரிக்காவின் B-47 விமானம் அணுகுண்டு ஒன்றைத் தவறுதலாக வீழ்த்தியதில் தெற்குக் கரோலினாவில் பலர் காயமடைந்தனர்.

◆1978 - ஒன்பது பாலஸ்தீனத் தீவிரவாதிகள் இஸ்ரேலில் பேருந்து ஒன்றைக் கடத்தி 34 பொதுமக்களைக் கொன்றனர்.

◆1985 - மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் தலைவரானார்.

◆1990 - லித்துவேனியா சோவியத்திடம் இருந்து தன்னிச்சையாக விடுதலையை அறிவித்தது.

◆1998 - திருகோணமலைத் துறைமுகத்தில் கரும்புலிகள் இலங்கையின் ரோந்துப் படகொன்றை மூழ்கடித்தனர்.

◆2004 - ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் இடம்பெற்ற தொடர் புகையிரதக் குண்டுவெடிப்பில் 192 பேர் கொல்லப்பட்டனார்.

◆2007 - தென் அமெரிக்காவின் வடகிழக்கில் உள்ள கயானா விண்வெளி ஏவுதளத்தில் ஏரியன்-5 ரொக்கெட் ஏவப்பட்டு வெற்றி கரமாக அது இன்சாட்-4B என்ற இந்திய செய்மதியையும் ஸ்கைநெட்-5A என்ற பிரித்தானியாவின் துணைக்கோளையும் சுமந்து சென்றது.

◆2011 - 2011 செண்டை நிலநடுக்கமும் ஆழிப்பேரலையும்: சப்பானின் ஒன்சூ தீவில் வட கிழக்குப் பகுதியில் 8.9 புள்ளிகள் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டு ஆழிப்பேரலையாக உருவெடுத்தது. பெரும் எண்ணிக்கையானோர் உயிரிழந்தனர்.

பிறப்புகள்

◆1863 - ஆன்ட்ரூ ஸ்டோடார்ட், ஆங்கிலேயத் துடுப்பாட்ட வீரர் (இ. 1915)

◆1915 - விஜய் அசாரே, இந்தியத் துடுப்பாட்ட வீரர் (இ. 2004)

◆1922 -அப்துல் ரசாக் உசேன், மலேசியாவின் 2வது பிரதமர் (இ. 1976)

◆1931 - ரூப்பர்ட் மர்டாக், ஆத்திரேலிய-அமெரிக்கத் தொழிலதிபர்.

◆1952 - டக்ளஸ் ஆடம்ஸ், ஆங்கிலேய-அமெரிக்க எழுத்தாளர் (இ. 2001)

◆1985 - அஜந்த மெண்டிஸ், இலங்கைத் துடுப்பாட்ட வீரர்

இறப்புகள்

◆1863 - ஜேம்சு ஓற்றம், ஆங்கிலேய இராணுவ அதிகாரி (பி. 1803)

◆1955 - அலெக்சாண்டர் பிளெமிங், மருத்துவம் அல்லது உடலியங்கியலுக்கான நோபல் பரிசு பெற்ற இசுக்கொட்டியர் (பி. 1881)

◆1965 - ஹேரி அல்தாம், ஆங்கிலேயத் துடுப்பாட்ட வீரர் (பி. 1888)

◆1971 - பைலோ பார்ன்சுவர்த், அமெரிகக் கண்டுபிடிப்பாளர் (பி. 1906)

◆2009 - ஓமக்குச்சி நரசிம்மன், தமிழ்த் திரைப்பட நடிகர்

◆2013 - ஸ்ரீபாத பினாகபாணி, இந்தியப் பாடகர், மருத்துவர் (பி. 1913)

◆2013 - வே. தில்லைநாயகம், நூலகவியலாளர், தமிழறிஞர். (பி. 1925)

சிறப்பு நாள்

◆சாம்பியா - இளைஞர் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 50 | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 | 120 | 160 | 60 |
| தக்காளி | 60 | 40 | 50 | 50 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 70 | 120 | 70 | 80 | 40 |
| கோவா | 40 | 20 | 30 | 40 | 60 | 60 |
| கரட் | 60 | 40 | 60 | 60 | 100 | 50 |
| பூசணி | 60 | 35 | 50 | 50 | 80 | 50 |
| புடோல் | 60 | 40 | 80 | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 100 | 100 | 90 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 80 | 200 | 160 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 100 | 100 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 50 | 60 | 120 | 60 |
| பயற்றங்காய் | 200 | 60 | 80 | 60 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 60 | 80 | 70 | 80 | 60 |
| பீற்றூட் | 50 | 40 | 50 | 60 | 8 | 70 |
| கறிமிளகாய் | 100 | 90 | 140 | 100 | 20 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 400 | 400 | 600 | 400 |
| போஞ்சி | 150 | 60 | 120 | 100 | 200 | 100 |
| கததரிதமபுள்ள | 50 | 40 | 30 | 30 | 30 | 40 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 60 | 50 | 100 | 70 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 20-50 | 50 | 60 | 30-50 | 60 |
| இராசவள்ளி | 300 | 160 | 180 | 180 | 200 | 120 |
| வெங்காயப்பூ | 40 | 40 | 60 | 60 | 100 | 50 |
| முள்ளங்கி | 50 | 30 | 40 | 60 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 60 | 15 | 30 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 50 | 60 | 60 | 60 |

எவனாவது உன்னை ஒருமுறை
காட்டிக்கொடுத்தால் அது அவன் குற்றம்.
- ருமேனியப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தாய்ப் பூனைக்கும் குட்டிப் பூனைக்கும் இரண்டு பாதை வைத்த அறிஞர்

அறிஞர்கள் சிலர் நடந்து கொள்ளும் முறை கண்டு மக்கள் சமூகம் திகைத்ததுண்டு.

இத்திகைப்புக்குக் காரணம் அறிஞர் என்ற பெருமைக்குரியவர்கள் அறியாமையாக நடந்து கொண்டதுதான்.

அறிஞர் ஒருவர் தன் வீட்டில் உள்ள தாய்ப் பூனைக்கும் குட்டிப் பூனைக்கும் சிறு வீடு கட்டினார்.

அதில் இரண்டு பாதைகள் வைத்திருந்தார். ஒரு பாதை பெரியது. மற்றைய பாதை சிறியது.

அதைப்பார்த்த சிலர் ஐயா! ஏன் இரண்டு பாதைகள் என்று அவரிடம் கேட்டனர். அதற்கு அந்த அறிஞர் தாய்ப் பூனைக்கு பெரிய பாதை; குட்டிப் பூனைக்கு சிறிய பாதை என்றார்.

அறிஞரின் பதிலைக் கேட்டவர்கள் திகைத்துப் போயினர். இதென்ன! தாய்ப் பூனை போகின்ற பெரிய பாதையால், குட்டிப் பூனையும் போகும் தானே. இந்த அறிஞருக்கு இது விளங்கவில்லையா? என்று தமக்குள் நினைத்தவர்கள், சிலவேளை அறிஞரிடம் வேறு காரணமும் இருக்குமோ என்று எண்ணியபடி;

ஐயா! தாய்ப் பூனை போகின்ற பாதையால் குட்டிப் பூனையும் போகும்தானே. குட்டிப் பூனைக்கென்று தனியான பாதை எதற்கு என்று கேட்டனர்.

அப்போதுதான் அந்த அறிஞர் விழித்துக் கொண்டார். அட, பெரிய பாதையால் பூனைக் குட்டியும் போகும்தானே!

இவ்வாறாக அறிஞர்களும் சில இடங்களில் அறிவிலிகளாக நடந்து கொள்வதுண்டு.

இது ஒருபுறமிருக்க, இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் பாராளுமன்றில் காணி பற்றி அதிகமாகக் கதைப்பதைக் காண முடிகிறது.

தமிழ் மக்களின் நிலங்களை படையினர் ஆக்கிரமித்து வைத்திருப்பது இன்று நேற்றல்ல.

எனினும் சம்பந்தர் அவர்கள் முன்பு இது பற்றி பாராளுமன்றத்தில் கதைத்தது மிகக் குறைவு.

ஆனால் கடந்த சில தினங்களாக பாராளுமன்றத்தில் சம்பந்தரின் உரை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணி பற்றியதாகவே இருக்கிறது.

இதற்கு என்ன காரணம்.

ஒன்று, கேப்பாப்பிலவு-பிலவுக்குடியிருப்பு மக்களின் தொடர் போராட்டம் வெற்றி கண்டமையால்,

தங்களின் மரியாதை குறைந்து விடுமல்லவா? அதை நிவர்த்திக்க காணி பற்றிக் கதைப்பது.

இரண்டாவது முக்கிய காரணம் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணியைக் கதைப்பதன் மூலம் ஐ.நா சபையில் இலங்கை அரசுக்கு வழங்கப்படும் கால அவகாசத்தை தமிழ் மக்கள் கண்டு கொள்ளாமல் செய்வது.

ஆம், தாய்ப் பூனை செல்லும் பெரிய பாதையால் குட்டிப் பூனையும் செல்லும் என்பதை அந்த அறிஞர் அறியாதிருந்தார் என்பது உண்மையாயினும் எங்கள் பெரியார் சம்பந்தர் அவர்களுக்கு, பெரிய பாதையைத் திறந்தால் சின்னப் பூனையும் போகும் என்பது நன்கு தெரியும்.

ஆம், கால அவகாசம் வழங்காமல் ஐ.நாவின் தீர்மானங்களை இலங்கை அரசு அமுல்படுத்தினால், படையினர் ஆக்கிரமித்துள்ள காணிகள் தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் என்பது சம்பந்தருக்கு நன்கு தெரியும்.

இருந்தும் அரசைக் காப்பாற்றி ஐ.நாவில் கால அவகாசம் பெற்றுக் கொடுப்பதற்காக காணி பற்றிக் கதைத்து கால அவகாசத்தை மறைப்புச் செய்வதே அவரின் நோக்கம். ஆகையால்தான் எங்கள் அறிஞர் இப்படியொரு நாடகம் ஆடுகிறார்.

## யோகா புதிய பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு நல்லூரில்

யாழ்.யோகா உலகம் அமைப்பினர் நல்லூர் தேரடிக்கு அருகே 63 நாயன்மார் குருபூசை மடத்தில்யோகா புதிய பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதற்கான அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை (12.03.2017) மாலை 4.30 மணிக்கு சுதேச மருத்துவர் ஜெ.ஜெயபன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.அகிலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் வருகைப் போதனாசிரியர் எஸ். உமாசுதன் யோகமும் வாழ்வும் எனும் தொனிப் பொருளில் கருத்துரையை வழங்குவார்.

யோகா பயிற்சி நெறி I- காலை 6.மணி தொடக்கம் 7 மணி வரையும் யோகா பயிற்சி நெறி II-மாலை 4.30 மணி தொடக்கம் 5.30 மணி வரையும் யோகா பயிற்சி நெறி III-இரவு 6 மணி தொடக்கம் 7 மணி வரையும் நான்காவது பயிற்சி நெறி - இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரையுமாக 4 பயிற்சி நெறிகள் இரண்டு மாதம் தினமும் நடைபெறும்.

ஆரோக்கியத்திற்கு அவசியமான யோகாசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழிமுறைப் பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசான்களால் நுணுக்கமாக பயிற்றுவிக்கப்படுவதுடன் பெண்களுக்கான யோகா மேலதிக பயிற்சிகள் பெண் ஆசிரியர்களால் வழங்கப்படும். நீரிழிவு நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும். கையேடு சான்றிதழ் வழங்கப்படும்.

ஆர்வமுடைய அனைவரும் இவ் யோகாப் பயிற்சி நெறிகளில் இணைந்து பயனடைய முடியுமென்று யோகா உலகம் அமைப்பினர் அறிவித்துள்ளனர். (இ)

## நூலகவியல் தகவல் விஞ்ஞான டிப்ளோமா ஆரம்ப நிகழ்வு இன்று

இலங்கை நூலகச் சங்கத்தால் நடத்தப்படும் நூலகவியல் தகவல் விஞ்ஞான டிப்ளோமா தரம் 1ற்கான ஆரம்ப நிகழ்வு இன்று 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் (Auditorium) இடம்பெறும் என இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன் அறிவித்துள்ளார்.(இ)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் நெடுந்தீவு பிரதேசம், உடுப்பிட்டி வி.சி, நாச்சிமார் கோவிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வல்வெட்டித்துறை, வெள்ள றோட், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், உடுப்பிட்டி வாசிகசாலை, பொக்கணைசந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பரா வடக்கு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கோம்பாவில், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் நேரியகுளம், இலுப்பைக்குளம், அழகாபுரி, துட்டுவாகை, சின்னசிறப்பிக்குளம், முதலியார்குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம், செட்டிகுளம், செட்டிகுளம் இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், கஜசிங்கபுர இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சாஸ்திரங்கள்

✦ரோமானிய பேரழகியான கிளியோபாட்ரா தன் அழகையும் ஆயுளையும் அதிகரிக்க, தன் மணிமுடியில் காந்தக் கற்களை அணிந்திருந்தார். காந்தத்தில் உள்ள இரண்டு துருவங்களின் இடையே வலது பக்க உடலின் மீது வட துருவத்தையும் இடது பக்க உடலின் மீமு தென்துருவத்தையும் வைக்க காந்த அலைகள் உடலின் இயக்கத்தை ஊக்குவித்து பல்வேறு நோய்களைத் தீர்க்கவும் நோய்கள் வராமல் இருக்கவும் உதவிபுரிகிறது. காந்தத்தின் வடதுருவப் பகுதி நோய்க் கிருமிகளை அழிக்கிறது. தென் துருவம் இரத்த ஓட்டத்தைத் தூண்டுகிறது.

-ரோமானிய சரித்திரம்

## கலா வித்தகர் பட்டமளிப்பு விழா

வட இலங்கை சங்கீத சபையின் 21ஆவது கலா வித்தகர் பட்டமளிப்பு விழா இன்று பிற்பகல் ஒரு மணியளவில் மருதனார் மடத்திலுள்ள வட இலங்கைச் சங்கீத சபையின் தற்பரானந்தன் அரங்கில் சங்கீத சபைத் தலைவர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மகளிர், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் , சிறப்பு விருந்தினர்களாக இராமநாதன் நுண்கலைப்பீட ஓய்வுநிலைப் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் மற்றும் வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் பிறேமாவதி செல்வின் இரேனியஸ், கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற விரிவுரையாளரும் சிரேஷ்ட நடனக்கலைஞருமான லீலாம்பிகை செல்வராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-12)

## கற்கைநெறி

அமெரிக்கன் கோனரால் இலவச கோடிங் கற்கை நெறிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இக்கற்கை நெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 1 மணி முதல் 3 மணி வரை இடம்பெறவுள்ளன.

உங்கள் பதிவுகளை இல 23, அத்தியடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அமெரிக்கன் கோனர் நிறுவனத்தில் மேற்கொள்ள முடியும். மேலதிக தகவல்களுக்கு 021222 0665 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ-3)

## பண்ணிசைப் பயிற்சி

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தால் மாசி மகத் தினமான இன்று தொடக்கம் யாழ். நாவலர் மகா வித்தியாலயத்தில் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்கள் இடம்பெறும்.

வட இலங்கை சங்கீத சபையினதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாட விதானங்களுக்கமைவாக ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ். ஆர்.திருஞானசம்பந்த ஓதுவார் மூர்த்திகளால் பண்ணிசை பயிற்சி வழங்கப்படும்.

சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3 மணி முதல் 4.30மணி வரை மேற்படி வகுப்புக்கள் நடைபெறும். (இ-12)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் கந்தர் மடம் சிவ உதயநாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தினமும் அபிஷேக ஆராதனைகள், வேதபாராயண திருமுறை ஓதலைத் தொடர்ந்து அம்பாள் உள்வீதி வலம் வரும் தெய்வீகக்காட்சியும் இடம்பெறுகிறது.

அந்த வகையில் மாசி மகத்தினமான இன்று காலை 7மணியளவில் தீர்த்தத் திருவிழா இடம்பெற்று மாலை 6 மணியளவில் தீக்குளிப்பும் இடம்பெறும். நாளை ஞாயிற்றுக்கிழமை திருவூஞ்சல் உற்சவமும் இடம்பெறும். (இ-12)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**வாசலில் கோலமிடுவது ஏன்?**

அதிகாலையில் வாசலைப் பெருக்கி சுத்தமாக்கிய பின்பு குளித்துச் சுத்தமாகச் செய்யவேண்டிய ஒரு ஆசாரமாகும் இது.

இதற்கென்று தனிச் சிறப்பு ஒன்றும் இல்லையென்றாலும் இதில் ஒரு உண்மை உள்ளது. மனிதன் என்றும் சக ஜீவராசிகளுக்குக் கடமைப்பட்டவன்.




மனிதன் உணவுக்காகப் பயன்படுத்தும் அரிசியை அரைத்துத் தயார் செய்யும் அரிசிப் பொடியை உபயோகித்துத் தான் கோலமிட்டார்கள். அரிசிப் பொடிக் கோலம் என்றும் இதை அழைப்பார்கள். (இன்றைய காலகட்டத்தில் சந்தையில் கிடைக்கும் செயற்கையாக உருவாக்கப்படும்கோலப்பொடியைத்தான் பெரும்பாலானவர்கள் உபயோகிக்கிறார்கள்.)

'நாம் உணவருந்துவதற்கு முன்பு சில சாதுப் பிராணிகளுக்கு உணவு வைப்பது மனிதனின் கடமையாகும். இது தான் கோலமிடுவதன் மூலம் நாம் அறிந்து கொள்வது. சாதாரண உயிரிகள் கோலமிட்டுள்ள இடத்திற்கு வருவதையோ அங்குள்ள உணவுப் பொருளை உண்பதையோ நாம் காண இயலுவதில்லை. கோலமிடுவதன் மூலம்ஒரு வீட்டின் ஐஸ்வர்யம் பாதுகாக்கப்படுகிறது.

(தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும் அதைப் பின்பற்றிச் செல். கருத்துக்களை வாதத்திற்கு எட்டும் தொலைவரை செலுத்தி முடிவுகளைப் பெறுக.

❖கோழையும் வேடதாரியும் ஆகிவிடாதே.


❖நாம் நலன் நோக்கும் இயல்பை வளர்த்து ஒவ்வொன்றிலும் இருக்கும் நன்மையைக் காண முயல வேண்டும்.

❖நமது உடல்களிலும் மனங்களிலும் உள்ள குறைகளை நினைத்துஉட்கார்ந்து துயரப்பட்டால் நமக்கு அதனால் பயன் ஒன்றும் விளையாது.

❖மாறான நிகழ்ச்சிகளை அடக்குமாறு செய்யும் வீர முயற்சியே நமது ஊக்கத்தை மேல்நோக்கிச் செலுத்தும்.

# தேசிய ரீதியான கராத்தேயில் வெற்றியீட்டிய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு





தேசிய, மாகாண, மாவட்ட ரீதியில் கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற யாழ்மாவட்டத்தை சேர்ந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர். S.S.K.A கராத்தே கழகத்தை சேர்ந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கொழும்புத்துறை ஜெட்லேணஸ் சனசமூக நிலைய கராத்தே பயிற்சிக்கூடத்தில் இடம் பெற்றது. இதில் சாதனை வீரர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர். மற்றும் கழகத்தில் நீண்ட காலமாக கராத்தே கலையைப் பயின்று வந்த பரீட்சையில் (Greding) தேர்ச்சி பெற்ற மாணவர்களிற்கான கறுப்புப்பட்டியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. இந் நிகழ்வில் ஜெட் லேணஸ் நிர்வாகத்தினர், கராத்தே ஆசிரியர்கள், பிரமுகர்கள், சென் சேமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

# வலயப்பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

## வீரகத்திப்பிள்ளை சம்பியன்



(கரணவாய் )

பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியை வீழ்த்தி மீண்டும் சம்பியனாகியது தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்.

வடமராட்சி வலயப்பாடசாலைகளுக்கிடையி லான வலய மட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி (08.03.2017) புதன் கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 16வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டத்தில்தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணியும் பலப் பரீட்சை நடத்தின.

மூன்று செற்களைக் கொண்ட இச்சுற்றுப் போட்டியில் முதல் செற்றை 25:20 என தொண்டைமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம் வெற்றி பெற்றது. தொடர்ந்து இரண்டாவது செற்றில் உடுப்பிட்டி ஆக்ரோசத்துடன் மோதிய போதும் 29:27 என தொண்டைமானாறு அணி 2:0 நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது .இப்பிரிவில் மூன்றாமிடத்தை வல்வெட்டி இ.த.க பெற்றது. (க-60)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

Jaffna King Star விளையாட்டுக் கழகம் நடத்தும் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியானது இன்று ஆரம் பமாகவுள்ளது.

அணிக்கு 9 பேர் 7 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட போட்டிக்கு நுழைவு கட்டணமாக 800 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

தொடர்புக்கு
077 863 4571
076 383 3542
077 893 5373 (க)



வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப்போட்டி புதன் கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையும் களமிறங்கின.

இதில் 3:1 என்ற செற் கணக்கில் வல்வெட்டி இ.த.க பாடசாலை வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தமதாக்கியது. (க-60)

# இளைஞர் விளையாட்டு நிகழ்வு

வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 2017ஆம் ஆண்டுக்கான இளைஞர் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளன.

இதன் முதல் அங்கமாக கிரிக்கெட் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் 05.03.2017 இடம் பெற்றது.

தொடர்ச்சியாக 11.03.2017 இன்று காலை 8.மணிக்கு கரப்பந்தாட்டப் போட்டிகள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும், 12.03.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு உதைபந்தாட்டப் போட்டிகள் இள்வாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளது.

போட்டிக்கான பதிவுகள் போட்டித் தினத்தன்று காலை 8 மணிக்கு அவ் அவ் மைதானங்களில் மேற்கொள்ளப் படவுள்ளதோடு 8.15க்கு போட்டிக்கான நிரல் தயாரிக்கப்பட்டு 8.30க்கு போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

வலி. தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்கள் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும் என்பதோடு போட்டியில் பங்கு பெறுபவர்கள் வதிவிடத்தை கிராமஅலுவலர் மூலமாக உறுதிப்படுத்தல் அவசியமாகும். மேலதிக விபரங்களை வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவரை 077164 1 413 என்னும் இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பெறுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வடமாகாண சம்பியன் பட்டத்தினை வென்றது

## இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம்



நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய Northern Challengers cup உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய இளவாலை யங் கென்றீஸ் விளையாட்டுக்கழகம் 1.0 என்ற ரீதியில் வென்று நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் Northern Challenger பட்டத்தை வென்றதோடு இரண்டு இலட்ச ரூபா பணத்தையும் தட்டிச்சென்றுள்ளார்கள்.

பரபரப்பான முதல் பாதியாட்டம் எவ்வித கோல்களுமின்றி நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தின் 52வது நிமிடத்தில் மதுஷன் கோல் போட்டு அணியினை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.

ஞானமுருகன் அணி பல சந்தர்ப்பத்தில் கோல் போடும் வாய்ப்பினை தவறவிட்டது.

இறு தியாட்ட நேர முடிவில் 01:00 என்ற ரீதியில் வெற்றியீட்டி வடமாகாண சம்பியன் அணியானது இளவாலை யங்ஹென்றிஸ்.

# இளையோருக்கான சதுரங்கப் போட்டி

இலங்கை சதுரங்க சம்மேளத்தின் ஏற்பாட்டில் இளையோர்களுக்கான யாழ். மாவட்ட சதுரங்க தெரிவுப்போட்டிகள் நாளை சனிக்கிழமை, இன்று 12ஆம் திகதி ஞாயிற் நாளை ஆகிய இரு தினங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். இந்துக்கல்லூரியில் இடம் பெறும். 8, 10, 14, 16, 18 வயதுப் பிரிவுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக போட்டிகள் நடத்தப்படும்.

முதல் நாள் அன்று போட்டியாளர்கள் அனைவரும் காலை 8.30ற்கு முன் சமுகமளிக்க வேண்டும். போட்டியாளர்கள் தமக்குரிய விளையாட்டு உபகரணங்களை கொண்டு வருதல் வேண்டும். போட்டிக்கான கட்டணமாக ரூபா 400 அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான பதிவுகள் நாளை சனிக்கிழமை காலை 7 மணி முதல் 8 மணி வரை இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நாடாளுமன்ற அமர்வு 21ஆம் திகதி வரை ஒத்திவைப்பு

நாடாளுமன்ற அமர்வுகளை எதிர்வரும் 21ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவித்துள்ளார்.

சைட்டம் மருத்துவ கல்லூரி தொடர்பிலான ஒருநாள் விவாதம் நேற்றைய தினம் நாடாளுமன்றில் நடைபெற்றது.

இந்நிலையில், கூட்டு எதிர்க்கட்சி ஏற்படுத்திய அமைதியின்மை காரணமாக விவாதத்தை தொடர்ந்து நடத்த முடியாத நிலையில், சபை நடவடிக்கைகளை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

இதேவேளை, கடந்த 8ஆம் திகதியும் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஸ் குணவர்த்தனவால் சபையில் ஏற்பட்ட அமளிதுமளியால் மூன்று தடவைகள் சபை ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தீர்வும் இல்லை; நீதி...

ஐ.நா மனிதவுரிமை பேரவையில் இலங்கை தனக்கான கால அவகாசத்தை பெற்றவுடன், தீர்வும் இல்லை, நீதியும் இல்லை என்ற ஏமாற்றமான நிலைப்பாட்டைத்தான் தமிழ் தரப்பு அடைந்துகொள்ள போகின்றது எனத் தெரிவித்துள்ள தமிழ் சிவில் சமூகத்தினர்,

இலங்கை அரசோடு இணங்கி சாத்தியம் காணமுடியும் என கனவு காண்பவர்களுக்கு, சர்வதேசத்திடம் எமது கோரிக்கைகள் தொடர்பில் பலமாக நின்று அதற்குரிய சூழல் வரும்போது அக்கோரிக்கையை முன்னகர்த்தலாம் என்ற நம்பிக்கை ஏன் வரவில்லை? எனவும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளரான குமாரவடிவேல் குருபரன் ஊடகங்களிடம் மேலும் தெரிவிக்கையில்

இலங்கை மீதான விட்டுக்கொடுப்பு பிரேரணையில் மிகக்குறைந்த பட்சமாக சொல்லப்பட்டிருந்த வெளிநாட்டு நீதிபதிகள், வழக்கறிஞர்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற விடயத்தைக் கூட ஏற்றுக்கொள்ள மாட்டோம் என இலங்கை அரசு மிகத் தெளிவாக கூறி வருகின்றது.

ஆனால் எம்மை பொறுத்தவரையில் சர்வதேச நீதிபதிகள், வழக்கறிஞர்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும்.

எனினும் வெளித்தரப்பின் பங்குபற்றுதலை இலங்கை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு தாம் பொறுப்புக்கூறலில் அக்கறையாக இருக்கின்றோம் என்ற தோற்றப்பாட்டை காட்ட முயற்சித்தார்கள். எனினும் அந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மறுநாளில் இருந்தே அந்த தீர்மானத்திற்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை எனவும், அதில் உள்ளவற்றை தாம் நிறைவேற்றமாட்டோம் எனவும் ஜனாதிபதியும் பிரதமரும் கூறி வருகின்றனர்.

ஜெனிவா கூட்டத்தொடர் நடைபெற்றுகொண்டு இருக்கின்ற போதும் மிகத் திட்டவட்டமாக இலங்கை அரசு கூறியுள்ள நிலையில், கால அவகாசம் வழங்க போகின்றோம் என்று சொன்னால் ஐ.நா மனிதவுரிமைகள் அமைப்பின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குவதாகத்தான் இருக்கும்.

புதிய அரசியலப்பு முயற்சியின் மூலம் தமிழ் மக்களுடைய தீர்வை கண்டடைய போகின்றோம். அந்த அரசியல் தீர்வின் மூலமாக இந்த நிலைமாறு கால நீதியில் சொல்லப்படுகின்ற குற்றங்கள் மீள நிகழாமை என்பதனை அரசியல் தீர்வு மூலம்தான் ஏற்படுத்த முடியும்.

ஆகவே அதற்கு முன்னுரிமை கொடுப்போம். உண்மை, நீதியை கண்டறிவதனை பின்னர் பார்த்துக் கொள்வோம். அதற்காகதான் கால அவகாசம் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சொல்லியிருக்கின்றார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் மங்கள சமரவீரவுக்கு இல்லை. பொறுப்புக்கூறல் என்பது வெளிவிவகாரம் சம்பந்தப்பட்டது என்பதுதான் அவர்களது நினைப்பு.

இதன் இன்னொரு கட்டமாக அரசியல் அமைப்பு தீர்வு முயற்சிகள் நடைபெறுகின்றது. நீதி, உண்மை, என்று கதைத்தால் அரசியலமைப்பு தீர்வு முயற்சிகள் குழம்பிவிடும் என்று கூறுகின்றனர். இது சமாதானமா? நீதியா? வேண்டும் என்று கேட்டது போன்று உள்ளது.

இரண்டில் ஒன்றைத்தான் பெற முடியும் என கூறுகின்றனர். ஆனால் சர்வதேச சட்டத்திலும் அரசியலிலும் சரி இவ்வாறு கேள்வி கேட்பது மிகத் தவறு என சொல்லப்பட்டுள்ளது. சமாதானம் இல்லாமல் நீதி இல்லை. அதேபோன்று நீதி இல்லாமல் சமாதானம் இல்லை.

இலங்கையின் இந்த அணுகுமுறை முறை சர்வதேசத்திடம் எடுபடாமல் போக, அரசியல் அமைப்பு முயற்சிகள் நடைபெறுகின்றன. இதன்மூலம் குற்றங்கள் மீள நிகழாமைக்குரிய பொறிமுறையை, தீர்வை கொண்டுவரும். ஆகவே நீதியை இப்போது கேட்க வேண்டாம் என இலங்கை அரசு கூறுகின்றது. இந்த பொருத்தமற்ற தன்மையை தான் தமிழ் தலைவர்களும் கொண்டுள்ளார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றது.

புதிய அரசியலமைப்பில் ஒற்றையாட்சி, பௌத்தத்திற்கு முன்னுரிமை, 13ஆம் திருத்தத்திற்குள்தான் தீர்வு என ஜனாதிபதியை தலைமையாக கொண்டுள்ள சிறிலங்கா சுதந்திர கட்சி தீர்மானித்துள்ள நிலையில்,

புதிய அரசியலமைப்பில் எவ்வாறு நம்பிக்கை வைப்பது? ஆனால் ஜெனிவாவில், அரசியலமைப்பு தீர்வு முயற்சிகள் நடைபெறுகின்றது. நீதி பொறுப்புக்கூறல் என்று கதைத்து அதனை குழப்ப வேண்டாம் என கூறி கால அவகாசத்தை பெற்றவுடன் தீர்வும் இல்லை. நீதியும் இல்லை என்ற நிலைப்பட்டைதான் தமிழ் தரப்பு அடைந்துகொள்ள போகின்றது.

மேலும் இரண்டு வருட கால அவகாசத்தை வழங்காவிட்டால் ஐ.நா பாதுகாப்பு சபை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிடம் இந்த விடயத்தை ஒப்படைப்பது என்பது சாத்தியமானதா? ஆகவே சாத்தியமானதை கதையுங்கள்,

சாத்தியத்தை பற்றி பேசுபவர்கள் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்பட்டால் முறையான கலப்பு பொறிமுறை ஒன்று அமைக்கப்படுமா? என்பது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும். காலஅவகாசம் கொடுத்தால் பெரும்பான்மையான நீதிபதிகள் வழக்கு தொடுநர்கள் சாத்தியமா என்பது பற்றி தெளிவுபடுத்த வேண்டும்.

சர்வதேச நாடுகளின் சாத்தியங்களை பற்றி நாம் கதைத்தால், ஒன்றுமே எம்மால் செய்ய வேண்டியிருக்காது. எல்லாவற்றையுமே அவர்களிடமே விட்டுவிடலாம். நீதிக்கான தேடலும் அவசியமில்லை. கால அவகாசம் தேவை என சர்வதேசம் தீர்மானித்திருக்கலாம்.

ஆகவே அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்று நாங்களும் அந்த தீர்மானத்தை எடுப்பதா? அல்லது கால அவகாசம் கொடுத்தாலும் இது நடக்காது என பூரணமாக தெரிந்த சமூகம் தொடர்ச்சியாக ஒரே கோரிக்கையை முன்வைத்துள்ளது என வலியுறுத்தும் வகையில் நாங்கள் செயற்படுவதா? என்பது முக்கியமாகும்.

சர்வதேசத்திலேயோ அல்லது உள்ளூரிலேயோ எது சாத்தியம் என்பது நாங்கள் முயற்சி செய்வதில்தான் இருக்கின்றது. முயற்சித்தால்தான் மாற்றம் வரும். இலங்கை அரசோடு இணங்கி சாத்தியம் காணமுடியும் என கனவு காண்பவர்களுக்கு, சர்வதேசத்திடம் எங்களது கோரிக்கைகளில் பலமாக நின்று அதற்குரிய சூழல் ஒன்று வரும் போது எமது கோரிக்கையை முன்னகர்த்தலாம் என்ற நம்பிக்கை ஏன் வரவில்லை?

எங்களுக்கு இலங்கை அரசின் மீதும் சர்வதேசத்தின் மீதும் நம்பிக்கை இல்லை. எமது மக்களுக்கு எதன் மூலமாக நீதி கிடைக்கும் என்பதில் தெளிவாக இருக்கின்றோம். அது உள்ளக பொறிமுறை மூலமாக வராது. கலப்பு பொறிமுறை என்று இரண்டு வருடம் ஏமாற்றிவிட்டார்கள்.

ஆக எங்களுக்கு சர்வதேச பொறிமுறை ஒன்றின் ஊடாகத்தான் எமக்கு நீதி கிடைக்கும். அதில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம் என சட்டத்தரணி குருபரன் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் எஸ்.சிவகாந்தன், நிறைவேற்று குழு உறுப்பினர் வணபிதா ரவிச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர். (செ-4,9)

## அந்தோனியார் ஆலய திருவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

அந்தவகையில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து செபமாலை, திருச்சிலுவைப்பாதை, திருப்பலி, நற்கருணை ஆசீர், அந்தோனியாரின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

யாழ் ஆயர் வணக்கத்துக்குரிய ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பித்து திரு நாள் திருப்பலி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (செ-9)

## தமிழ்த் தேசியக்...

பெற்றுக்கொண்டிருக்கும் நிலையில். கடந்த 2015ஆம் ஆண்டு கொண்டு வந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் 2 ஆண்டுகள் கால அவகாசம் கோரியுள்ளது.

இதற்கு த.தே.கூட்டமைப்பைச் சேர்ந்த பலதரப்பட்டவர்கள் எதிர்ப்பு வெளியிட்டு மனித உரிமைகள் பேரவைக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளதோடு, கட்சியின் தலைமை உள்ளிட்ட மறு தரப்பினர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்த மனு தொடர்பில் கூட்டமைப்பினரிடையே அதியுச்ச கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளமையும் பகிரங்கமாகவே வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையிலேயே கூட்டமைப்பின் வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (செ-11)


# மரண அறிவித்தல்

## துரைசிங்கம் தனபாலசிங்கம்

**(ஓய்வுபெற்ற எழுதுநர், யாழ் கல்வி வலயம், அகில இலங்கை சமாதான நீதிவான் (J.P), விசாரணை அலுவலர், இலங்கை மனித உரிமை அமைப்பு - யாழ்.மாவட்டம்)**



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய துரைசிங்கம் தனபாலசிங்கம் கடந்த 09.03.2017 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - சேதுப்பிள்ளை (ஓய்வுபெற்ற சிங்கப்பூர் பென்சனியர்) தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் தவரஞ்சிதமலரின் (ஓய்வுபெற்ற எழுதுநர்-யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) அன்புச் சகோதரனும் புவனசிங்கம் (கனடா), கிருஸ்ணசிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமுதாவின் (கனடா) மாமனாரும் குமாரதாசனின் (ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) அன்பு மைத்துனரும் அனோச் (கனடா), அபர்னா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் கோப்பாய் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவலர் பாடசாலை வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(8173)

தகவல்:
த. புவனசிங்கம்
(மகன் - கனடா)

## சிறுவன் ஒருவன்...

தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி அன்ரலா வின்சன் தயான் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

தடயவியல் பொலிஸார் தடயங்களை பதிவு செய்ததுடன் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)

## பட்டதாரிகளின்...

கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வடக்கு மாகாண வேலையில்லாப்பட்டதாரிகளின் பிரதிநிதிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்க ளுக்குமிடையிலான விஷேட சந்திப்பு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் வேண்டுகோளுக்கிணங்க நேற்று வெள்ளிக்கிழமை காலை 9:30 மணியளவில் அலரி மாளிகையில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் பட்டதாரிகள் சார்பில் 6 பிரதிநிதிகளும், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான அஸ்மின், சுகிர்தன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இச் சந்திப்பில் பட்டதாரிகள் தம்முடைய பிரச்சினைகளையும் நிலைமைகளையும் தமது கோரிக்கைகளையும் பிரதமரிடம் முன்வைத்தனர். யுத்தகாலத்தில் உயர்தரக் கல்வியை மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் தாம் மேற்கொண்டதனையும், தமது குடும்பத்தார் பல்வேறு சிரமங்களோடே தம்மை கல்வி கற்க வைத்தமையினையும் இன்றைய திகதியில் நாம் அரச துறை மற்றும் தனியார் துறைகளில் வேலையில்லாதவர்களாக அன்றாடம் கூலி வேலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் தமது நிலைமைகளை பிரதமரிடம் முன்வைத்தனர்

இதன்போது வடக்கு மாகாணம் மாத்திரமல்ல கிழக்கு மாகாணத்திலும் பட்டதாரிகள் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள். வடக்கு கிழக்கிலே தனியார் தொழில்வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன, யுத்தத்திற்குப் பின்னரான நிலைகளை சீர் செய்யும் நோக்கில் பட்டதாரிகளின் கோரிக்கைக்கு பிரதமர் விஷேட கவனம் செலுத்த வேண்டும் எமது வடக்குக் கிழக்குப் பட்டதாரிகள் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நிலவும் தமிழ் மொழிரீதியான வெற்றிடங்களை நிரப்புவதற்கும் தயாராகவே இருக்கின்றார்கள் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார்.

நேற்றுமுன்தினம் மாகாண சபையிலே அவைத் தலைவர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் அடங்கிய குழுவினருக்கும், பட்டதாரிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் விஷேட சந்திப்பு இடம்பெற்றது. அச்சந்திப்பில் மாகாண திணைக்களங்களில் இருக்கின்ற வெற்றிடங்களை உடனடியாக பட்டதாரிகளுக்கு வழங்க முடியுமானவற்றை வழங்க ஆவண செய்தல் என்ற தீர்மானம் எட்டப்பட்டது, அதற்கு பிரதமரின் உதவிகள் அவசியப்படுகின்றன, அத்தோடு புதிய வேலைவாய்ப்புகள் குறித்து ஆராய்தல் அவசியமாகும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.

இக்கோரிக்கைகளுக்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

உங்களுடைய கோரிக்கைகள் நியாயமானவை, அதனை நான் புரிந்துகொள்கின்றேன், ஏற்றுக்கொள்கின்றேன். இது உங்களுடைய பிரச்சினை மாத்திரமல்ல, மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய எல்லா மாகாணங்களிலும் இதே நிலைமை காணப்படுகின்றது. பெரிய நகரங்களைத் தவிர ஏனைய எல்லா இடங்களிலும் தனியார் வேலைவாய்ப்புகள் இல்லாத நிலைமை பரவலாக இருக்கின்றது. ஆனாலும் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட உங்களுக்கு நான் விஷேட கவனத்தைச் செலுத்துவேன். நாடு கடன் சுமையால் அவதியுறுகின்றது, நாட்டின் சொத்துக்களை விற்றுத்தான் கடன்களை அடைக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம், என்றாலும் உங்களது கோரிக்கைகளை நான் ஏற்றுக்கொள்கின்றேன், என்னால் செய்ய முடியுமான உச்சஅளவை நான் நிச்சயமாக உங்களுடைய விடயத்திலே செய்கின்றேன். முதற்கட்டமாக மாகாணத் திணைக்களங்களில் இருக்கின்ற வெற்றிடங்களைத் துரிதமாக பூரணப்படுத்த முயற்சிக்கின்றேன், அதற்கு குறைந்தது மூன்று வாரங்கள் எமக்குத் தேவைப்படும். அதேபோன்று மத்திய அரச திணைக்களங்களில் புதிதாக வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடியுமா என்றும் நான் ஆராய்ந்து பார்க்கின்றேன். சுற்றுலாத்துறை முன்னேற்றமடைந்து வருகின்றது. தமிழ் நாட்டிய, நாடக கலைஞர்களை அதற்குப் பயன்படுத்த முடியும், அவ்வாறானவர்கள் இருப்பின் அவர்களை சுற்றுலாத்துறைத் திணைக்களங்களின் கீழ் உள்ளீர்க்க முயற்சிக்கலாம். எது எவ்வாறாயினும் அரச நியமங்களைக் கடைப்பிடித்து உங்களுக்கான தீர்வுகளைத் துரிதமாக நான் தருவதற்கு முயற்சிக்கின்றேன். நம்பிக்கையோடு இருங்கள், உங்களுக்கு நான் உதவுவேன் என்று பிரதமர் ரணில் பட்டதாரிகளிடம் தெரிவித்திருந்தார். (செ-11)

## மனித உரிமைகளை...

கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்க வேண்டுமானால் நீதிபதிகள் உயர்ந்த குணங்களுடன் செயல்படுவது அவசியமென்று அவர் தெரிவித்தார்.

அரசியல் சாசனம் மற்றும் சட்டத்தை காக்க சகல நீதிபதிகளும் கடமை பெற்றுள்ளதாக தெரிவித்த பிரதம நீதியரசர். இதன் மூலம் மாத்திரமே பொது மக்கள் நீதிமன்றங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை பாதுகாக்க முடியுமென்று கூறினார்.

வழக்கு விசாரணைகளின் போது ஏற்பட்டுள்ள தாமதங்களை தடுக்க உச்ச நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டுமென்று கூறிய பிரதம நீதியரசர் வழக்கு விசாரணைகளின் போது புதிய தொழில்நுட்ப விதிமுறைகளை பயன்படுத்துவது அவசியமென்று தெரிவித்தார்.

அதேபோன்று வழக்கு விசாரணைகளை தாமதப்படுத்த காரணமாகவுள்ள சில சட்ட விதிமுறைகளுக்கு திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அவர் மேலும் தெரிவித்தார் (செ-11)

## கனடாவிலிருந்து...

பரிதாபமாக உயிரிழந்தவராவார்.

கடந்த வாரம் தனது இரு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு மேற்படி பெண் கனடா நாட்டில் இருந்து ஊர்காவற்துறைக்கு வந்திருந்தார். மீண்டும் நாடு திரும்புவதற்காக இருந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை பொருட்கள் கொள்வனவு செய்ய தனது மாமனாருடன் மோட்டார் சைக்கிளில் யாழ்.நகருக்கு வந்து மீண்டும் ஊர்காவற்றுறைக்கு திரும்பிக்கொண்டிருந்தார்.

இதன் போது இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளுக்கு முன்னால் சென்ற உழவு இயந்திரம் எந்த சமிஞ்ஞை ஒளியும் இல்லாமல் பயணித்துள்ளது.

திடிரென வலது பக்கம் திரும்ப முற்பட்டுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் உழவு இயந்திரத்துடன் மோதுண்டு தூக்கி வீசப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் எதிரே வந்த கார் சடுதியாக மேற்படி பெண் மீது ஏறியுள்ளது. வயிற்றில் பலத்த காயங்களுக்கு உள்ளான அவர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் நேற்றைய தினம் அதிகாலை சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார். மேற்படி குடும்ப பெண்ணுக்கு எட்டு மற்றும் மூன்று வயதில் இரு குழந்தைகள் உள்ளனர். இம் மரணம் தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்திய சாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(செ-9,30)

## ஐ.நாவுக்கான...

சியல் கட்சிகள் எனப் பலரும் தமது கையொப்பங்களை இட்டும் கால அவகாசம் வழங்கப் படக்கூடாது என்பதை பலமாக வலியுறுத்தியும் வருகின்றனர். (செ)

## தமிழக மீனவர்கள்...

தரவிட்டுள்ளது.

விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் நேற்றைய தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இன்று அல்லது நாளை தமிழகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கடற்படையினரால் தமிழ மீனவர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை இரவு சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு, தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக தொடர்ந்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் நிலவும் இந்த பதற்ற நிலையை தணிப்பதற்கு இந்திய-இலங்கை சிறைகளி லுள்ள மீனவர்களை விடுவிப்பது என இரு நாட்டு அதிகாரிகளும் தீர்மானித்தனர்.

இதனைத் தொடர்ந்து, முதற்கட்டமாக யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 53 பேரை விடுதலை செய்ய ஊர்க்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (செ-11)


AUTO CAD



Specially Designed For:
Engineering, Architecture Students
Draught, Technical Personnel
Surveyors (சி-7776)

Level 1.Elementary Draughting,
Level 2.Advanced Draughting & Visualizations(3D).

பொறியியற்பீடத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு அத்தியவசியமானது.

New Batch start on :- 18.03.2017

உங்கள் தேவைக்கேற்ப வரையறையற்ற செய்முறை பயிற்சி நேரம்

iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 , 021-7306000

காணி விற்பனைக்கு

யாழ்.இந்துக் கல்லூரி ஒழுங்கையில் 50 மீற்றர் தூரத்தில்

தொடர்பு:-0773146394 (8148)

காணி, வாகனம் விற்பனைக்கு

முல்லைத்தீவு நகரில் இருந்து 1KM தூரத்தில் (செல்வபுரத்தில்) 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. அத்துடன் 1109 பட்டா இன கன்டரும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0766435937 (சி-7773)

PERSONAL CLASS

இரசாயனவியல்
சி.அங்கதன் B.Sc (Chem.Spl)
37 வருட வினாத்தாள்கள்
கற்பிக்கப்படும்

தொடர்பு:-0776189610

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

உங்கள் அனைத்து விதமான பொதிகள் மற்றும் கடிதங்களை நம்பிக்கையுடனும், துரிதமாகவும்,குறைந்தளவு கட்டணங்களுடன் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட நாடுங்கள். (சி-7768)

யாழ்ப்பாணம் | மீசாலை | திருகோணமலை | மல்லாவி
முல்லைத்தீவு | கிளிநொச்சி | கனகராயன்குளம் | வவுனியா

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கில்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (சி-7740)

V2 TRAVELS

தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி



அதிஸ்ட எண் - N/13JAN17/1371/152
சி.தேவராசா
கரணவாய், கரவெட்டி
சிங்கப்பூர் 1 பவுண்
இவர் 13-01-2017 அன்று எமக்கூடாக 1கிலோ பொதி ஜெர்மனிக்கு அனுப்பினார் (சி-7747)
நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல
வாய்ப்புக்களுக்கு: 0768226240

கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு

இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்

வங்கி ஊழியர்கள், அரச ஊழியர்கள், தாதியர், உயர் பதவியில் இருப்பவர்கள், நிரந்தர வேலை செய்பவர்கள், தற்காலிக உத்தியோகத்தர்கள் மற்றும் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் உள்ள வர்த்தகர்கள் என அனைவருக்கும் வழிகள் பல உண்டு. (சி-7763)

கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் Immigration அலுவலரால் பூரணவிளக்கம் அளிக்கப்பட்டு உங்கள் சந்தேகங்களுக்கு பதிலும் அளிக்கப்படும்.

கருத்தரங்கு
நாள்-12-03-2017
ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி

IMMIGRATION APPROVED Canada
V2 Travels

முற்பதிவுகளுக்கு - 0768226236
49 A சப்பல் லேன்
யாழ்ப்பாணம்

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் பொதுக்கூட்டம்-2017

மேற்படி ஆலயத்தின் 2017ஆம் ஆண்டின் பரிபாலன சபை தெரிவிற்கான பொதுக்கூட்டம் 2017.03.26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மணிமண்டபத்தில் நடைபெறும். கௌரவ அங்கத்தவர்கள், ஆயுட்கால அங்கத்தவர்கள் 2017ஆம் ஆண்டிற்கான அங்கத்துவத்தை புதுப்பித்தவர்கள் அனைவரும் சமுகமளிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

S.P.சாமி — தலைவர்
09.03.2017
C.M.வரதராஜா — செயலாளர் (8158)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.